# ஜம்பை - ஓர் ஆய்வு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நூலகம்
நூல் சேர்க்கை
எண்.
சென்னை-600 008

# ஜம்பை - ஓர் ஆய்வு


ஆசிரியர்

கா. செல்வராஜ், எம்.ஏ.



பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையர்



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

2005

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Jambai - Oor Aayvu** |
| Author | : | K. Selvarasu |
| Copy Right | : | T.N. State Dept. of Archaeology |
| Subject | : | **History** |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. & Year | : | 156, 2005 |
| Type Point | : | 11 |
| No. of Pages | : | 135+8 |
| Paper Used | : | 100 Gsm Maplitho |
| Type Setter | : | Dev Designing & Printing |
| Printer | : | Pavai Printers<br>17, Jani Jan Khan Road<br>Chennai - 14 |
| Publisher | : | **State Dept. of Archaeology**<br>Tamizh Valakam, Halls Road,<br>Egmore - 600 008. |
| Price | : | Rs.30/- |

# பதிப்புரை

இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுகள் தமிழகத்தில் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை, இயற்கையான குகைத்தளங்களிலும், பாறைகளிலும், கோயிற் சுவர்களிலும், தனிக் கற்களிலும், மடைகள், தூம்புகள் ஆகியவற்றிலும் பொறிக்கப்பட்டுக் காணக்கிடக்கின்றன. அவை தமிழ், கிரந்தம், வட்டெழுத்து ஆகிய பல்வகை எழுத்துகளில் எழுதப்பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் அவற்றைப் படிக்கவும், புரிந்து கொள்ளவும் முடிந்தோர் மிகக் குறைந்தனர். தமிழக வரலாற்றுக்கு அடிப்படையாய் அமையும் கல்வெட்டுகளின் இன்றியமையாத தன்மையை உணர்ந்த தமிழக அரசு,1973-74ல் தொல்லியல் துறையில் 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' ஒன்றினை நிறுவியது. ஆண்டுதோறும், முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு அனைத்து வகைக் கல்வெட்டு எழுத்துகள், கோயிற்கலைகள், வரலாறு ஆகியவை கற்பிக்கப்பட்டு, ஓராண்டு முடிவில் இறுதித் தேர்வின் ஒரு தாளாக, தாம் கற்றவற்றைப் பயன்படுத்தி ஒரு கோயில் பற்றிய ஆய்வு ஏடொன்று தயாரித்துச் சமர்ப்பித்தலும், பாடத்திட்டத்தின் ஒரு பகுதி ஆக்கப்பட்டது. இதுவரை, 163 மாணவர்கள் இவ்வகையில் ஆய்வு செய்து ஆய்வேடுகளைச் சமர்ப்பித்துள்ளனர். அவற்றுள் ஏழு இதுவரை நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. அந்த வரிசையில் தற்போது "ஜம்பை-ஓர் ஆய்வு" என்னும் இந்நூல் துறையால் வெளியிடப்படுகிறது.

கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்கள் தம் கல்விக் காலத்தின்போதும், தொடர்ந்தும் பல்வேறு கல்வெட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆர்வமும், திறமையும் உடையவர்களாகத் திகழ்கின்றனர். பல்வேறு புதிய கல்வெட்டுகளையும் கண்டறிந்துள்ளனர். அவற்றுள் தலையாய ஒன்றாக, தமிழகக் கல்வெட்டு, இலக்கிய, வரலாற்று அறிஞர்களால் ஒருமனதாகக் கருதப்பட்டது, ஜம்பையில் கி.மு.3ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த அதியமான் நெடுமான் அஞ்சியின் 'சதியபுதோ' என்ற அடைமொழியோடு கூடிய ஒருவரிக் கல்வெட்டினைக் கண்டறிந்ததாகும். சதியபுதோ என்ற இந்த அடைமொழி மௌரிய அரசன் அசோகனின் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. இக்கல்வெட்டினைக் கண்டறிந்ததன் மூலம் அச்சொல் அதியமான்களைத்தான் குறிக்கிறது என்பது உறுதி பெற்றது. இந்த நூலாசிரியரும், 1980-81ஆம் ஆண்டின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவருமான திரு. க. செல்வராஜ் அவர்கள் தம் ஆய்வின்போது கண்டறிந்ததே இக்கல்வெட்டாகும்.

மேலும் ஜம்பையில் புதிய கற்கால முதல், அண்மைக் காலம் வரையிலான பல்வேறு வரலாற்றுத் தடயங்கள் கிடைக்கின்றன. சங்க காலத்தில் மலையமானின் தலைநகரான திருக்கோயிலூருக்கும், அதியனின் தலைநகரான தருமபுரிக்குமிடையே இருந்த பெருவழியில், ஜம்பை அமைந்திருந்தது. ஜம்பையின் பண்டைய கல்வெட்டுகள் 'வாளையூர் நகரம்' என்று அதனை வணிக நகரமாகவே அறிமுகம் செய்கின்றன. தொடர்ந்து எல்லைப் பகுதியாதலின் பேரரசுகளின் கண்காணிப்பின்கீழ் பெரும்பாலும் சிற்றரசுகளின் ஆளுகையில் ஜம்பை இருந்துள்ளது. காவல் கருதி, இங்கு கோட்டையும் அகழியும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவற்றின் தடயங்களை இவ்வூரில் இன்றும் காண்கிறோம்.

பல்வேறு வகையாலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இவ்வூர் பற்றிய ஆய்வேட்டினை நூலாக வெளியிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அதியமான் கல்வெட்டைக் கண்டுபிடித்து இவ்வாய்வேட்டையும் எழுதிய திரு. கா. செல்வராஜ் அவர்களுக்கும், ஆய்வேட்டினை நூலமைதியில் ஆக்கித் தந்த இத்துறை உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர் முனைவர் நா. மார்க்சிய காந்திக்கும் பாராட்டுகள். இந்நூல் ஆய்வாளர்களுக்கும், வரலாற்று மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயன்தரும் என நம்புகிறேன்.

சென்னை - 113
18.1.2005

சிறப்பு ஆணையர்

## பொருளடக்கம்


1. அறிமுகம் 1

2. பண்டைய வரலாறு 4

    வரலாற்றுக்கு முந்தைய காலம்

    சங்க காலம்

3. நாடும் ஊரும் 14

4. கல்வெட்டுகள் 18

    சோழர்கள்

    கோப்பெருஞ்சிங்கன்

    பாண்டியர்கள்

    விஜய நகர மன்னர்கள்

    நாயக்கர்கள்

    சிற்றரசர்கள்

    பெயர்களற்ற மற்றும் இதர கல்வெட்டுச் செய்திகள்

    அளவுகளும் வரிகளும்

    திருவிழாக்கள்

6. ஓலைச்சுவடிகள் 64

7. கோயிலும் புராணமும் 66

8. புதிதாக அறியப்பட்டவை 69

9. கட்டடங்களும் கலையும் 71

10. தொல்லியல் - புதைந்த அரண்மனை 120

11. திருவிழாவும் தெருக்கூத்தும் 125

# அறிமுகம்

'ஜம்பை' என்னும் சிற்றூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் வட்டத்தில் அமைந்துள்ளது. திருவண்ணாமலையிலிருந்து கிழக்கே 28 கல் தொலைவிலும் திருக்கோவிலூரிலிருந்து மேற்கே 20 கல் தொலைவிலும் அமைந்துள்ளது. திருக்கோயிலூர் - திருவண்ணாமலை வழித்தடத்தில் உள்ள மணலூர்ப் பேட்டையிலிருந்து 4 கல் தொலைவிலுள்ளது. ஜம்பை தென் பெண்ணையாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இதன் அருகில் சிறு சிறு குன்றுகளும், மலை, பாறைகளும் சூழ்ந்து இயற்கை எழிலுடன் காட்சியளிக்கிறது. சிறு சிறு ஏரிகளும் அமைந்துள்ளன. 'சம்பு' காடு என்னும் சிறு காடும் உண்டு. மழைக்காலத்தில் சம்பு எனும் கோரைகள் தழைத்துப் பெருங்காடாகக் காட்சியளிக்கும்.

ஜம்பை பழம் பெருமை வாய்ந்த ஊர். கற்காலம் முதல் தற்காலம் வரை பல வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தை கொண்டுள்ளது. புதிய கற்கால கருவிகள் இங்குக் கிடைக்கின்றன. இங்குள்ள ஜம்பைக் குன்றில்தான் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமானின் கல்வெட்டு இந்நூலாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஜம்பையைச் சுற்றி இரண்டு கல் சுற்றளவில் வயல்களில் சங்ககாலப் பானை ஓடுகளான கருப்பு - சிவப்பு மற்றும் கருப்புப் பானை ஓடுகள், குறியீடு பொறித்த பானை ஓடுகள், தமிழ்

எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், உடைந்த முதுமக்கள் தாழியின் தடித்த ஓடுகள், இடைக்காலப்பானை ஓடுகள், செங்கற்கள், கூரை வேயும் ஓடுகள் ஆகிய பல்வேறு தொல்பொருட்கள் வயல்களில் சிதறிக் கிடைக்கின்றன. மேலும் சோழர் காசுகள் இரண்டும் முஸ்லீம் ஆட்சிக் காலத்துக் காசு ஒன்றும் மற்றும் பாசி, காதணி (சுடுமண்) ஆகியவையும் கிடைத்தன.

மேலும் இருபது ஏக்கர் பரப்பளவில் 'கோட்டைக் கரை' எனும் மேட்டுக் கொல்லை, தரை மட்டத்திலிருந்து 2 முதல் 3 மீ. உயரத்தில் அமைந்துள்ளது. கோட்டைக்கரை மேட்டிலிருந்து அகழி மேடு 2 மீ. பள்ளத்தில் அமைந்துள்ளது. 5 அடி நீளமுள்ள பெருஞ்சுவர்கள் தென்படுகின்றன. 38 செ.மீ. நீளமுள்ள செங்கற்களால் ஆனவை இவை. இப்பகுதியில் சிதைந்த சுதை முகங்களும் கிடைக்கின்றன. இப்போது இப்பகுதி வயல்களாகக் காட்சியளிக்கின்றது.

இங்குள்ள வயல்களுக்கு இடப்பட்டிருக்கும் 'நத்தம்', 'மேல் நத்தக்கொல்லை' 'கீழ் நத்தக் கொல்லை', 'அகழிக் கொல்லை', 'கூத்தாடிக் கழனி' போன்ற பெயர்கள் ஜம்பை அக்காலத்தில் பெருநகராக இருந்ததைப் பறைசாற்றுகின்றன.

மேற்கூறிய சான்றுகளும் ஜம்புநாதர் கோயில், அகிலாண்ட ஈசுவரி கோயில், காசிவிஸ்வநாதர் கோயில், கமலநாதர் கோயில், கயிலைநாதர் கோயில், சைனியம்மன் எனும் சமணக் கோயில் ஆகிய கோயில்களும் ஜம்பை மிகத் தொன்மையான ஊர் என்பதற்குச் சான்று பகர்கின்றன.

'ஜம்பை' என்பது தாள வகைகளில் ஒன்று,

''துருவ மத்திரம் ரூபக ஜம்பை திருப்படை
அடத்தாளம் ஏகத்தாளம்''

என்ற நூற்பா தாள வகைகளில் ஜம்பை ஒன்றெனச் சுட்டுகிறது.

கல்வெட்டுகளில் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு, இப்போது ஜம்பை என வழங்கும் இப்பெயர் ''சண்பை'' என்பதன் திரிபு. 'சண்பு' அல்லது 'சம்பு' என்பதற்குக் கோரைப்புல் எனப் பொருள் கூறுகிறது தமிழ் அகராதி. இவ்வூரில் அவ்வகைப் புற்கள் அதிகம் வளர்தலால் இப்பெயர் பெற்றதெனலாம்.

விமானமும் கோபுரமும்



# பண்டைய வரலாறு

## வரலாற்றுக்கு முந்தைய காலம்

ஜம்பையில் மக்கள் வாழ்க்கை புதிய கற்காலத்திலிருந்து தொடங்குகிறது. ஜம்பையில் நான்கு புதிய கற்காலக் கருவிகள் இந்நூலாசிரியரால் சேகரிக்கப்பட்டன. இவை மேற்பரப்பு ஆய்வில் *(Surface Collection)* கிடைத்தன. ஜம்பைக்குக் கிழக்கே அதியமான் கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்ட குன்றின் அடிவாரத்தில் இவை சேகரிக்கப்பட்டன. அவை புதிய கற்காலக் கைக்கோடரிகள் ஆகும்.

ஒரு கருவி மூலக் கல்லிலிருந்து பிரித்து எடுக்கப் பட்டு, நன்முறையில் வழவழப்பாக்கப்பட்டுள்ளது. உபயோகிக்கும் முனை கூர்மையாகவும், மற்ற முனை சற்று தடித்தும் காணப்படுகிறது.

மற்ற இரு கைக் கோடரிகளின் மேற்புறமும் கீழ்ப்புறமும் மற்றும் பக்கங்களும் சிதைந்து காணப்படுகின்றன.

நான்காம் கைக்கோடரி அளவில் சிறியது. பெரிய கைக்கோடரியின் முனைப்பகுதியாக இது காணப்படுகிறது. இதுவும் மேலும் கீழும் சற்று உடைந்து காட்சியளிக்கிறது.

## சங்க காலம்

ஜம்பை கற்காலம் முதல் தொன்மையான ஊர் என்பதை முன் கண்டோம். இங்கு ஒரு நகரின் அழிந்த சுவடுகள் தென்படுகின்றன. ஜம்பையைச் சுற்றியுள்ள குன்றுகளில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன.

ஜம்பைக் குன்றுகளில் ஒன்றில் இரண்டு ஆயிரம் ஆண்டுகட்கு முந்திய அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமானின் கல்வெட்டு உள்ளது.

தொல்லியலார் பெருங்கற்காலம் என்றும் அழைக்கும் காலப்பகுதியே பொதுவாகத் தமிழக வரலாற்றில் சங்க காலம் என்றழைக்கப்படுகிறது. இக்கால மக்கள் சிறந்த நாகரிகமும், பண்பாடும் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். ஜம்பை அருகில் உள்ள செம்படை மற்றும் காங்கையனூர் ஆகிய இடங்களில் பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும், தேவரடியார் குப்பத்தில், கற்குவைகளும் காணக் கிடைக்கின்றன.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அதியனின் கல்வெட்டு ஜம்பையில் தாசிமடம் என்ற இயற்கையான மலைக்குகையில், 4 அடி நீளத்தில், 3 அங்குலம் அகலத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்திய வரலாற்றிற்கும், தமிழக வரலாற்றிற்கும் புதிய செய்தியைத் தரும் கல்வெட்டு இதுவாகும். கல்வெட்டு இதோ;



ஸதிய புதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி

இது தவிர தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஒடு (சிவப்பு) இம் மலைச் சமவெளியில் மேல்பரப்பாய்வில் கிடைத்தது. அந்தப் பானை ஒட்டில் 'கதி' என்னும் இரு எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

அசோகனின் நான்கு கல்வெட்டுகளில் 'சதியபுத' என்ற பெயர் சுட்டப்பெறுகிறது.

தென்னாட்டில் தன் எல்லைகளைக் குறிப்பிடும்போது, மௌரிய அரசன் அசோகன், தன் சமகாலத்தவர்களான சோழ, பாண்டிய, சேரர்களைக் குறிப்பிட்டுச் சத்திய புத்திரர்களையும் குறிப்பிடுகிறான்,

அசோகன் தன் கல்வெட்டில் குறிப்பிட்ட சேரர், சோழர், பாண்டியர்கள் எவர் என்றறிவதில் இடர்ப்பாடு ஏதும் வரலாற்றாசிரியர்களிடம் இல்லை, 'ஆனால் சத்திய புத்திரர் யார்?' என்பதற்குத் தெளிவான முடிவு வரலாற்று ஆசிரியர்களிடம் இல்லாத நிலை இருந்தது.

சத்திய புத்திரர்கள் சங்க இலக்கியங்களில் பேசப்படும் 'வாய்மொழிக் கோசர்' என்பவராய் இருத்தல் கூடும் என்றும், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்களாக இருக்கக் கூடும் என்றும், மகாராஷ்டிரத்தின் 'ஸத்புத்ரர்' என்போராக இருக்கக் கூடும் என்றும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் திரு. சேஷ அய்யர், 'ஸதிய புதோ' என்று அசோகன் கல்வெட்டில் குறிக்கப்படுவோர் அதியமான்களாக இருக்கக் கூடும் என மொழியியல் அடிப்படையில் கருதினார். ஜம்பையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு, சத்தியபுத்திரர்கள் என்போர் அதியமான்கள்தான் என ஆணித்தரமாக எடுத்துரைக்கும் சான்றாக அமைகிறது. இவ்வாறு தமிழக வரலாற்றுக்கும் இந்திய வரலாற்றுக்கும் புதிய தெளிவினைத் தந்தது இக்கல்வெட்டு.

இக் கல்வெட்டைப் பற்றி அறிஞர்கள் சிலர் தங்கள் கருத்துகளை வெளியிட்டு உள்ளனர். இது பற்றிச் சிறிது ஆய்வோம். டாக்டர் டி.வி. குப்புசாமி, டாக்டர் கே.வி. ராமன், டாடா ஆராய்ச்சிக் கழக நிபுணர் அ. விசயராகவன், செந்தமிழ்ச் செல்வி திங்களிதழ் மற்றும் பலர் தங்கள் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். டாக்டர் டி.வி. குப்புசாமி

அவர்கள் இந்து இதழுக்கு எழுதிய கடிதத்தில் பல்வேறு சான்றுகளை எடுத்துக் கூறிக் கண்டுபிடிப்பை வரவேற்று, அதியமான் ஆட்சி தகடூரைத் தலைநகராகக் கொண்டு, மலை கொங்கு நாடு, குதிரைமலை, காவிரியின் கிழக்குப் பகுதியிலிருந்து நாமக்கல்லின் தெற்கு பகுதிவரை பரவியிருந்தது. அதியமானின் ஆட்சிக்குட்படாத தென் ஆர்க்காடு, ஜம்பையில் இக்கல்வெட்டு இருக்கக் காரணம் என்ன என்ற கேள்வியோடு முடித்திருக்கிறார். நல்ல கேள்வி! மலையமான் திருமுடிக்காரியுடன் (திருக்கோவிலூர்) போரிட்டு வெற்றி பெற்றுத் திரும்பும் தருவாயில் முனிவர்கட்க்கு இப்பாழியை அமைத்துக் கொடுத்துள்ளான் என்பதே அதற்கான விடை.

டாடா ஆராய்ச்சிக் கழக நிபுணர் (பம்பாய்) திரு. ரா. விசயராகவன், இரா. இராகவையங்கார் அவர்களின் வேளிர் வரலாறு, கோசர் வரலாறு ஆகியவற்றை எடுத்துக் காட்டி, ஸதிய புத்திரர் என்றால் பார்வதியின் பிள்ளைகள், காச்மீரத்திலிருந்து வந்தவர்கள் என்றும், வேளிர் குலத்தவர் என்றும், எனவே வேளிர் குலத்தவரையே சதிய புத்திரர் எனக் கூறுவது பொருந்தும் என்கிறார்.[1] இக்கருத்து பொருத்தமில்லாதது. இக்கருத்துக்கு இலக்கியச் சான்றாவது கல்வெட்டுச் சான்றாவது இல்லை. ஜம்பையிலுள்ள கல்வெட்டு, அதியன் நெடுமான் அஞ்சியைச் சத்திய புத்திரர் (ஸதிய புதோ - பிராகிருதச் சொல்; சமஸ்கிருத வடிவம் - சத்திய புத்திரர்) என ஆணித்தரமாகக் கூறுகிறது. மேலும் அரண் செய்ய அசோகனின் கல்வெட்டுச் சான்றும் உள.

இனி செந்தமிழ்ச் செல்வி திங்களிதழ் நீண்டதொரு கட்டுரையை வரைந்துள்ளது. அக்கட்டுரையின் திரண்ட

---

1. *தினமணி நாளிதழ்,* நாள். 27.11.81

கருத்து இதுதான்; சத்திய புத்திரர் என்னும் சொல் வடசொல். அதியமான் சங்க காலத்தைச் சேர்ந்தவன். சத்திய புத்திரர் என்னும் வடசொல்லைத் தன் பட்டப் பெயராக வைத்திருக்க மாட்டான். பிற்காலத்தில் ஆட்சி செய்த அதியமான்களாக இருக்கலாம், கி.பி. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டினராக இருக்கலாம் எனப் பிற்காலக் கல்வெட்டைச் சான்றாகக் காட்டுகிறது (கல்வெட்டு ஆண்டறிக்கை 211/1920)[1]. இக் கருத்துக்கு எள்ளளவும் சான்று இல்லை. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர். இரா. நாகசாமி அவர்கள் தக்க சான்றுகளுடன் சத்திய புத்திரர் அதியமான்தான் என நிறுவியுள்ளார். (இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ், 6.12.81)

செந்தமிழ்ச் செல்வி திங்களிதழில் வட சொல் கலந்திருப்பதால் இது பிற்காலத்தைச் சார்ந்தது என்ற வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது. தமிழின் மிகத் தொன்மையான தொல்காப்பியத்திலேயே வடசொற்கள் இருக்கின்றன. சொற்களும், மக்கள் பண்பாடும் ஒன்றுடன் ஒன்று கலப்பது உலக இயல்பு. தமிழகத்தில் கிடைத்துள்ள மிகப்பழைய கல்வெட்டுகளில் பிராகிருதச் சொற்கள் பல இருக்கின்றன. தம்மம், ஸுதன், புதஸ போன்ற பிராகிருதச் சொற்கள் தமிழிக் கல்வெட்டுகளில், அதாவது 2000 ஆண்டுகட்கு முந்திய தமிழ்க் கல்வெட்டுகளில் உள்ளன. இது வரலாற்று உண்மை.

### அவ்வையும் அதியனும்

அவ்வையாரையும், அதியமானையும் அறியாத தமிழரும் உண்டோ? இவர்கள் நட்பு எவ்வளவு உயர்ந்தது என்பதனைப் புறநானூறு பகரும். வள்ளல் பாரிக்குக் கபிலர் என்றால் அதியமானுக்கு அவ்வை. நீண்ட ஆயுளைத் தரும்

1. இனிவரும் எண்கள் க.ஆ.அறிக்கையினைக் குறிக்கும்

நெல்லிக்கனியைத் தான் உண்ணாது, தமிழ் வாழ - அவ்வை நீண்ட ஆயுளைப் பெற. அவ்வையிடம் கொடுத்த அருந்தமிழ் வள்ளல் அல்லவோ அதியமான்? இவன் வீரத்திலும் சிறந்து விளங்கியவன்.

அதியமான் இன்று தருமபுரி என வழங்கும் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன். 'நெடுந்தேர் அஞ்சி', 'நெடு நெறிக் குதிரை கூர் வேல் அஞ்சி', 'கடும்பகட்டு யானை நெடுமான் அஞ்சி' எனப் பலவாறு சங்கப்பாடல்களில் புகழப்படுபவன். இவனைப் பற்றிய பெரும்பாலான பாடல்களை அவ்வையாரே பாடியுள்ளார். அவ்வையின் தமிழ்ப்புலமையை அறிந்து பிரியா நட்பு கொண்டான். அதியமான் அவ்வைக்கு நெல்லிக்கனி கொடுத்தது, அவ்வையாலேயே புகழ்ந்து பாடப்படுகிறது, ''அருமையான நெல்லிக்கனி; அதை உண்டால் என்றும் இறவாமல் இருக்கலாம் என்று தெரிந்தும் அதை நீ உண்ணாமல், அச் செய்தியை எனக்குச் சொல்லாமல், நான் என்றும் இறவாமல் இருக்கவேண்டும் என்று எனக்கு ஈத்தனையே நீ, ஆலகால விடத்தைத் தன் மிடற்றில் அடக்கி உலகை உய்ய வைத்த சிவனைப் போல் சிறப்பாயாக'' என வாழ்த்துகிறாள்;

''ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவில் பொலந்தார் அஞ்சி
பல்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலை
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித்தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கி சாதல் நீங்க
எமக்கு ஈத்தனையே'' (புறநானூறு: 91)

எனப் புகழ்கின்றார் அவ்வை.

இதனையே சிறுபாணாற்றுப் படையில் நல்லூர் நத்தத்தனார் ''நெல்லி அமிழ்துவிளை தீங்கனி அவ்வைக்கு ஈத்த அதிகன்'' என்பார். அதியமானைப் புகழ்ந்து அவ்வையார், பரணர், மாமூலனார், அரிசில்கிழார், நல்லூர் நத்தத்தனார், பெருஞ்சித்திரனார், நாகையார் ஆகியோர் பாடியிருக்கின்றனர். இவன் குலமுன்னோர் கரும்பு பயிரிடும் மரபைப் புகுத்தியவர் என்பதை,

> ''அமரர் பேணியும் ஆவுதி அருத்தியும்
> அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்
> நீரக இருக்கை ஆழி சூட்டிய தொன்னிலை
> மரபின் நின் முன்னோர்'' (புறம் : 99)

என மற்றொரு பாடல் காட்டும். இவன் அரண்மனை வாயில் ''பரிசிலர்க்கு அடையா வாயில்'' ஆகும். இவனிடம் வலிமை மிக்க யானை, குதிரைப் படைகளும், வீரர்களும் இருந்தனர்.

## அதியனும் காரியும்

ஜம்பையை அடுத்த திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு மலையமான் திருமுடிக்காரி ஆட்சி செய்துள்ளான். இப்பகுதி மலையமான்களின் பகுதியாகும்.

புறநானூறு 123, 124, 125, 126, 158-ஆம் பாடல்களில் மலையமானின் சிறப்புகள் பற்றிக் குறிப்புகள் உள்ளன. மேலும் குறுந்தொகை 312ஆம் பாடலும், நற்றிணை 170ஆம் பாடலும் மலையமான் திருமுடிக்காரியைப் புகழ்கின்றன. இவன் முள்ளூர் என்னுமிடத்தில் பகைவரைப் போரிட்டு வென்றான்;

> ''ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
> பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
> ஒருவேற்கு ஓடியாங்கு'' (நற்றிணை : 170)

சிற்றரசர்களான மலையமானும், அதியமானும், சூழ்நிலைக்குத் தக்கவாறு, தங்கள் ஆதரவினைச் சேர, சோழ, பாண்டியர்களுக்குக் கொடுத்து வந்தனர். மலையமான் திருமுடிக்காரி தம்மையொத்த சிற்றரசர்களைப் போரிட்டு வென்றான். அதியன் காரி, ஓரியுடன் போரிட்டு வென்றான்.

ஒருமுறை சோழன் இராசசூயம்வேட்ட பெருநற் கிள்ளிக்கும், சேர மன்னன் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும் போர் மூண்டது. இப்போரில் மலையமான் திருமுடிக்காரி சோழர் பக்கம் ஆதரவு கொடுத்து, சோழனுக்குப் பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்தான். மலையனின் வீரத்தை அறிந்த சேரலிரும்பொறை கீழ்க் கண்டவாறு அங்கலாய்த்துக் கொண்டான்.

''வெல்வேல் மலையன் அல்லன் ஆயின்
ஒல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கு'' (புறம், 125)

ஒருமுறை சேரலிரும்பொறை, மலையமான் திருமுடிக் காரியுடன் நட்பு கொண்டு, கொல்லி மலைப் பகுதியை வென்றான்.

திருமுடிக்காரியின் இச்செயலை வெறுத்து, அதியன் நெடுமான் அஞ்சி அவனிடம் பகைமை கொண்டான். அதியமான் சிறந்த வீரன் என்பதை முன்பே கண்டோம். ஒரு முறை இவன் ஏழு அரசர்களுடன் போரிட்டுப் பெருவெற்றி பெற்றான். அதியமானுக்கும் திருமுடிக்காரிக்கும் பெரும் போர் மூண்டது. திருமுடிக்காரியின் திருக்கோவிலூர்ப் பகுதியைத் தகடூரில் (தர்மபுரி) இருந்து படையுடன் வந்த அதியமான் முற்றுகையிட்டான். இப்போரில் திருக்கோவிலூர்ப் பகுதி சிதைந்தது. மலையமான் திருமுடிக்காரி கொல்லப்பட்டான். அதியமான் பெரும் வெற்றிபெற்றுத் திரும்பும் வழியில், திருக்கோவிலூர்ப் பகுதியைச் சார்ந்த

ஜம்பையில் தங்கி ஜம்பைக் குன்றில் இயற்கைக் குகைத்தளத்தில் வாழ்ந்து வந்த முனிவர்கட்குப் படுக்கை அமைத்துக் கொடுத்தான். இங்குத் தன் கல்வெட்டையும் (பெயர்) பொறித்தான்.

திருக்கோவிலூர் வெற்றியை அவ்வை புகழ்ந்து, அதியமானைப் பாடுகிறாள்;

> ''இமிழ்குரல் முரசின் எழுவரோடு முரணி
> சென்றமர் கடந்து நின் ஆற்றல் தோற்றிய
> அன்றும் பாடுநர்க்கு அரியை இன்றும்
> பரணன் பாடினன் மற்கொல் நீ
> முரண்மிகு கோவலூர் நூறி நின்
> அரண் அடு திகிரி ஏந்திய தோளே!'' (புறம்,99)

என வியந்து போற்றுகிறாள்.

அதியமானின் இறுதிக் காலத்தில் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறை, தகடூரை முற்றுகையிட்டான். கடும்போரில் அதியமான் மார்பில் வேல் பாய்ந்து, கீழே வீழ்ந்து மாய்ந்தான். இச் செய்தியைப் பதிற்றுப்பத்து பகர்கிறது.

> ''வெல் போராடவர் மறம்புரிந்து காக்கும்
> வில் பயிலிறும்பிற் தகடூர் நூறி'' (பதிற்றுப் பத்து:78)


அதியமான் இறந்த செய்தியை அறிந்த அவ்வை கதறிப் புலம்பினாள். அப்போது அவர் பாடிய பாடல்கள் நெஞ்சை உருக்குவன. ''பகைவனின் வேல் அவன் மார்பில் மட்டுமா தைத்தது? இல்லை இல்லை; இரப்போர் கைகளைத் துளைத்து அவனது குடிகள் கண்ணீர் சொரிய, நல்ல புலவர்களின் நாவையும் அல்லவா தைத்தது! இனி பாடுநர் யார் இருக்கிறார்? பாடுவோர்க்கு அளிப்பவர் தாம் யார் இருக்கிறார் எனக் கண்ணீர் விடுகிறாள்.

''இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவைசோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன் அருந்திறத் -
தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநருமில்லை பாடுநர்க்கு
ஒன்று ஈகுநரு மில்லை'' (புறம் :235)

பௌத்தமும் சமணமும்

ஜம்பையில் பௌத்த மத பிட்சுகளுக்கே அதியமான் நெடுமான் அஞ்சி பாழி அமைத்துக் கொடுத்திருக்க வேண்டும். இது சமண முனிவர்க்கு அமைத்து கொடுத்ததாக இருக்க இயலாது. ஏனெனில் ஜம்பையில் தீர்த்தங்கரர் உருவச் சிலை மூன்றும், புத்தர் உருவச்சிலை மூன்றும் தற்போது கிடைக்கின்றன. இவற்றில் தொன்மையானது 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புத்தரின் சிலையாகும். எனவே புத்த மதம் முதலில் ஏற்பட்டிருக்க வேண்டும். பின்னர் சமண மதமும் இங்கு ஏற்பட்டிருக்க வேண்டும். சைனியம்மன் என்னும் சமணப் பெண் துறவி பெயரில் ஒரு சிதைந்த கோவிலும் ஜம்பையிலுள்ளது.

ஜம்பைக்கருகில் இரண்டு கல் தூரத்தில் பள்ளிச் சந்தல் அமைந்துள்ளது. இச் சிற்றூர் கி.பி.12ம் நூற்றாண்டில் ஸ்ரீ கண்டராதித்தப் பெரும்பள்ளி எனும் பௌத்தப் பள்ளிக்குரிய பள்ளிச் சந்தம் ஆகும் (448/1938). பௌத்தமும் சமணமும் ஜம்பையில் தொடர்ந்து இருந்திருக்கின்றன.



# நாடும் ஊரும்

இப்போது 'ஜம்பை' என வழங்கி வரும் இவ்வூரின் மிகத் தொன்மையான பெயர் வாளையூர் நகரம் என்பதாகும். இங்குள்ள மிகப் பழமையான கல்வெட்டு விஜயாலயச் சோழனுடையதாகும். இக்கல்வெட்டில் இவ்வூர் வாளையூர் நகரம் என அழைக்கப்படுகிறது. பராந்தகன் காலத்திலும் (க.ஆ.அ.117/1906), இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் காலத்திலும் (க.ஆ.அ.97/1906), இவ்வூர் வாளையூர் நகரம் என்றே அழைக்கப்பட்டது. முதலாம் இராசராசன் காலத்தில் இவ்வூர் வாளையூராகிய நித்தவிநோதபுரம் (க.ஆ.அ. 71/1906) என அழைக்கப்பட்டது. நித்தவிநோதன் என்பது இராசராசனின் சிறப்பு பெயர்களுள் ஒன்று. அவன் பெயரில் இவ்வூர் அமைந்துள்ளது.

வீரராசேந்திரனின் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் நித்த விநோதபுரமாகிய வீரராசேந்திரசோழபுரம் என அழைக்கப் பட்டது (க.ஆ.அ. 83, 100/1906). முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில்தான் இவ்வூர் சண்பை என்றும், சண்பையான வீரராசேந்திர சோழபுரம் என்றும் அழைக்கப்பட்டது (க.ஆ.அ. 67, 68, 78/1906, 429, 430/ 1938). இரண்டாம் இராசராசன் காலத்தில் இவ்வூர் சம்பை என அழைக்கப்பட்டது (க.ஆ.அ.448/1938). இதற்குப் பின்னால் ஆண்ட இரண்டாம் குலோத்துங்கன் காலம், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் ஆகியோர்

காலங்களிலும் சண்பையான வீரராசேந்திரபுரம் என்றே வழங்கி வந்துள்ளது. கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும், பாண்டியர் மற்றும் விஜயநகர நாயக்கர் காலத்திலும் சண்பையான வீரராசேந்திரபுரம் என்றே வழங்கி வந்துள்ளனர்.

ஜம்பை சங்க காலத்தில், மலையமான் திருமுடிக்காரி ஆட்சிக்குட்பட்ட பகுதியாய் இருந்தது. பின்னர் பல்லவர் ஆட்சிக் காலத்தில் இப்பகுதி பல்லவர்களுக்கு அடங்கிய முற்கால சிற்றரசர்களான வாணகோ அரசர்களால் ஆளப்பட்டது. பின்னர் சிற்றரசர்களான வாணகோ அரசர்களை வெற்றி கொண்டு இடைக்காலச் சோழர்கள் இப்பகுதியில் அரண்மனை கட்டி ஆட்சி செய்தார்கள் எனலாம்.

## வாணகோப்பாடி

ஜம்பை வாணகோப்பாடி நாட்டிலமைந்தது. பல்லவர்களின் சிற்றரசரான வாணர்கள் இப்பகுதியை ஆண்டனர். வாணகோப்பாடிநாடு கீழ்கண்ட நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது; ஆடையூர் நாடு, அண்ணா நாடு, செங்குன்றநாடு, காந்தளூர் நாடு, கீழ்கொன்றைநாடு, மெய்குன்ற நாடு, நரிப்பள்ளி நாடு, உடைக்காடு நாடு, விளையூர் நாடு, வாளையூர் நாடு.

இராசராசன் காலத்திலும், அவன் மகன் முதலாம் இராசேந்திரன் காலத்திலும், வளநாடுகள், நாடுகள், கூற்றம், ஊர் போன்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அளக்கப்பட்டு, கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டன.

ஜம்பை கல்வெட்டுப் பகுதிகளில் இராசராச வளநாடு, ராசேந்திர வள நாடு, இராசேந்திர சோழ வளநாடு, மதுராந்தக

வளநாடு, கங்கை கொண்ட சோழ வளநாடு, மெய் குன்றாத வளநாடு போன்ற வள நாட்டுப் பெயர்கள் வருகின்றன. இவை இராசராசன் காலத்திலும், இராசேந்திரன் காலத்திலும் ஏற்படுத்தப்பட்டவையாகும்.

## கல்வெட்டுகளில் வரும் நாடுகள்

வாளையூர் நாடு, கீழ்கொன்றை நாடு, செங்குன்ற நாடு, நரிப்பள்ளி நாடு, தென்கழார் நாடு, திருமுனைப்பாடி குன்றத்தூர் நாடு, மிலாடாகிய மெய்குன்ற நாடு ஆகிய நாடுகளின் பெயர்களும் இவ்வூர்க் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

## கல்வெட்டுகளில் வரும் பிற ஊர்ப்பெயர்கள்

குளக்குடியான வீரசோழ நல்லூர், திருவரங்கம், நரியர் ஏந்தல், முடியனூர், வாளைவெட்டி, வனபுரம், சீபாத நல்லூர், குணமங்கலம், குளக்குடி, மாமாந்தூர்; பாடிநாவலூர்; திருமேருர், திருக்கூடர், வட்குடிவை; பிரமதேயம் வதுனை; நல்லூர்; கொல்லையூர்; வேளாளர் கூடல்; தம்மபட்டி; குணமங்கலமான வீரசோழநல்லூர்; சிறுவாங்கூர், சுத்தமல்லிகை, ஆதனூர், ஆக்கைப் பாடி, பனந்தூர், சிறுபனையூர், இறையாநறையூர், கிளியூர், பள்ளிச் சந்தல். இவற்றுள் சில இன்றும், இதே பெயரிலோ, சிறிது மாற்றம் பெற்றோ வழக்கில் உள்ளன.

## ஊர்ப்பெயர்கள்

| கல்வெட்டில் | | இன்று | | தொலைவு |
|---|---|---|---|---|
| சீபாதநல்லூர் | - | சீபாதநல்லூர் (சிவானூர்) | - | 6 கல் |
| அத்தமலையான் பட்டு | - | அர்த்தராம்பட்டு | - | 8 ,, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆக்கைப்பாடி | - | ஆர்க்கவாடி | - | 3 | ,, |
| குணமங்கலம் | - | குணமங்கலம் | - | 6 | ,, |
| முடியனூர் | - | முடியனூர் | - | 10 | ,, |
| வானைவெட்டி | - | வாளைவெட்டி | - | 10 | ,, |
| மரவூர் | - | மருவூர் | - | 6 | ,, |
| நவளாக்குடி | - | நாவல்குடி | - | 8 | ,, |
| மாமாந்தூர் | - | மாமாந்தூர் | - | 5 | ,, |
| நல்லூர் | - | நல்லூர் | - | 15 | ,, |
| கிளியூர் | - | கிளியனூர் | - | 40 | ,, |
| கொல்லையூர் | - | கொல்லையூர் | - | 7 | ,, |
| பிரம்மதேயம் | - | பிரமகுண்டம் | - | 15 | ,, |

ஆர்க்கவாடிக்கு நெற்குன்றம், வைரமேகச் சதுர்வேதி மங்கலம் எனவும் பெயர்கள் இருந்ததென அறிகிறோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறையானறையனூர் | - | எலவானாசூர் | - | 36 | கல் |
| தம்மபட்டி | - | தம்மபட்டி | - | 50 | கல் |
| குன்றத்தூர் | - | குன்றத்தூர் | - | 45 | கல் |
| மலையனூர் | - | மலையனூர் | - | 45 | ,, |
| நரிப்பள்ளி | - | நரிப்பள்ளி | - | 50 | ,, |
| பள்ளிச்சந்தம் | - | பள்ளிச் சந்தல் | - | 1 | ,, |

# கல்வெட்டுகள்

ஜம்பையில் மொத்தம் 132 கல்வெட்டுகள் இருக்கின்றன. இவை பெரும்பாலும், ஜம்புநாதர் கோயில், அகிலாண்ட ஈசுவரிகோயில் ஆகியவற்றில் உள்ளன. மீதி ஊரைச் சுற்றியுள்ள குன்றுகளில் உள்ளன.

ஜம்புநாதர் கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம், மகா மண்டபம், மடைப்பள்ளிகளில் 50 கல்வெட்டுகளும், அகிலாண்ட ஈசுவரி அம்மன் கோயிலில் 16 கல்வெட்டுகளும், ஜம்பையைச் சூழ்ந்துள்ள குன்றுகளில் 14 கல்வெட்டுகளும், ஜம்புநாதர் கோயில் கோபுரம் மதில்கள் மற்றும் தரையில் உள்ள துண்டுக் கல்வெட்டுகள் 32ம் ஆக மொத்தம் 112 கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டு, ஆண்டறிக்கையில் வெளிவந்த 20 கல்வெட்டுகளில் 10 கல்வெட்டுகள் ஜம்புநாதர் கோபுர முட்டுச் சுவருக்குள் புகுந்துவிட்டன. மற்ற 10 கல்வெட்டுகள் படிக்க முடியாதபடி சிதைந்துள்ளன. ஆக மொத்தம் 132 கல்வெட்டுகள்.

மொத்த கல்வெட்டுகள் : 132 + 3 = 135, ஜம்பைக் கல்வெட்டுகள் 67/1906 முதல் 127/1906, மற்றும் 429/37-38 முதல் 451/37-38 வரையிலுமாக கல்வெட்டு ஆண்டறிக்கைகளில் வெளிவந்துள்ளன.

---

இந்நூலாசிரியர் ஆய்வின்போது ஆண்டறிக்கையின் அடிப்படையிலும் தான் நேரில் படித்ததை வைத்தும் இந்நூல் எழுதப்பட்டிருந்தது. தற்போது, 1906 ஆண்டில் படியெடுக்கப்பட்டவை அனைத்தும் தெ.க.தொ. 22இல் வாசகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அதியமான் கல்வெட்டு | - | 1 |
| சோழர்கள் கல்வெட்டுகள் | - | 60 |
| கன்னரதேவன் கல்வெட்டுகள் | - | 12 |
| கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டுகள் | - | 5 |
| பாண்டியர்கள் கல்வெட்டுகள் | - | 6 |
| விஜயநகர, நாயக்கர் கல்வெட்டுகள் | - | 13 |
| பெயர்கள் அற்ற மற்றும் இதர கல்வெட்டுகள் | - | 35 |
| மொத்த கல்வெட்டுகள் | | 132 |

ஜம்பை குன்றுப் பகுதியில் கண்டுபிடித்த அதியமானின் கல்வெட்டைப் பற்றி முன்பே கண்டோம். இனி சோழர்கள் கல்வெட்டுகளைப் பற்றி ஆய்வோம்.

## சோழர்கள்

முத்தரையர்களிடமிருந்து தஞ்சையை மீட்டு சோழப் பேரரசுக்கு வித்திட்ட விஜயலாய சோழனின் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. கோப்பரகேசரி எனத் தொடங்கும் இக்கல்வெட்டின் எழுத்தமைதி 9ம் நூற்றாண்டைச் சார்ந்தது. மதுரை கொண்ட கோப்பரகேசரியின் கல்வெட்டுகள் 13ல் ஆறுதான், இப்போது படிக்கக் கிடைக்கின்றன. இதே போன்று இராட்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ணன் ஆகிய கன்னர தேவனின் கல்வெட்டுகள் 12. இதில் இப்போது 5 தான் படிக்கக் கிடைக்கின்றன. ஆனால் மத்திய தொல்லியல் துறையால் இவை படியெடுக்கப்பட்டிருக் கின்றன. 1942ல் தான் இந்த முட்டுச்சுவர் கட்டியதாகக் கோயிலில் குறிப்பு உள்ளது.

விஜயாலயன் (கி.பி.850-871)

ஜம்பையில் இவனுடைய 15 மற்றும் 21-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. ஒன்று ஜம்பைக்கு மேற்கில் பள்ளிச்சந்தம் எனும் ஊருக்கு செல்லும் வழியிலுள்ளது. ஓடையின் அருகிலுள்ள சிறுபாறையில் உள்ளது. மற்றொன்று பள்ளன் பாறையில் இயற்கைக் குகைத் தளத்தில் மேல் உள்ளது. இப் பள்ளன் பாறை அல்லது பறையன் பாறை ஜம்பைக்கு மேற்கிலுள்ளது.

கி.பி.871ல் விசயலாயன் காலத்தில், சக்கன்வைரி என்பான் ஏரி நிலத்தைத் திருத்திப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்தான். பள்ளிச் சந்தல் என்ற பெயர் இன்றும் உள்ளது. விசயலாயன் காலத்தில் வாணகொப்பாடி வாளையூர் நாட்டில் இருந்தது. இப்போது இதன் அருகில் சிறு ஓடை உள்ளது. அக்காலத்தில் இப்பகுதி ஏரியாக இருந்தது. சக்கன் வைரியால் திருத்தப்பட்ட நிலத்தின் நான்கு எல்லைகளும் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மற்றொரு கல்வெட்டு பறையன் பாறை என்னும் இயற்கைக் குகைத்தளத்தின் மேல் உள்ளது. ‘‘ஸ்வஸ்தி ஸ்ரீ கொப்பரகேசரி பன்மற்கு யாண்டு பதினைந்தாவது வாணகொபாடி’’ என்பது மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு கல்வெட்டு தொடரவில்லை.

பராந்தகன் (கி.பி.906-954)

இவன் காலத்தனவாகப் பதின்மூன்று கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் ஆறு கி.பி.1942ல் புதியதாக கட்டப் பட்ட ஜம்புநாதர் கோபுரத்தைத் தாங்கி நிற்கும் முட்டுச் சுவருக்குள் மறைந்து விட்டன. அகிலாண்ட ஈசுவரி அம்மன் கோயில் இரண்டாம் நுழைவின் கீழ் உள்ள பராந்தகன்

கல்வெட்டு சிதைந்துள்ளது. ஜேஷ்டா தேவிக்குச் செய்த ஏதோவொரு ஏற்பாட்டினை இது குறிக்கிறது (107/1906).

கண்டராதித்தனின் மனைவியார் வீரநாரணியார், பராந்தகனின் 34ம் ஆட்சியாண்டில், வாளையூர் நகரில் (இவ்வூரில்) மண்டபம் ஒன்று அமைத்துக் கொடுத்தாள். இம்மண்டபத்தைத் தூய்மைப்படுத்தவும், திருப்பணிகள் செய்யவும், தண்ணீரட்டவும் இவ்வூர் நகரத்தார் கழஞ்சுப் பொன் அளித்தனர். அதன்வட்டியிலிருந்து இவை செய்யப்பட ஏற்பாடு செய்யப்பட்டது (108/1906).

பராந்தகனின் 35ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று கோபுரத்தின் வலதுபுறம் சுவரிலுள்ளது. தினமும் கோயிலில் (தான்தோன்றி) பூசை போன்ற தேவைகளுக்குக் கடம்பூரில், 'பண்டாரப் பொத்தகம் உடையான்' என்ற அலுவலன் நிலம் அளித்தது குறிக்கப்படுகிறது (111/1906). மற்றொரு கல்வெட்டு முற்றிலும் சிதைந்துள்ளது (115/1906). கோபுரத்தின் இடதுபக்கம், பராந்தகனின் 25ம் ஆண்டு முற்றுப் பெறாத கல்வெட்டு ஒன்று, பெண்ணையாற்றின் வடகரை வாளையூர்த் தான்தோன்றித் தம்பிரானான விதிவிடங்கருக்கு இறையான்குடிக் கிழவன் ஐயாற்றடிகள் ஒரு நொந்தா விளக்கு தானமாகக் கொடுத்துள்ளதைக் கூறுகிறது (117/1906). இதே இடத்திலுள்ள ஆட்சியாண்டு அழிந்த கல்வெட்டு ஒன்று திருத்தான்தோன்றியார்க்கு நொந்தா விளக்கு எரிக்க 50 பொன் தானமாகக் கொடுத்துள்ளதைக் கூறுகிறது (121/1906). இதே இடத்திலுள்ள பராந்தகனின் 33வது ஆட்சியாண்டுச் சிதைந்த கல்வெட்டு சடையன் எழுவன் ஒரு நொந்தா விளக்கு தானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது (124/1906).

ஆண்டறிக்கையில் வராத சில கல்வெட்டுகள் இங்கு உள்ளன. ஜம்புநாதர் கோயிலின் நுழைவில் கீழே பாவிய தட்டைக் கல்லில் உள்ள கல்வெட்டு வாளையூர்த் தான்தோன்றியார்க்கு விளக்கு தானம் கொடுத்ததை விளக்குகிறது. அம்மன் அகிலாண்ட ஈசுவரி கருவறையின் தெற்குச் சுவர்ப் பகுதியில் தரையில் மண்ணால் மறைக்கப்பட்ட ஒரு துண்டுக் கல்வெட்டின் மூலம் மூதேவி கோயிலுக்கு இரண்டு நொந்தா விளக்கு எரிக்க நிலம் தானமாகக் கொடுத்துள்ளது தெரிகிறது.

ஜம்பையில் உள்ள குன்றில் ஒன்றான ஆள் ஏறாப்பாறை என்னும் பாறையில் பராந்தகனின் 40ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. தென்னவன் பிரம்மாதிராஜன் தன் ஆணை மூலம் ஸ்ரீ கண்டராதித்த ஆதித்தகரத்துத் தேவருக்குச் சிறுபனையூர் என்ற ஊரினைத் தேவதானமாகத் தன் நான்காம் ஆண்டு 162ஆம் நாளில் அளித்ததைக் குறிக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை முன்னாள் இயக்குநர் டாக்டர். இரா. நாகசாமி அவர்கள் இதில் வரும் கண்டராதித்த ஆதித்தகரம் என்பதை, ஸ்ரீ கண்டராதித்த அதீதகரம் எனப் படித்துள்ளார். ஆதித்தகரம் என்று படித்தால், சூரியனுக்கு எடுக்கப்பட்ட கோயில் என்றும், ஆதீதகரம் என்று படித்தால் பள்ளிப்படை என்றும் பொருள் மாறுபாடு வரும்.

இச் சிறுபனையூர் என்னும் சிற்றூர் இன்றும் இதே பெயருடன் ஜம்பையிலிருந்து 7 கல் தொலைவிலுள்ளது. இச் சிறுபனையூரின் எல்லைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலுக்கு அமுது படைக்கத் தேவதானமாகச் சிறுபனையூரைக் கொடுத்ததாகக் கல்வெட்டு கூறுகிறது.

இதன் அருகிலுள்ள மற்ற இரண்டு சிதைந்த கல்வெட்டுகள், தென்னவன் பிரமாதிராஜன் தினம் இருபது உழக்கு வீதம் ஓராண்டுக்குத் தேவையான நெல்லைக் கோயிற் பண்டாரத்திற்கு ஸ்ரீ கண்டராதித்த ஆதித்தகரத்து தேவற்கு வழங்கக் கொடுத்துள்ளான். அதே இடத்திலுள்ள மற்றொரு கல்வெட்டு அவனே விளக்கு எரிக்க, ஸ்ரீ கண்டராதித்த ஆதித்தகரத்துப் பண்டாரத்திடம் ஒன்பது கழஞ்சுப் பொன் தானமாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

## மூன்றாம் கிருஷ்ணன்

இராட்டிர கூட மன்னனான இவன் கி.பி.949ல் தன் மைத்துனன் இரண்டாம் பூதுகன், பாணர்கள், வைதும்பர்கள் ஆகியோருடன் கூட்டணி அமைத்துக் கொண்டு தக்கோலம் என்னுமிடத்தில் பராந்தகனின் முதல் மகன் இராசாதித்தனை எதிர்த்துக் கடும் போர் புரிந்தான். இப் போரில்தான் இராசாதித்த சோழன் ஆனை மேல் அமர்ந்து போர் செய்து கொண்டிருந்த போது இரண்டாம் பூதுகனால் அம்பு எய்யப்பட்டுக் கொல்லப்பட்டான்.

மூன்றாம் கிருஷ்ணன் (கன்னரதேவன்) சோழ மண்டலத்தில் சில பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்தான். இவனுடைய கல்வெட்டுகள் தென்னார்க்காடு வரை கிடைக்கின்றன. ஜம்பையில் இவனுடைய கல்வெட்டுகள் 12 உள்ளன. 12 கல்வெட்டுகளில் தற்போது நமக்கு கிடைப்பவை 6 கல்வெட்டுகளே.

கன்னரதேவனின் கல்வெட்டுகள் எல்லாம் சிதைந்த கல்வெட்டுக்களே. பிற்காலத்தில் கோபுரம் கட்டும்போது இவற்றைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

ஜம்புநாதர் கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் கிழக்குச் சுவரிலுள்ள கல்வெட்டு, தான்தோன்றியீஸ்வரத்து ஐஞ்ஞூற்றுவ வீதிவிடங்கருக்கு, இரணபீமமங்கலத்துச் சபையார் நீர்நில விலையாவணம் செய்து கொடுத்ததைக் கூறுகிறது (97/1906).

கோபுரத்தின் இடது பக்கத்திலுள்ள கல்வெட்டு நித்தம் உழக்காக எண்ணை கொடுத்து நொந்தா விளக்கு எரித்ததைக் குறிக்கிறது. கோபுரத்தின் தெற்குச் சுவரிலுள்ள மற்றொரு கல்வெட்டு, வாளையூர்த் தான்தோன்றியார்க்கு நொந்தா விளக்கெரிக்கப் பொன் கொடுத்ததைக் கூறுகிறது (110/1906). அதே இடத்திலுள்ள கன்னரதேவனின் 26ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சூரிய தேவர்க்கு ஒரு நொந்தா விளக்கு எரிக்க குணமங்கலத்து ஆயத்தார் 96 சாவா மூவாப் பேராடுகள் வழங்கியுள்ளதைத் தெரிவிக்கிறது(112/1906). 24ம் ஆட்சி ஆண்டில் ஒரு நந்தா விளக்கு எரிக்க வடுகன் காளையன் ஆச்சன் என்பான் நகரத்தார் மூலமாக 15 கழஞ்சுப் பொன் தானமாகக் கொடுத்துள்ளான் (116/1906). 23ம் ஆட்சியாண்டில் வாளையூர் வீதிவிடங்க தேவர்க்கு வேணாடுடையார் நாட்டடிகள் என்பார் ஒரு நொந்தா விளக்கு எரிக்கத் தானம் கொடுத்தார் (118/1906). 28ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு நொந்தா விளக்கு எரிக்க நகரத்தார் வழி பொன் தானமாகக் கொடுத்ததையும், ஈழவிளக்கு ஒன்று வழங்கியதையும் குறிக்கின்றன (125,126,/1906). முதல் பிரகாரத்திலுள்ள கிழக்கு வெளிச்சுவரில் உள்ள கன்னரதேவனின் கல்வெட்டு ஒன்று சூரிய தேவர்க்கு விளக்குதானம் கொடுத்ததைக் கூறுகிறது (437 / 1938).

இவ்வூரிலுள்ள ஐந்து சிவன் கோவில்களில் ஒன்றான அல்லிநாதர் கோயில் அழிந்து போய் வயலின் நடுவே

ஆவுடையாருடனும், லிங்கத்துடனும் சிதறிய செங்கற்களுடனும் சிதைந்து, காட்சி அளிக்கிறது. இக்கோயிலின் அருகில் அமைந்துள்ள மிகச் சிறு பாறையில் இரண்டு கல்வெட்டுகள் அமைந்துள்ளன. இச் சிறுபாறை அருகே மூதேவி கற்சிலை ஒன்றும் உள்ளது. தக்கோலப் போரில் தன்னிடம் அடைக்கலம் புகுந்து உதவிய வைதும்ப மன்னனுக்கு மலாடு, வாணகொப்பாடி, சிங்கபுர நாடு ஆகியவற்றை ஆட்சி செய்யும் உரிமையைக் கன்னரதேவன் நல்கினான். வைதும்ப மன்னன் இப்பகுதியில் பிரதிநிதியாக இருந்து ஆட்சிசெய்தவன் (எபி.இந்.தொ.*VII* பக்.*142-144*). கன்னரதேவனின் 18ம் ஆட்சியாண்டில் வைதும்ப மன்னன் திருவைய்யனார் சங்கரப்பாடியாரிடம் 20 கழஞ்சுப் பொன் கொடுத்து ஆண்டுதோறும் எண்ணை ஊற்றி நகரீச்சுவரத்து ஆழ்வார்க்கு விளக்கு எரிக்கக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் கூறுகிறது(*441/1938*). அதன் கீழே உள்ள கன்னர தேவனின் 23ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தக்கோலப் போரில் கன்னர தேவனின் வெற்றிக்கு உதவிய வைதும்ப மன்னனின் மெய்க்காப்பாளன், கைக்கோளர் பிரிவைச்சார்ந்த அணுக்கன் தூதுவன் என்பான் வாளையூர் நகரின் நகரீசுவரத்துக்கு விளக்கு எரிக்க வாளையூரிலுள்ள வளஞ்சியரிடம் 15 கழஞ்சுப்பொன் கொடுத்ததைக் குறிக்கிறது (*442 / 37-38*).

முதலாம் இராசராசன் (கி.பி.985-1014)

இவனது 5 கல்வெட்டுகள் ஜம்பையில் உள்ளன. 26ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் வடபுறம் விஷ்ணு துர்க்கைக்குக் கீழே உள்ள அதிட்டானப் பகுதியிலுள்ளது. முன் மண்டபத்திற்குள் சிறிது மறைந்து விட்டது. மறுவூராகிய வைரமேகச் சதுர்வேதி மங்கலத்தின் சபையோர் இவ்வாளையூராகிய நித்த விநோதபுரத்துத்

திருத்தான்தோன்றி ஈசுவரமுடைய மகாதேவர்க்கு நிலத்தை விற்றுத் தானம் கொடுத்தார்கள்.

கருவறை மேற்குச் சுவரிலுள்ள லிங்கோத்பவருக்குக் கீழே அதிட்டானப் பகுதியில் இவனுடைய 28ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இவ்வூர் (வாளையூர் = ஜம்பை) வியாபாரி திருநாவலூரினைச் சார்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்யாது வாழ்க்கைத் துணையாகக் கொண்டிருந்தான். ஒரு நாள் இரவில் அந்தப் பெண்ணை அங்காடி பொற்றாமன் என்பான் வலிந்து பற்ற நினைத்து முன்னவன் முன்னிலையிலேயே செய்த செய்கையால், வெகுண்டு அவனைக் குத்திக் கொன்று விடுகிறான். இக்காரணத்தால் அவன் மீது வழக்கு நடக்கவில்லை. எனினும் தானாகத் திருத்தான்தோன்றீசுரர் கோயிலுக்குச் சென்று, அங்கு ஒரு நொந்தா விளக்கு எரிக்க 20 மஞ்சாடிப் பொன் தானமாக வழங்கினான்(77/1906) எனத் தெரிவிக்கின்றது.

அர்த்த மண்டபத்தின் தெற்கு வெளிச்சுவரில் கணபதிக்குக் கீழே உள்ள 26ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு முற்றுப் பெறாமல் சிதைந்து உள்ளது. முதலாம் இராசராசனின் சிற்றரசன் மறவன் நரசிங்க வர்மனான இராச ராசவாணகோவரையன், பெண்ணை வடகரைப் பிரமதேயமான வதுனையிலிருந்து பெறும் நெல்லை நித்தவிநோதபுரத்துத் திருத்தான்தோன்றி ஈசுவரமுடைய தேவற்கு ஒவ்வொரு வேளைக்கும் நானாழி (நான்கு நாழி) ஆக மூன்று வேளைக்கும் அமுது படைத்தளிக்கக் கொடுத்திருக்கிறான்(86/1906).

இதே இடத்திலுள்ள இராசராசனின் 24ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சிற்றரசன் இராசராச வாணகோவரையன் அரையர்களாதித்தப் பேரேரி என்ற ஏரி

ஒன்றை வெட்டி வைத்ததைக் கூறுகிறது. நெற்குன்றமாகிய வையிரமேகச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோர் குளம் வெட்டுவதற்கான நிலத்தை எடுத்துக்கொண்டு, அதற்குச் சமமான வேறு நிலத்தைக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் கூறுகிறது (84/1906).

முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1012 - 1040)

25ம் ஆட்சியாண்டில் ஐயங்கொண்ட சோழ மண்டலத்து வாணகொப்பாடியான மதுராந்தக வளநாட்டு பெண்ணை வடகரை வாளையூராகிய நித்த விநோதபுரத்து நகரத்தார், திருத்தான்தோன்றியுடைய மகாதேவருக்கு நந்தா விளக்குகள் எரிக்கவும், முன்னரே பொறுப்பு ஏற்றுக் கொண்ட நிவந்தங்களுக்காகவும், ஒவ்வொரு நகரத்தாரும் தத்தம் வணிகத் தொடர்பில் இருந்து குறிப்பிட்ட இனங்களின் வழி கொடுக்க வேண்டியவற்றை வரையறுத்து இறுதி செய்ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது(82/1906).

இவனுடைய 14வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று முழு மெய்க்கீர்த்தியுடன் இருக்கிறது, முன்மண்டபத்தில் துவாரபாலருக்குப் பின்னாலுள்ள சுவர்ப் பகுதியில் அது உள்ளது. திருத்தான்தோன்றி ஈஸ்வரமுடைய கோயில் திருவுண்ணாழிகையார்கள் ஆன ஆதித்தன், தெக்கணான், சிறுத்தொண்டன் ஆகியோர் வசம் ஒரு நொந்தா விளக்கு எரிக்க நானூற்று நாற்பத்தொன்பது சாவா மூவாப் பேராடுகள் தானமாக வழங்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

முதலாம் இராசேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று சிதைந்து காணப்படுகிறது. வியாபாரி ஒருவர் ஆடவல்லாரை எழுந்தருளுவித்ததாகக் கல்வெட்டு கூறுகிறது. மடப்பள்ளிக்கு (முன் மண்டபத்திலுள்ளது) எதிரே உள்ள இக்கல்வெட்டு சிதைந்து காணப்படுகிறது.

இவனுடைய 21ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சுங்க (வரி) அதிகாரிகள், இரண்டு திருநொந்தா விளக்குகளைத் தானமாகக் கொடுத்துள்ளதைத் தெரிவிக்கிறது. திருத்தான்தோன்றி ஈசுவரர்க்கு ஒருவிளக்குக்கு உழக்கு எண்ணெ வீதமும், துர்க்கையாற்கு (கோயிலுக்கு) மற்றொரு சந்தி விளக்குக்காக அரைப்படி எண்ணையும் கொடுத்தனர் (*75/1906*). கருவறையின் மேற்குச்சுவரில் லிங்கோத்பவரின் இடப்பக்கம் உள்ள கல்வெட்டு இராசேந்திரனின் முழு மெய்க்கீர்த்தியுடன் உள்ளது. பின்னால் உள்ளவை படிக்க இயலாமல் சிதைந்து உள்ளன. செய்திகள் தெரியவில்லை (*79/1906*).

முதலாம் இராசாதிராசன் (கி.பி.1018 - 1054)

முதலாம் இராசாதிராசனின் 32ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, முன் மண்டபத் தெற்கு வெளிச் சுவரிலுள்ளது. ''திங்களேர் தரு'' என மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. வெண்காடனான நரேந்திர சூளாமணி வேளான் என்பவர், இக்கோயில் ஆடவல்லாருக்கு நந்தாவிளக்கிடுவதற்குச், சங்கரப்பாடியாரிடம் 20 காசுகள் அளித்ததையும், சங்கரப்பாடியார் தினமும் உழக்கு எண்ணெயைக் கொண்டு சந்திரனும் சூரியனும் உள்ளவரை விளக்கு எரிக்கக் கடவதாகச் செய்ததையும் குறிக்கிறது(*81/1906*).

இரண்டாம் இராஜேந்திரன் (கி.பி.1052-64)

இவனது மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; ஒரு கிராம வரிவசூலிக்கும் அலுவலன் பெண்ணைத் தென்கரை நரிப்பள்ளி நாட்டுக் கூகூர் பாடி மலையமான் கட்டி மேலூருடையான் பழங்கூரன் குன்றன் என்பவன்; இவன் வீரர்புத்திரனின் தாய் சேந்தன் உமையாள் என்பவளிடம் வரியைக் கட்டும்படி கேட்டான். அவளோ தன்னால்

இப்போது இயலாது என்றாள். கிராம அலுவலரோ அரசனிடம் புகார் செய்வதாகக் கூறினார். துன்பம் தாழ முடியாமல் அப்பெண் உமையாள் நஞ்சு உண்டு மாண்டாள். இதனை அறிந்த நான்குதிசைப் பதிணெண்பூமி நாநாதேசிகள் அனைவரும் கூடி, அக்கிராம அலுவலனே உமையாள் சாவுக்குப் பொறுப்பு எனக் கூறி, அப்பெண்ணின் சாவுக்கு இவனைப் பழியாக்கினர். இப்பழி தீர, (பாவத்தை போக்க) ஒரு நொந்தா விளக்கு திருத்தான்தோன்றியாற்கு எரிக்க 32 காசுகள் கொடுத்தான் அவன். இவ்விளக்கு எரிக்கத் தேவையான எண்ணெயில் 2 பங்கு மணிக்கிராமத்தாரும், ஒரு பங்கு சங்கரப்பாடியாரும் தருவதாக ஒத்துக் கொண்டார்கள். எண்ணெய் அளவு, அருள்மொழிதேவன் மரக்காலோடு ஒக்கும் உழக்கால் நித்தம் உழக்கெண்ணையாகும் (80/1906).

ஜம்புநாதர் கோயிலில், துவாரபாலருக்குப் பின்னால் உள்ள இவனது மற்றொரு கல்வெட்டு சிதைந்து உள்ளது. விளக்குத் தானம் கொடுத்ததைப் பற்றிக் கூறுகிறது.

### வீரராஜேந்திரன் (கி.பி.1063 - 1070)

இவனுடைய 6ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ''வீரமே துணையாக'' எனத் தொடங்குகிறது. இவன் காலத்தில் இவ்வூருக்கு வீரராசேந்திரபுரம் எனப் பெயர். வீர ராசேந்திரபுரத்து நகரக் கணக்கன், அக்கன் பல்லமுடையான் என்பவனுக்குத் திருத்தான்தோன்றிக் கோயிலின் மடமுடைய மஹாவிரதி இலகுலீஸ்வர பண்டிதன் மற்றும் இவ்வூர் சத்திரத்தில் உள்ள பிடாரர்கள், தேவகன்மிகள் உள்ளிட்ட பல நிவந்தக்காரர்கள், நிலக்கொடை யளித்துள்ளனர். கோயில் கணக்கு நல்ல முறையில் எழுதவேண்டும் என்பதற்காக ஐநூறு குழி மனையும் படப்பையுமாக உள்ள

நிலம் இறையிலி (வரியற்ற)யாகக் கொடுக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிக்கிறது (100/1906).

முன் மண்டபத்தின் தெற்குச்சுவரிலுள்ள 5ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விளக்கு எரிக்க கொடுத்த தானத்தைக் கூறுகிறது. பெண்ணை வடகரை வீரராஜேந்திர புரத்து (ஜம்பை) வியாபாரி, திருத்தான்தோன்றி ஈசுவரமுடையார்க்குத் திருநொந்தா விளக்கு எரிக்கப் பத்து காசு கொடையாகக் கொடுக்கிறான். இந்தப் பத்து காசைப் பெற்றுக் கொண்ட கருவறையில் பணிபுரியும் திருவுண்ணாழிகையார் விளக்கெரித்தல் வேண்டும் (83 / 1906).

முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070 - 1122)

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் எட்டு இங்குள்ளன. இவனுடைய காலத்தில்தான் இவ்வூர் சண்பை என வழங்கப்படுகிறது. இவனுடைய நாற்பதாம் ஆட்சியாண்டில், அரசியல் அதிகாரி வாணகோவரையன் சுத்த மல்லன் முடி கொண்டான் என்பான், தான் தோன்றியீஸ்வரமுடைய மகாதேவர்க்கு நித்த நிவந்தங்கள் குறையின்றி நடக்க, ஓர் ஊரினைத் தரவேண்டுமென்று அரசனிடம் விண்ணப்பம் செய்ய, அவனும் குளக்குடியான வீர சோழநல்லூரின் புரவுவரி, திணைக்களத்து உள்வரி ஆகியவற்றைச் சண்பையான வீரராஜேந்திரபுரத்துத் திருத்தான்தோன்றி ஈசுவரர்க்குத் தானமாக வழங்கினான். அவ்வகையில் 43 கழஞ்சு மாடைப்பொன்னுக்குச் சமமான 79 கழஞ்சுப்பொன்னைத் தானமாகக்கொடுத்தான். கொடுத்த வீர சோழநல்லூரின் எல்லைகளும் குறிக்கப் பட்டுள்ளன (68/1906).

குலோத்துங்க சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பின்வரும் செய்தியுள்ளது. வாணகொப்பாடி

ராஜராஜ வளநாட்டு, பெண்ணையாற்றின் தென் கரையில் இருக்கும் கொன்றை நாட்டு முடியனூரைச் சேர்ந்தவன் பள்ளிச்சேரியடியநம்பியான கோவலரையப் பேரையன். பெண்ணை வடகரை செங்குன்ற நாட்டு வாளை வெட்டியிலிருக்கும் வேளாளன், பொன் பற்றியுடையான் குன்றன் சீருடையான். இந்தச் சீருடையான் மேலே அந்தக் கோவலரையன் என்பான் விலங்கு வேட்டையின் போது தவறுதலாக அம்பு போட்டுச் சாகடித்துவிட்டான். எனவே பத்தொன்பது நாட்டுச் சித்திரமேழிப் பெரிய நாட்டோர் வழக்கை ஆய்ந்து அந்த கோவலராயன் பேரரையன் மேலே பழியாக்கினார்கள். இப்பழியைப் போக்க அந்தக் கோவலராயன் திருத்தான்தோன்றி ஈசுவரர் ஆலயத்தின் கருவறையில் பணிபுரியும் திருவுண்ணாழிகையார் வசம் 64 சாவா முவாப் பேராடுகளைக் கொடுத்து இரண்டு திருநந்தா விளக்குகள் சந்திரசூரியர் இருக்கும் வரை எரிப்பதாகத் தானம் கொடுத்தான் (67/1906).

சிதைந்துள்ள 20ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கருவறையின் மேற்கு வெளிச்சுவர் அதிட்டானப் (லிங்கோத்பவருக்குக் கீழே) பகுதியிலுள்ளது. மெய்குன்ற வளநாட்டில் திருத்தான்தோன்றியாற்கு இறையிலியாகக் கொடுத்த நிலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது (78/1906).

சிதைந்துள்ள 27ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பெண்ணை வடகரை சண்பையிலுள்ள மாகேஸ்வரக் கண்காணி செய்வார்களும், தேவகன்மிகளும், கோயிற் கணக்கரும் மற்றுள்ள தானத்தார்களும் சேர்ந்து, தன்ம வாணியர்களுக்குத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார் கோயிலுக்குத் திருக்கொடி, கும்பத்திற்கான துணிகள் போன்ற கோயிலுக்குத் தேவையான துணிவகைகளை வழங்குவதற்காக, குணமங்கலம் என்ற ஊரில், 200குழி

நன்செய் நிலம் விலைக்கு வாங்கி அதனைத் தானமாக வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கிறது(95/1906).

இவனுடைய 41ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒரு குறுநிலத் தலைவனைக் குறிக்கிறது. கங்கை கொண்ட சோழ வளநாட்டு, திருமுனைப்பாடிக் குன்றத்தூர் நாட்டு கிளியூர் மலையமான் சகிரயன் அனுப்பூவன் ஆன குலோத்துங்க சோழ மலையகுலராயன் என்ற அவன், குணமங்கலமான வீர சோழ நல்லூரின் நஞ்சை புஞ்சையின் சிறுபாடி காவல், பெரும்பாடி காவல் வரிகளைப் பெண்ணை வடகரை சண்பைத் திருத்தான்தோன்றி ஈசுவரர்க்கு அர்த்தசாம வழிபாட்டுக்கும், திருவமுது படைக்க நான்கு நாழி அரிசிக்கும், நெய் அமுது, தயிர் அமுது, கறியமுது, அடைக்காய் அமுது மற்றும் வெஞ்சனம் ஆகியவற்றிற்கும் தானமாக வழங்கியுள்ளான் (430/1938).

முதலாம் குலோத்துங்க சோழனின் 49ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு செங்குன்ற நாட்டு கைக்கோளன் ஒருவன் உத்திரத் திருநாளுக்கும், திருவாதிரைத் திருநாளுக்கும் செங்கழுநீர்ப் பூவால் திருப்பள்ளித் தாமம் (மாலை) செலுத்த இருபத்திரண்டு பொன் திருவுண்ணாழிகையார் வசம் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது (429/1938).

ஒரு துண்டுக் கல்வெட்டில் இவனுடைய 10 ஆட்சியாண்டு குறிப்பிடப்படுகிறது. ஒரே ஒரு வரி மட்டும் உள்ளது. மற்றொரு கல்வெட்டு இவனுடைய 50ஆம் ஆட்சியாண்டில் இக்கோயில் கண்காணி செய்பவனும், தேவதானக் கோயில் கணக்கனும் குணமங்கலத்தில் அரசன் கொடுத்த இரு நூறு கழனி நிலத்தை (நன்செய்) இக்கோயில் உக்கிர ஆயோகரனிடம் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

விக்கிரம சோழன் (கி.பி.1118-1135)

இவனுடைய 11ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, ஓர் நிகழ்ச்சியினைக் குறிக்கிறது. பெண்ணைத் தென்கரை கடம்பூரில் வாழும் வேள்ளாளந் கூடல் என்பானுக்கும் இவ்வூரில் உள்ள பிச்சன் பன்மன் கண்டன் என்பானுக்கும் இடையே நடந்த சண்டையில், கூடல் என்பானைப் பிச்சன் குத்திக் கொன்றுவிட்டான். கூடல் குலத்தைச் சார்ந்த, அவன் உறவினர்கள், உடன்பிறந்தாருடன் வழக்கு குறித்துப் பேசிய நாட்டார் வழங்கும் தீர்ப்பை ஏற்பதாகப் பிச்சன் கூறினான்.

சண்பையிலிருக்கும் திருத்தான்தோன்றி ஈசுவரர் கோயிலுக்கு விளக்கு ஒன்றும், திருநாகீசுவரர்க்கு ஒரு நந்தாவிளக்கும் எரிக்க 64 பசுக்களைக் கூடலுடையான் குலத்தார் கொடுக்க வேண்டுமென முடிவு செய்யப் பெற்றதைக் குறிக்கிறது (92/1906).

விக்கிரம சோழனின் ஆட்சியாண்டு சிதைந்த கல்வெட்டிலும், இதுபோன்ற மற்றொரு நிகழ்ச்சி குறிக்கப் படுகிறது. மன்றாடி சோழன் பெரியான் என்பவன் ஏதோ காரணத்தால், தன் மனைவியைப் பிடித்துத் தள்ள, அவள் இறந்தமையால், அப்பழி தீர, திசையாயிரத்தைஞ்நூற்றுவரும், நாட்டாரும் கூறியபடி இவன் இக்கோயிலுக்கு ஏதோவொரு தானம் கொடுத்துள்ளான் (91/1906).

ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஜம்பு நாதர் கோயில் கருவறையை அடுத்த சாந்தாரப் பகுதியில் உள்ளது. பெண்ணை வடகரை சண்பையான வீரராசேந்திரபுரத்து திருத்தான்தோன்றியீசுரர் கோயில் ஸ்தானத்தார்க்குக் குலமங்கலக் கழனியில் நிலம் ஒரு மாவும், கூற்றக் கழனியில் நிலம் ஒரு மாவும் சண்டேஸ்வரர் பேரில் தானமாக வழங்கப் பட்டதை இது தெரிவிக்கிறது.

சிதைந்துள்ள எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, அம்மன் கோயில், அர்த்த மண்டபத்தின் வடக்குவெளிச் சுவர்ப் பகுதியிலுள்ளது. குலோத்துங்கன் காலத்தில் சிற்றரசனாக இருந்த குலோத்துங்க சோழ மலையகுலராயன் என்பவன் இவன் காலத்திலும் சிற்றரசனாக இருந்தான். இவன் பெண்ணை வடகரை வீரராசேந்திரபுரத்துத் திருத்தான் தோன்றி ஈசுவரர்க்குப் பெண்ணைத் தென்கரையிலுள்ள தகடியில் நன்செய் நிலத்திலிருந்து வரும் சிறுபாடி காவல், சில்வரி ஆகியவற்றை, மந்திரபோநக அமுதுபடி செய்ய இத் தேவர்க்குத் தானமாக வழங்கியுள்ளான் (105/1906).

## இரண்டாம் இராஜராஜன் (கி.பி.1146 - 1172)

இரண்டாம் இராசராசனின் கல்வெட்டுகள் இங்கு மூன்று உள்ளன. இவனுடைய 6ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சோழகங்கன் ஆளவந்தான் என்பவன் பெயரில் அஞ்சினான் புகலிடம் ஒன்று நிறுவப்பட்டதைக் குறிக்கிறது.

கோடன் பாறையிலுள்ள அக்கல்வெட்டு, ''ஸ்வஸ்தி ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு ஆறாவது சம்பையான வீர ராஜேந்திரபுரத்து ஸ்ரீ கண்டராதித்தப் பெரும்பள்ளி பள்ளிச் சந்தத்து ஸ்ரீ கண்டராதித்தப் பெரும்பள்ளி பாளியுடையாந் நேமிநாதன் இட்டதுரவு. சோளகங்கன் ஆளவந்தான் அஞ்சினான் புகலிடம்'' என்றமைகிறது. இப்பள்ளியின் முனிவராக விளங்கிய நேமிநாதன் என்பார் ஒரு கிணறு அமைத்ததையும் இக்கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

இவனுடைய 16ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சண்பைத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார்க்கு மெய் குன்ற நாட்டு வாணவிச்சாதிர வேளான் என்பான் தான் தோன்றீஸ்வரத்துத் திருக்காம கோட்டத்து அழகிய

நாச்சியார்க்குத் திருவமுது, கறியமுது, திருமெய்ப்பூச்சு ஆகியவை குறைவுபடாது நடக்கத் தம்மபட்டியில் 500 குழி கொண்ட நிலப்பரப்பைத் தானமாக வழங்கியதைக் குறிக்கிறது (90/1906).

பிரகார நுழைவின் இடப்பக்கம் உள்ள ஒரு கல்வெட்டு சிதைந்துள்ளது; இரண்டு திருவிளக்கு எரிக்க கோயில் கணக்கனிடம் 60 கழஞ்சுப் பொன்னும், திருவிளக்கு ஒன்றுக்கு நாழி எண்ணையும், கண்காணி செய்வார் வசம் 50 காசும் கொடுத்ததாகக் கல்வெட்டு கூறுகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178 - 1218)

இவனுடைய கல்வெட்டுகள் பதினொன்று இங்குக் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டில் விஜயராசேந்திரன் என்னும் சிறப்புப் பெயர் குறிக்கப்படுகிறது. இவ் விஜயராசேந்திரன் முதலாம் இராசாதிராசன் எனக் கூற இயலாது. ஏனெனில் முதலாம் இராசாதிராசன் கல்வெட்டில் ஐம்பை வாளையூராகிய நித்த விநோதபுரம் எனக் குறிக்கப்படுகிறது. ஆனால் இவ்விஜயராசேந்திரன் கல்வெட்டில் சண்பையாகிய வீரராசேந்திரபுரம் எனக் குறிப்பிடப்படுகிறது.

எனவே இவ்விஜயராசேந்திரன் மூன்றாம் குலோத்துங்கன் ஆதலே வேண்டும்.

கி.பி.1216ல் இரண்டாம் இராசராச சோழனின் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற ஆளவந்தான் ஆன சோழகங்கப் பல்லவரையன் (பல்லவராயன்) என்பவனுக்குப் பிறவா வென்றான் இராசராச சிசுபாலன் என்னும் மறுபெயர் உண்டு. இவன் இச்சண்பைத் திருத்தான்தோன்றி ஆளுடையார்

கோயிலுக்கு மெய்குன்ற நாட்டு மாமாந்தூரில் திருநந்தா விளக்குப்புறமாக 1000 குழி நிலம் கொடையாக கொடுத்தான் (69/1906). மாமாந்தூர் என்பது ஜம்பையிலிருந்து 5 கல் தொலைவிலுள்ளது. இது இவனுடைய 38ம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டது. இதே ஆண்டில் இவனே திருக்காமகோட்டத்து நாச்சியார்க்கு அமுதுபடிகளுக்கு மருத்துவன்பாடியில் ஆயிரம் குழி நிலம் இறையிலி தேவதானமாகக் கொடுத்துள்ளான் (73/1906).

இவனுடைய இருபத்தினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கிளியூர் மலையமான் அழகியான் ஆகார சூரனான இராசகம்பீரச் சேதிராயனின் அணுக்கியான, காஞ்சிபுரத்துத் திருவேகம்பமுடைய நாயனார் கோயில் தேவரடியாள் புண்ணியஞ் செய்தாள் மகள் அழகிய பெருமாள் என்பவள் ஜம்பையிலுள்ள திருத்தோன்றீசுரமுடையார் கோயிலுக்குத் திருப்புரட்டாசித் திருநாட்ப் படிக்கு இறையிலியாக நன்செய் புன்செய் நிலங்களைத் தேவதானமாக கொடுத்தாள் (87/1906).

மூன்றாம் குலோத்துங்கச்சோழனின் 12ஆம் ஆட்சி ஆண்டில் நீரேற்ற பெருமாளான இராசராச சிசுபாலன், சண்பையான வீரராஜேந்திர புரத்துத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார்க்குத் திருவர்த்தசாமப் படிக்கும், திருவமுதுக்கும், கறியமுதுக்கும், நெய்யமுது, தயிரமுது, அடைக்காய் அமுது (வெற்றிலைபாக்கு) மற்றும் திருமேற்பூச்சுக்கும் ஆகும் செலவுக்குப் பெண்ணைத் தென்கரை அரங்கமான சோழன் அரம்பை சதுர்வேதி மங்கலத்து 500 குழி நன்செய் நிலத்தினை இறையிலி தேவதானமாக வழங்கியது கூறப்பட்டுள்ளது (85/1906).

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 14ம் ஆட்சியாண்டில் இவனுடைய சிற்றரசன் கிளியூர் மலையமான் சேதிராயன் ஆகார சூரனான இராசகம்பீர சேதிராயன், சண்பைத் திருக்கபாலீசுரமுடையர்க்குத் தேவதானமாக நன்செய் நிலத்தை வழங்கினான் (102 - 1906).

இவனுடைய 18ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு முற்றுப் பெறாமல் சிதைந்துள்ளது. திருத்தான்தோன்றி ஈசுவரர்க்கு அர்த்தசாம சந்திக்கு நிவந்தம் கொடுத்ததைப் பற்றிக் கூறுகிறது. மேலும் விபரம் தெரியவில்லை. இவனுடைய 22ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சிற்றரசன் இராசராச மலையகுல கோவரையன் என்பவன், திருத்தான் தோன்றி ஈசுவரர் கோவிலுக்குப் பரிச்சின்னங்கள் கொடுத்தான் என்கிறது. 37ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தொடக்கம் மட்டுமுள்ளது. செய்திகள் தெரியவில்லை. கல்வெட்டு மேலும் தொடரவில்லை.

இவனது 34ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சிற்றரசன் முனையதரையனான எதிரிலி சோழ மலையகுலராயன், சண்பை நரலோகத்தீசுவரர்க்கு திருவமுதுபடிக்காக நிலம் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது. இது ஒரு துண்டுக் கல்வெட்டு.

மூன்றாம் குலோத்துங்கனின் இரு கல்வெட்டுகள், 'விசைய ராஜேந்திர தேவர்' என்ற பெயருடன் தொடங்குகின்றன எனக் குறிப்பிட்டோம். முதற் கல்வெட்டு நான்காம் ஆட்சியாண்டில் குருகாடிகிழான் அக்கிவளவந் பல்லவராயன் மண்டைப் பிள்ளை விசயராயனின் மனைவி பெருங்கருணையாளி ஆன சுவாமிக்குப் பிழையாதாள் முன் மண்டபத்திலுள்ள மடைப்பள்ளியைச் செய்வித்தாள்

என்கிறது. இக்கல்வெட்டு மடைப்பள்ளியின் சுவரில் உள்ளது. அமுதுபடிக்குத் தேவையான நிலங்களை மடப்பள்ளிப் புறமாகவும் கொடுத்திருக்கிறாள் இவள் (49/1906).

மற்றொரு நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, குருகாடிகிழார் கோயிலின் வாயிலையும், முன் கோபுரத்தையும் எடுப்பித்ததைக் குறிக்கிறது (114/1906)

## மூன்றாம் இராசராசன் (கி.பி.1216 - 1260)

இவன் வலுவற்ற அரசன். வடக்கே போசளர்களும், தெற்கே பாண்டியர்களும், வல்லரசுகளாக முயன்று கொண்டிருந்தார்கள். சிற்றரசர்கள் கலகம் செய்யத் தலைப்பட்டார்கள். தெலுங்குச் சோழர்கள் காகதீயரைத் துணையாகக் கொண்டு வலிமை பெற்றார்கள். மகத நாட்டு வாணகோவரையர், திருமுனைப்பாடி நாட்டுக் காடவராயர் ஆகியோர் குழப்பம் விளைவித்தனர்.

கி.பி.1216ல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பாண்டிய நாட்டில் முடி சூட்டப் பெற்றான்; சிறந்த வீரன்; இளமையில் மூன்றாம் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டில் செய்த அழிவுகளைக் கண்ட அவன் சோணாட்டின் மீது பழிவாங்கத் துடித்தான். மூன்றாம் குலோத்துங்கன் இறந்த பின்பு கி.பி.1219ல் தஞ்சையும் உறந்தையும் பாண்டியவீரர்களால் கொளுத்தப்பட்டன. திருவெள்ளறைக் கல்வெட்டு பட்டினப் பாலை பாடியதற்குப் பரிசாகக் கொடுத்த 16 தூண்களைத் தவிர ஏனைய அனைத்தையும் அழித்ததாகக் கூறுகிறது. தக்க சமயத்தில் போசளன் இரண்டாம் வல்லாளதேவனும், அவன் மகன் வீரநரசிம்மனும் உதவி புரிய வந்ததால் சுந்தர பாண்டியன் சோணாட்டை இராசராசனிடம் வழங்கினான்.

கி.பி.1231இல் மீண்டும் ஏற்பட்ட போரில் இராசராசன் தோற்றான். அப்போது பல்லவர் குலக் குறுநில மன்னன் கோப்பெருஞ்சிங்கனும், வாணகோவரையனும் கலகம் புரியத் தலைப்பட்டனர். சுந்தரபாண்டியனிடம் தோற்ற இராசராசன், குந்தள நாடு சென்று உதவிகேட்கச் சென்றவன் வழியில் சேந்தமங்கலத்தில் கோப் பெருஞ்சிங்கனால் சிறை பிடிக்கப்பட்டான். மீண்டும் போசளர்கள் வந்து மீட்டனர் (382 / 1925). ஏனெனில் வீர நரசிம்மனின் புதல்வியை இராசராசன் மணந்திருந்தான்.

மூன்றாம் இராசராசனின் கல்வெட்டுகள் இங்கு மூன்று உள்ளன. 28ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மகா மண்டலேசுரன் குமார பதும தேவராசன் என்பவன், சண்பையான வீரராசேந்திரபுரத்துத் திருத்தான்தோன்றி ஈசுவரர்க்குப் பூசைக்கும், திருப்பணிக்கும், அமுது படைக்கவும் மனந்துாய நல்லூர் என்னும் ஊரில் இருந்து பெறப்படும் அனைத்து வரிகளையும் கொடுத்தான் என்கிறது (72/1906).

மூன்றாம் இராசராசனின் இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தேவணன் என்னும் அலுவலர், சண்பையான வீரராசேந்திரபுரத்துத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனாற்குத் திருப்பள்ளிஎழுச்சி, அமுதுபடி, திருநொந்தா விளக்கு ஆகியவற்றுக்கு நிலம் தானம் கொடுத்ததைத் தெரிவிக்கிறது. அமுதுபடைக்க அரிசி குறுணியும், கறியமுது, நெய்யமுது, தயிரமுது, மற்றும் அடைக்காயமுது படைக்கவும் நிலம் தொண்ணூற்றிரண்டு குழி தானமாகக் கொடுக்கப்பட்டது (இந்நூலாசிரியரால் படிக்கப்பட்டவை).

ஜம்பைக்கு மேற்கிலுள்ள சிதைந்த கயிலைநாதர் கோயில் அதிட்டானப் பகுதியிலுள்ள இவனுடைய 23ம்

ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக்கோயிலுக்கு வீரசோமேஸ்வரன் என்னும் போசள மன்னனின் படைத் தலைவன் இறையிலியாக நிலதானம் கொடுத்ததைத் தெரிவிக்கிறது.

## கோப்பெருஞ்சிங்கன் (கி.பி.1243 - 79)

பல்லவர்கள் தென்னிந்தியாவில் கிருஷ்ணை ஆற்றுக்கும் காவிரியாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியைச் சுமார் 600 ஆண்டுகளாக ஆண்டனர். பல்லவர்களது ஆதிக்கத்தை நீக்கிச் சோழப் பேரரசை நிறுவிய பெருமை விஜயாலயச் சோழனையே சாரும். சோழர்கள் சுமார் 400 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். மூன்றாம் இராசராசனை வென்று சிறைப்படுத்திப் பட்டுக்கிடந்த பல்லவ ஆட்சிக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்த பெருமை இப்பிற்கால பல்லவகுலச் சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கனையே சாரும்.

சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்தான் இவன். சோணாட்டு மன்னனை வென்று, சோணாட்டின் வடபாகத்தைக் கைப்பற்றினான். வாணகோப்பாடி நாட்டையும் தன் அடிப்படுத்தினான். மேலும் இவன் பாண்டியரோடும், காகதியர் மற்றும் போசளரோடும் பல போர்கள் செய்து வெற்றிக் கொடி நாட்டிப் பெருவீரனாகத் திகழ்ந்தான் (கோப்பெருஞ்சிங்கன் - எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், பக்.6-8).

கோப்பெருஞ்சிங்கனுக்குப் பல சிறப்புப் பெயர்கள் உள்ளன; அழகிய பல்லவன், வாள் வல பெருமாள், மகாராச சிம்மன், சகல புவன சக்கரவர்த்தி, காடக குல திலகன் (திரா க்ஷாராமம் கல்வெட்டு), சர்வக்ஞன், கட்க மல்லன், நிச்சங்க

மல்லன் (திரிபுராந்தகம் கல்வெட்டு), பரதமல்லன், பெண்ணா நதி கேள்வன் (ஆத்தூர்க் கல்வெட்டு) நிருபதுங்கன், சொக்கசீயன் (வயலூர் கல்வெட்டு) ஆகியவை இவனது சில சிறப்பு பெயர்களாம்.

கோப்பெருஞ்சிங்கன் வாணகோப்பாடி நாட்டை ஆட்சி செய்திருக்கிறான்.ஜம்பையில் இவன் கல்வெட்டுகள் 5 காணப்படுகின்றன.

கோப்பெருஞ்சிங்கனின் 11ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சண்பையான வீரராசேந்திரபுரத்து உடையார் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனாற்குக் குணமங்கலம் என்னுமூர் நிலங்களைப் பயிர்செய்யும் பொருட்டுக் காசாய வரி, பொன்வரி, ஆளமஞ்சி வரி மற்றும் அந்தராயவரி ஆகியவற்றை நீக்கும்படிக் கோப்பெருங்சிங்கனுக்கடங்கிய தலைவன், ஆறகளூர் உடைய வாணகோவரையன் இராசராச தேவன் வன்னெஞ்சராயன் என்பவன் ஏற்பாடு செய்து கொடுத்ததைக் கூறுகிறது (தெ.இ.க.தொ. *XII* : 164).

இவனுடைய மற்றொரு 11ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, திருவண்ணாமலை கோயில் தேவகன்மியான, அரசன் திருத்தொண்ட நம்பி என்பவனிடம் சண்பை திருத் தான்தோன்றி ஈஸ்வரமுடைய நாயனார் கோயில் சிவப் பிராமணர்கள் "தோன்றி மரக்காலால் கைக்கொண்ட 60 கலம் நெல்லுக்கு வட்டியாக (பொலிசை) இரண்டு திருநாட்களிலும் திருச்சாந்து சாத்தவும் (சந்தனக்காப்பு), திருமந்திர போனகமாக அமுது படைக்கவும் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகிறது (தெ.இ.த.தொ. *XII* : 165). அமுதுக்கு வேண்டிய வெஞ்சனங்களும் கொடுப்போம் எனச் சிவப்பிராமணர்கள் ஒத்துக் கொண்டனர்.

கோப்பெருஞ்சிங்கனின் 13ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிப்பிடத்தக்க செய்தியொன்று உள்ளது. திருத் தான்தோன்றி ஆளுடைய நாயனார் கோயிலில் நிருத்த மண்டபம் [நடராசர் (ஆடவல்லான்) செப்புத் திருமேனி இருக்கும் இடம்] கட்டும் பணிநடக்கையில், அம்மண்டபம் எவ்விதக் குறைபாடும் இல்லாமல் சிறப்பாகக் கட்டி முடிக்கவேண்டும் என்று கருதி, இக்கோயில் தேவடியார் பொற்றாழ்வி என்பவளின் தம்பி ஆட்கொண்டான் என்பவன், தன் தலையைத் தானே அரிந்து கொண்டு உயிர்த்தியாகம் செய்தான். இதனை அறிந்த குறுநிலத் தலைவன் காங்கேயன்,தானத்தார்க்குத் திருமுகம் (ஆணை) அனுப்பி, ஆட்கொண்டானின் தம்பி அண்ணாமலைக்கு 150 குழி நிலம் தானமாகக் கொடுக்கச் செய்தான் (க.ஆ,அ. 119/1906 (தெ.க.தொ. *XII* எண்: 178). இதேபோன்று எடுத்த செயல் வெற்றி பெற இராட்டிரகூட மன்னன் அமோகவர்சன் என்பான், தன் இடது கையின் ஓர் விரலைத் தேவி மகாலட்சுமிக்கு வெட்டிக் கொடுத்தான் என்று ஒரு கல்வெட்டு குறிக்கிறது. (எபி. இந். தொ. *XVIII* - பக்.241). இது அன்றைய நம்பிக்கையாக இருந்திருக்கின்றதென இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

கோப்பெருஞ்சிங்கனின் 14ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; சிற்றரசன் மலையனுடையான் பொன் பரப்பினான் கோவலராயன் என்பவன், சண்பைத் திருத்தான்தோன்றி ஆளுடையார் கோயிலில் ஆண்டுத் திருவிழாவின்போது, நடக்கும் ஏழாம் நாள் பவனி (ஊர்வலம்) அன்று அமுது படைக்கத் தூணிப் பதக்கரிசிக்கும் கறிக்குமாக நெல் 10 கலம், கோயில் தானத்தாரிடம் வழங்கினான் (க.ஆ.அ. 113 / 1906, தெ.க.தொ. *XII* எண் :

182) தானத்தாரும் அதனைப் பெற்றுக் கொண்டு அந்நிவந்தம் நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டனர்.

கோப்பெருஞ்சிங்கனின் 16ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தனு நாயற்றுப் பூர்வ பட்சத்துத் திரயோதசியும் திங்கட்கிழமையும் பெற்ற உரோகிணி நாளில் திருத்தான் தோன்றி ஆளுடையார் கோயிலில் (9.12.1258) வன்னேஞ்ச ராயன் என்னும் குறுநிலத்தலைவனின் உடல் குணமாக வேண்டும் எனவேண்டி, அக்கோயிலில் 'வன்னேஞ்சன் திருநாளி'னைப் புரட்டாசி மாதத்தில் ஆவினை ஆற்றுக்கு வடக்கு, பெண்ணையாற்றுக்குத் தெற்குட்பட்ட அனைத்து நாட்டவரும் சேர்ந்து ஏற்படுத்தினர். அன்று திருவமுது, கறிஅமுது, திருவிளக்கு, திருப்பள்ளித்தாமம் ஆகியவற்றிற்கு, ஆண்டொன்றுக்கு வரும் வகையின் நாளொன்றுக்குக் குறுணி நெல் தருவதாக ஒத்துக் கொண்டனர் (க.ஆ.அ. 96/1906 (தெ.இ.தொ *XII* எண் : 191) அதற்கேற்ப எந்தெந்த ஊர்கள் என்பதும் வரையறுக்கப்பட்டது.

கோப்பெருஞ்சிங்கன் ஆட்சிக்குப் பிறகு ஜம்பைப் பகுதி (வாண கோப்பாடி நாடு) பாண்டியர்கள் வசம் வந்தது.

## பாண்டியர்கள்

பாண்டியர்கள் தமிழகத்தின் மிகத் தொன்மையான ஆளும் குலமரபினர். எனினும் சோழர் ஆட்சியின் போது சிறிது காலம், அம்மரபு ஆட்சிக் கட்டிலில் இருந்து இறங்கியது. மீண்டும் சோழப் பேரரசு வீழ்ந்த போது, முனைப்புடன் முன்னேறி, முழுத்தமிழகத்தையும் தமக்குக் கீழ் கொண்டு வந்தது. எனவே அவர்தம் கல்வெட்டுகள் தமிழகம் முழுவதும் காணக் கிடைக்கின்றன.

அவ்வகையில் பிற்காலப் பாண்டியரின் கல்வெட்டுகள் 5 ஜம்பையில் உள்ளன.

மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி.1268 - 1318)

இப்பாண்டியனின் கல்வெட்டுகள் ஜம்பையில் மூன்று உள்ளன. இவன் காலத்தில் பாண்டிய நாடு செழிப்புற்று நல்ல நிலையிலிருந்தது. இவன் கி.பி.1274ல் சேர நாட்டின் மீது படையெடுத்துச் சென்று வென்றான் (க.ஆ.அ.1926-27, பகுதி *II* பத்தி.42). எனவே இவன் 'கொல்லங்கொண்ட பாண்டியன்' என அழைக்கப்பட்டான்.

குலசேகர பாண்டியனின் 10ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பெண்ணை வடகரை வாணகோப்பாடிச் சண்பையான வீரராசேந்திர சோழபுரத்து உடையார் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனாற்குத் தன் பெயரில் ஒரு சந்தி ஏற்படுத்தி, (குலசேகரன் சந்தி), பெண்ணைத் தென்கரை மெய்குன்ற நாட்டு நரலோக தீரன் பட்டு என்ற ஊரில், நன்செய், புன்செய் அடங்கிய 3½ வேலி நிலத்தினை இறையிலியாக வழங்கியதைத் தெரிவிக்கிறது (க.ஆ.அ. 74/1906 (தெ.க.தொ. *XXII* எண்:74).

குலசேகர பாண்டியனின் 33ம் ஆட்சியாண்டுச் சிதைந்த கல்வெட்டு, பல்வேறு பயிர் விளைப்போர் கட்டவேண்டிய வரி பற்றிக் கூறுகிறது. 1) நன்செய்நிலம், 2) வெற்றிலைப்பயிர், 3) இஞ்சி மஞ்சள், 4) அலசந்திப்பயறு சாமை, 5) எள், கொள் என வகைப்படுத்தப்பட்டு, வரிவசூலிக்கப்பட்டதை இக்கல்வெட்டிலிருந்து அறிய முடிகிறது(438 / 1938).

33ம் ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொரு குலசேகர பாண்டியனின் கல்வெட்டு சண்பையான வீரராசேந்திர

புரத்துத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார் கோயில் தானத்தார்கள், திருநாள் நடத்தவும், கோயிலில் திருப்பணிகள் செய்யவுமாகக் குறைவுபட்ட 31 பணத்தினை ஈடு செய்யவேண்டியிருந்தது. மேலும், குடிநீங்கா தேவதானமாக மனந்துய்ய பெருமாள் நல்லூரில் இருந்த தேவதான நிலங்களுக்கு, நாட்டார் குறிப்பிட்ட வரியினைக்கட்ட வேண்டியதும் இருந்தது. இந்தச் செலவுகளுக்காகக் கோயில் நிலங்களை, மணலூரைச் சேர்ந்த திருக்கோட்டி ஆழ்வான் பெரியான் ஈசுவர பட்டனுக்குக் காணி உரிமையாக மாற்றி வழங்கியதை இக்கல்வெட்டு குறிக்கிறது (க.ஆ.அ. 98/1906 தெ.க.தொ. *XXII* எண்.98).

## மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கி.பி.1281 - 1289)

இவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்குத் தம்பியாவான். இவன் கல்வெட்டுகள் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவனுக்கு இராசாக்கள் நாயன் என்னும் சிறப்பு பெயர் உண்டு. இவனுடைய கல்வெட்டு ஒன்று ஜம்பையில் உள்ளது. அது இரண்டு துண்டுகளாக உள்ளது.

முதற் கல்வெட்டு முதல் பிரகாரத்தின் கிழக்குச் சுவர் பகுதியில் வெளியே உள்ளது; நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இது. இதில் மகாபலி வாணாதிராயர் என்பார் விக்கிரம பாண்டியனின் ‘முதலி’யாகக் குறிக்கப்படுகிறார். அதே இடத்திலுள்ள மற்றொரு துண்டுக் கல்வெட்டு நரலோக ஈசுவர முடையார்க்கு, குறுநிலத் தலைவன் முனயதரையன் வேட்டுவன் ஆளவந்தான் இருங்கோளன் என்பான் திருவமுதுபடிக்குச் செய்த ஏற்பாட்டைக் குறிப்பதாகத் தெரிகிறது (436/1938).

### சடையவர்மன் சுந்தரபாண்டியன்
(கி.பி.1318 - 1336) அல் (கி.பி.1329-1347)

இவர்தம் கல்வெட்டுகள் சேலம், கடப்பை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் காணப்படுகின்றன. இப்பெயரில் இரு கல்வெட்டுகள் ஜம்பையில் உள்ளன.

அர்த்த மண்டப வடக்கு வெளிச்சுவரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுளது. சண்பையான வீர ராசேந்திரபுரத்து உடையார் திருத்தான்தோன்றி ஈசுவர முடையார்க்கு, அமுது படைக்கவும், வெஞ்சனம் மற்றும் திருமேற்பூச்சுக்கும் நரியார் ஏந்தல் என்னும் சிற்றூரைத் தேவதானமாகக் கொடுத்துள்ளனர். யார் கொடுத்தது போன்ற பகுதிகள் பொறிக்கப்படவில்லை. கல்வெட்டு முற்று பெறாத நிலையில் உள்ளது **(70/1906)**.

அதே இடத்தில் உள்ள சடையவர்மன் சுந்தர பாண்டியனின் 17ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு திருத்தான் தோன்றியாற்கு மகதை மண்டலத்து நரிப்பள்ளி நாட்டு இறை வானறையூரைச் சேர்ந்த பார்க்கவன் ஊர்பாகங்கொண்டானும், கௌசிகன் யக்ஞ மூர்த்தி என்பானும் தம் காணியான நிலங்களைப் 'புவனேகவீரன் சந்தி'க்கும், திருப்பணிக்குமாக, கோயில் தானத்தாரிடம் குடிநீங்கா தேவதானமாக முதலடங்கக் கொடுத்ததைத் தெரிவிக்கிறது **(76/1906)**.

## விஜய நகர மன்னர்கள்

### முதலாம் விருபாக்ஷர் (கி.பி.1377 - 1404)

இவர் இரண்டாம் அரிகரனுக்கும் மல்லதேவிக்கும் பிறந்தார். கி.பி.**1377-1400** வரை தமிழ்நாட்டின் பிரதிநிதியாக இருந்து ஆட்சி செய்தார்.

இவருடைய கல்வெட்டு ஒன்று ஜம்பையிலுள்ளது. ஜம்புநாதர் கோயில் அர்த்த மண்டபத்தின் மேற்கு வெளிப் புறத்துச் சுவரிலுள்ளது, பிரபவ ஆண்டு, சித்திரை மாதம், **28**ம் நாள், புனர்பூசம், பஞ்சமி, செவ்வாய்க்கிழமையன்று இக்கோயிலைச் சார்ந்த தானத்தார் வன்னேஞ்ச பெருமாள் மகன் சூரிய தேவன் என்பவனுக்குத் ''திருத்தூது விண்ணப்பஞ்செய்தல்'' என்னும் திருப்பணிக்காக நிலத்தைத் தானமாக கொடுத்தனர் எனத் தெரிவிக்கிறது (**433/1938**).

## இரண்டாம் விருபாக்ஷர் (வீரபிரதாப விருபாக்ஷதேவர்) (கி.பி.1465 - 1486)

மல்லிகார்சுனனுக்கு இராசசேகரன் என்னும் இளையமகன் இருந்தும், சிற்றப்பன் பிரதாப தேவராயருடைய மகன் வீரபிரதாப விருபாக்ஷ தேவராயர் வன்முறையில் அரியணை ஏறினார். இவருடைய கல்வெட்டு ஜம்பையில் ஒன்று உள்ளது. சகம் **1393** (கி.பி. **1471**), நந்தன ஆண்டு, மிதுன மாதம், உத்திராடத்து நாளினைச் சேர்ந்தது. வாணகோப்பாடி சண்பையான வீர ராசேந்திரசோழபுரத்து திருத்தான்தோன்றி நாயனார் கோயிலில், ஒட்டர்கலகம் (ஒட்டியன் கலபை) காரணமாகப் பத்து ஆண்டுகள், பூசைகள் குலைந்தும், மதில் உடைந்தும், ஆறும் அலையும் சரிந்து கோயிலும் பாழ்பட்டிருந்ததைச் சரிசெய்து, கோயில் திருப்பணியும் மகாபூசையும் செய்வதற்காக, இம்மடி இராமப்ப நாயக்கர் திம்மப்ப நாயக்கர் இறுக்கும் வரியிலிருந்து, **50** பொன் ஆண்டுதோறும் கொடுக்குமாறு ஏற்பாடு செய்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது (**93 / 1906**).

## சாளுவ நரசிம்மர் (கி.பி.1486 - 91)

'சாளுவ' என்னும் சொல் வேகமாய் பறந்து வேட்டையாடும் ராசாளிப் பறவையைக் குறிக்கும். இவர்

முன்னோர் குமார கம்பணனின் ஓலைநாயகமாக பணியாற்றியவர். கி.பி.1450ல் தன் தந்தைக்குப் பிறகு சந்திரகிரியின் மகா மண்டலேசுவரப் பொறுப்பை வகித்தார். கி.பி.1485இல் சாளுவப்புரட்சி மூலம் விஜயநகரப் பேரரசின் மன்னர் ஆனார். இவரது கல்வெட்டுகள் இரண்டு ஜம்பையில் உள்ளன.

சகம் 1410 (கி.பி.1488)இல் சண்பையான வீர ராஜேந்திரபுரத்துத் திருத்தான்தோன்றி உடையார்க்குச்செய்த ஏதோவொரு ஏற்பாட்டினைக் கோபுரத்தின் இடப்பக்கம் கீழே கிடக்கும் கல்வெட்டுக் குறிக்கிறது. மற்றொரு கல்வெட்டு சகம் 1422இல் (கி.பி.1490) பெண்ணை வடகரை சண்பையான வீரராஜேந்திரபுரத்தில் உள்ள அய்யனார் கோயிலுக்கு விஜய நாயக்க தேவன் என்பான் பெண்ணையாற்றின் கரையில் உள்ள தேவதான நிலங்களில் இருந்து வசூலிக்கப்படும் வரிகள் சிலவற்றைக் கொடுத்ததைக் குறிக்கிறது.

### துளுவ வீர நரசிம்மர்

விஜய நகரப் பேரரசின், துளுவ வம்சத்தைச் சேர்ந்த வீரநரசிம்மர், கிருஷ்ண தேவராயரிடம் ஆட்சி பொறுப்பைக் கொடுத்து சிற்றரசுகளின் கலகத்தை அடக்கச் சென்றார். இவருடைய கல்வெட்டு ஜம்பையில் ஒன்று உள்ளது.

ஜம்புநாதர் கோயிலின் முன் மண்டபத்தின் வடக்கு வெளிச்சுவர் பகுதியில் அமைந்துள்ள இக்கல்வெட்டு, சகம் 1429 (கி.பி.1507)ல் இப்பகுதியின் சிற்றரசனான போத்திய சோழ மகாராசனின் மகன் இராமயசோழ மகாராசன் என்பான், திருத்தான்தோன்றி ஈசுவரர்க்குக் குணமங்கலம் என்னும் ஊரில் 600குழி நிலம் கொடுத்தான் என்கிறது. இதிலிருந்து நித்தம் இரண்டு சந்திகளிலும் கறியமுது மற்றும் அமுது படைக்கவும் ஏற்பாடு செய்தான்.

இதே சிற்றரசன் இராமயசோழன் ஜம்பு நாதர் கோயிலின் மகாமண்டபத்தைக் கட்டியுள்ளான். மேலும் விபரம் கலை, கட்டிடப் பகுதியில் காண்க.

அச்சுத தேவராயர் (கி.பி.1530 - 1542)

கிருஷ்ணதேவராயரின் மகன் ஒரு வயதுக் குழந்தையாக (திருமலை) இருந்ததால், தம் தம்பியாகிய அச்சுதராயருக்கு அவர் முடிசூட்டினார்.

ஜம்பையில் அச்சுததேவ மகாராயரின் கல்வெட்டுகள் நான்கு உள்ளன. ஒன்று கோபுரச் சுவரினுள் மறைக்கப் பட்டுள்ளது.

சகம் 1455 (கி.பி.1533)ல் சண்பைத் திருத்தான் தோன்றிக் கோயிலில் செயம்புநாதத் தம்பிரான் என்பவருக்குச் செண்பகராயப்பிச்சன் என்ற பட்டம் கொடுத்து, கோயிலில் 'சாமநாயகத்தனம்' என்ற பதவியும் கொடுத்ததைக் குறிக்கிறது. இவர், திருப்பணி, திருநாள், திருத்தேர், கொடி, குடை, திருத்தேர்ப் பந்தம், தாள்விளக்கு, பல்லக்கு எழுந்தருளச் செய்தல் ஆகிய அனைத்தையும், தம் ஆளிட்டுத் தவறாது செய்தல் வேண்டும் என்கிறது கல்வெட்டு. அதற்கென அவருக்குக் கிழக்குத் திருவீதியில் 60 அடிமனை ஒன்றும், நன்செய், புன்செய் நிலங்களும் கொடுக்கப்பட்டன. அதோடு, நாள்தோறும் முந்நாழிச் சோறும், ஒரு பணியாரம், பாக்கு வெற்றிலை மூன்றும் தரப்படும் என்றும், தானத்தார், ஊரவர் ஆகிய இருவருக்கும் அடுத்த வரிசையில் கோயிலில் சுவந்தரம் (மரியாதை?) பெறும் உரிமையும் கொடுக்கப்பட்டது (க.ஆ.அ, 89/1906 தெ.இ.தொ.*XXII* எண் :89).

மற்றொரு கல்வெட்டு சகம் 1552 (தவறாக உள்ளது) ஆண்டு நந்தன வருடம், கற்கடக நாயிற்றுப் பூர்வ பட்சத்துச்

சோமவாரத்தில் ‘வையப்ப நாயக்கர் அய்யன் ஆகாமி அச்சுதைய தேவமகாராயர் சந்தி’ என்ற வழிபாட்டினைச் சண்பைத் திருத்தான்தோன்றி ஆளுடையார் கோயிலில் ஏற்படுத்தி, அதற்கான நெய்வேத்தியங்கள் போன்றவற்றுக்கு, வேங்கடாத்திரி நாயக்கர் என்பார் நிர்வாகத்தில் உள்ள இராவுத்தநல்லூர் சீர்மையிலமைந்த பெண்ணைத் தென்கரை மகதை மண்டலத்து மெய்குன்ற நாடான நரிப்பரி நாட்டில் ஆக்கைப்பாடியின் அனைத்து ஆயங்களும் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது; இதன் எல்லை வருமாறு: சீபாத நல்லூர் எல்லைக்கு மேற்கு; கீழ்பாற்கெல்லை அரும்புடையான்பட்டு; மேற்பாற்கெல்லை ஆதனூர் எல்லைக்குக் கிழக்கு; வட பாற்கெல்லை சுத்தமல்லிகை எல்லைக்கும் தன்மம்இட்டநல்லூர் எல்லைக்கும் தெற்கு.

மற்றொரு கல்வெட்டு சகம் **1554** (தவறுதலாக உள்ளது). ஞாயிற்றுக் கிழமை பூர்வ பட்சத்தில், சண்பையின் தானத்தார், கைக்கோளர், செட்டிகள் சேர்ந்து, காளத்தி ஆண்டார் மடத்தினை நிர்வாகிக்கும், கற்சூல பற்வதம்மாள் காத்தயர் சிஷ்யர், காளத்தி ஆண்டார் மகதை மண்டல சிவனிடம், குடிக்கு ஒருபணம், சிறுகுடிக்கு அரைப்பணம், கலியாணத்துக்கு ஒரு பணம் என்ற வகையில் கொடுப்பதாக முடிவுசெய்ததைக் குறிக்கிறது (க.ஆ.அ. **103/1906**, தெ.க.தொ.*XXII*, எண்.103) இதே செய்தி குறித்த மற்றொரு கல்வெட்டு அம்மன் கோயிலின் தெற்குச் சுவரிலும் உள்ளது. (க.ஆ.அ. 101/1906, தெ.க.தொ.*XXII*, எண்.101)

கோபுரத்தின் நுழைவில், இடப்பக்கம் உள்ள கல்வெட்டு சகம் 1452 (1454க்கு பதிலாகத் தவறுதலாகக் குறிக்கப்பட்டுள்ளது) கி.பி.1532ம் ஆண்டில் (நந்தன ஆண்டு), அச்சுததேவ மகாராயரின் காலத்தில் இப்பகுதியின் காவற்பணிப் பொறுப்புடைய வையப்ப நாயக்கன் என்பான்

24 தேவதான ஊர்களில் முன்பிருந்தே சோடி, சூலவரிகள் இக்கோயிலுக்குரியவை என்று கூறி, வேலூர் பொம்மு நாயக்கன் ஆளுநராக இருந்தபோது அதனைத் தொடர்ந்து தருமாறு வேண்டிப் பெற்றதைக் குறிக்கிறது (க.ஆ.அ. 127/1906, தெ.க.தொ.*XXII*, எண்.127).

சதாசிவராயர்

அச்சுதராயருக்குப்பின் சதாசிவராயர் பொறுப்பேற்றார். அவரது கல்வெட்டுகள் ஜம்பையில் 3 உள்ளன.

ஆனந்த ஆண்டு பங்குனி மாதத்தில், சண்பைத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார் உலாத் திருவிழாவின்போது, திருக்கை வழக்கம், காணியூட்சை, வருஷவர்த்தனை ஆகிய செலவுகளுக்காக உண்ணாமலை நாயனார் எல்லப்பர் என்பவர் வசம், நடுத்தெருவில் ஒரு மனையும், சில நிலமும் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது. கல்வெட்டின் முடிவில் தானத்தாரும், நாட்டாரும் கையொப்பமிட்டிருக்கின்றனர் (க.அ.ஆ.88/1906 தெ.இ.தொ.*XXII*, எண்.88).

மற்றொரு கல்வெட்டு சகம் 1481ஐச் சேர்ந்தது (கி.பி.1559). இக் கோயில் தேவியான அழகிய நாச்சியார்க்கு சிற்றரசன் அடப்பம் சூரப்ப நாயக்கரய்யன் கிருஷ்ணப்ப நாயக்கரய்யன் சதாசிவராயர் நன்மைக்காக, நரிப்பள்ளி நாட்டு சுத்தமல்லியில் நிலம் அளித்து தினம் ஒன்றுக்கு முப்பது விளக்காக சந்தி விளக்கு எரிக்கக் கட்டளையிட்டுள்ளார்.

இந்த சுத்தமல்லிகை நிலத்தைச் சண்பைச் தேவ அடியாரில் ஆதியப்ப மாணிக்கம் மகள் இராமய மாணிக்கம் ஏற்றுக் கொண்டு, அதில் பயிரேற்றி அதன் மூலம் தினம் ஒன்றுக்கு முப்பது விளக்கு ஏற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் கீழே ஊரார், கணக்குப் பிள்ளை, மற்றொருவர்

கையெழுத்திட்டு உள்ளனர். (க.ஆ.அ.104/1906, தெ.க.தொகுதி *XXII*,எண்.104). (இக்கல்வெட்டின் இறுதிப்பகுதி நூலாசிரியரால் நேரில் படிக்கப்பட்டது.) சுத்தமல்லிகை பெண்ணைத் தென்கரையில் இப்போது சித்தமலை என்னும் பெயரில் உள்ளது. ஜம்பையிலிருந்து எட்டு கல் தொலைவிலுள்ளது.

ஜம்புநாதர் கோயிலின் கோபுர நுழைவின் இடப் பக்கத்திலுள்ளது மற்றொரு கல்வெட்டு. சுவருக்குள் மறைந்து சிதைந்துள்ள இக்கல்வெட்டு, நிலம் தானம் கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது (க.ஆ.அ.120/1906. தெ.க.தொகுதி *XXII*, எண்.120)

## நாயக்கர்கள்

வாணகோப்பாடிச் சண்பையான இப்பகுதி செஞ்சி நாயக்கர்களால் ஆளப்பட்டது. ஜம்பையில் செஞ்சி நாயக்கரின் கல்வெட்டு நடுப்பாறை என்னுமிடத்தில் உள்ளது. ஆண்டு அழிந்துள்ளது.

லட்சுமிபதி நாயக்கரின் கீழ் பணிபுரியும் கிரியப்ப நாயக்கரின் கீழ் அலுவலர் எல்லப்ப நாயக்கரால், சண்பை நாத வெட்டியார் என்பவருக்கு (திருத்தான்தோன்றி ஈசுவரர்க்குப் பணிபுரிய) எண்பது குழி நிலத்தை, வழங்கியதைக் குறிக்கிறது (445/1938).

## சிற்றரசர்கள்

ஜம்பை இருக்கும் பகுதி வாணகோப்பாடி என்ற நாட்டுப் பெயரால் அழைக்கப்பட்டது. எனவே இப்பகுதி வாணர்கள் என்றும் சிற்றரசர்தம் பகுதியாக இருந்தது என்பது தெரிகிறது. மகாபலியின் வழிவந்தவர்களாகத் தம்மைக் கூறிக் கொள்ளும் இவர்கள், பல்லவர் ஆட்சிக்கு முன்பிருந்தே இப்பகுதியில் ஆட்சி செய்திருக்கின்றனர்.

பல்லவர் நடுகற் கல்வெட்டுகள் 'வாணகோ அரைசரு மக்கள்', 'வாணகோ அரைசரு மருமக்கள்', வாணகோ அரைசரு சேவகர்' எனப் பலர், போரில் இறந்ததைக் குறிக்கின்றன. எல்லா எல்லைப்புறச் சிற்றரசர்களையும் போல, இவர்களும் பேரரசுகள் வீழும்போதும், எழுச்சிபெறும் போதும், முறையே தனியாட்சி செலுத்தியும், குறுநிலத் தலைவர்களாய்ப் பேரரசுகளுக்குப் படைகொடுத்தும், மகள்கொடுத்தும் தம் நிலைகளை நிறுத்திக் கொண்டனர். இராஜராஜன் வாணகோப்பாடியினை வெற்றி கொண்டதைத் தன் மெய்க்கீர்த்தியில் குறித்துக் கொள்கிறான்.

இப்பகுதியில் பல சிற்றரசர்களின் பெயர்களும், ஆட்சியும் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

வைதும்பர்

பராந்தகன் காலத்தில் ஐயனடி (வைதும்ப மன்னர் திருவய்யனாக இவன் இருத்தல் கூடும்) என்னும் தலைவனின் ஆளுகையில் தென்னவன் பிரமாதிராஜன் என்ற அதிகாரி ஐம்பைக் குன்றில் அமைந்த ஸ்ரீ கண்டராதித்த ஆதித்தகரத்துத் தேவற்குத் தேவதானமாகச் சிறுபனையூர் என்னும் ஊரை வழங்கியுள்ளான் (க.ஆ.அ. 443/1938).

மூன்றாம் கிருஷ்ணனின் சிற்றரசர்களாய் இருந்து இப்பகுதியை ஆட்சி செய்த வைதும்ப மன்னன் விக்கிரமாதித்தன் திருவய்யனார் (கி.பி.948-958) என்பவர் இவ்வூர் நகரீசுரத்து ஆழ்வார்க்கு விளக்கெரிக்க தானம் கொடுத்துள்ளார் (க.ஆ.அ.441/1938). இவனுடைய மெய்க் காப்பாளன் அணுக்கன் தூதுவன் என்பான், இதே கோயிலுக்கு விளக்கெரிக்க வாளையூரிலுள்ள வளஞ்சியரிடம் 15 கழஞ்சுப் பொன் கொடுத்துள்ளான் (க.ஆ.அ.442/1938).

பாணர்

முதலாம் இராஜராஜன் காலத்தில் பாணர்கள் இவனுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இப்பகுதியை, ஆண்டு வந்தனர். மறவன் நரசிங்க வர்மனான இராசஇராச வாணகோவரையன், ஜம்பைப் பகுதியை ஆட்சி செய்து வந்தான். தன் கல்வெட்டில், முதலில் இராஜராஜனின் மெய்க்கீர்த்தியைப் பொறித்துப் பின் தொடர்ந்து தன் கல்வெட்டைப் பொறித்துள்ளான் (க.ஆ.அ.86/1906). இவன் ஆறகளூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தவன்.இவன் கள்ளக் குறிச்சிப் பகுதியை ஆட்சிசெய்த இராசராச கோவலராயன் மகள் புண்ணியவாட்டியை மணந்தான். இந்த புண்ணியவாட்டி ஆறகளூரில் தன் கணவன் பெயரால் இராசராச விண்ணகரம் எடுப்பித்தாள் (க.ஆ.அ.447/1913). இராஜராஜனின் 24ஆம் ஆண்டில் இவன், அரையர்களாதித்தப் பேரேரி என்ற குளத்தினை ஜம்பையில் வெட்டுவித்த செய்தி தெரிகிறது (க.ஆ.அ.84/1906).

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் பல குறுநிலத் தலைவர்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன. வாணகோவரையன் சுத்த மல்லன் என்னும் வாண அரசன் ஒருகல்வெட்டில் குறிக்கப்படுகிறான். இவன் கருணாகரத் தொண்டைமானுடன் கலிங்கம் சென்று போரில் அவன் வெற்றிக்கு உதவியவன். மேலப் பழுவூரிலுள்ள செங்கற் கோயிலைக் கற்றளியாக மாற்றினான். இவ் வாணகோவரையன் சுத்தமல்லன், சண்பைத் திருத்தான்தோன்றித் தேவற்குக் குளக்குடி என்னும் சிற்றூரைத் தானமாக கொடுத்தான் (க.ஆ.அ.68/1906).

மலையமான்

குலோத்துங்க சோழனின் 41ம் ஆட்சியாண்டில், மற்றோரு சிற்றரசன் குறிக்கப்படுகிறான். இச் சிற்றரசன்

கங்கைகொண்ட சோழ வளநாட்டு, திருமுனைப்பாடிக் குன்றத்தூர் நாட்டுக் கிளியூர் மலையமான் சகிரயன் அனுப்பூவனான கொலொத்துங்கசோழ மலையகுலராயன். இவன் குணமங்கலமான (குலக்குடி) வீரசோழ நல்லூரின் நன்செய் புன்செயின் சிறுபாடி, பெரும்பாடி காவல்களை (வரிகளை) ஜம்பைத் திருத்தான்தோன்றியற்கு அமுது படைக்க வழங்கியுள்ளான் (க.ஆ.அ.430/1938).

முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் சிற்றரசனாக இருந்த குலோத்துங்க சோழ மலையகுலராயன் என்பான் விக்கிரம சோழனின் 8ம் ஆட்சியாண்டிலும் குறிக்கப்படுகிறான். தான்தோன்றியாற்குத் தென்கரை தகடியில் நன்செய் நிலங்களிலிருந்து வரும், வரிகளைச் சிறுகாலைச் சந்தி மந்திரபோநகத்திற்குத் தானமாகக் கொடுத்துள்ளான் (க.ஆ.அ.105/1906).

இரண்டாம் இராசராசன் காலத்தில் வாணவிச்சாதிர வேளான், ஜம்பைத் திருத்தான்தோன்றித் தேவற்குத் தம்மப்பட்டியில் 500 குழி கொண்ட நிலப்பரப்பைத் தானமாக வழங்கியுள்ளார் (க.ஆ.அ.90/1906).

மூன்றாம் குலோத்துங்கனின் 24ஆம் ஆட்சியாண்டில் மற்றொரு சிற்றரசன் கிளியூர் மலையமான் அழகியான் ஆகார சூரனான இராச கெம்பீரச் சேதிராயர் ஆன திருவண்ணாமலைப் பெருமாள், சம்பைத் திருத்தான் தோன்றியாற்கு நிலம் தானமாக விட்டுள்ளான் (க.ஆ.அ.102/1906).

மேற்சொன்ன இராசராச சிசுபாலனின் மற்றொரு கல்வெட்டு திருத்தான்தோன்றியார்க்கு அமுது படைக்க 600 பூமி நிலப்பரப்பைத் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது (க.ஆ.அ.85/1906).

குலோத்துங்க சோழனின் 14ம் ஆட்சியாண்டில் இராச கம்பீரச் சேதிராயரின் அணுக்கி சண்பைத் திருக்கபாலீஸ்வர முடையார்க்கு நிலம் கொடை அளித்தாள்(க.ஆ.அ.87/1906). கி.பி. 1201ல் மற்றொரு சிற்றரசன் பொன்பரப்பினான் இராச ராச மலையகுல கோவலராயன் பரிச்சின்னங்கள் கொடுத்தான். முனையதரையனான எதிரிலி சோழ மலைய குலராயன் நரலோகத்தீஸ்வர முடையார்க்குத் திருவமுது படிக்கு நிலம் விட்டான்.

## கங்கன்

ஜம்பைக்கருகிலுள்ள கோடன்பாறையில் அமைந்துள்ள கல்வெட்டு அடைக்கலம் புகுந்த ஒரு சிற்றரசனைப் பற்றிக் கூறுகிறது. சோழகங்கன் ஆளவந்தான் என்ற குறுநிலத் தலைவன் பெயரில் சம்பையான வீரராசேந்திரபுரத்தில் ஒரு பகுதி அஞ்சினான் புகலிடமாக ஏற்படுத்தப்பட்டது.

தொடர்ந்து மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுகளிலும் சோழகங்கன் ஆளவந்தான், குறிப்பிடப்படுகிறான். இவன் காலத்தில் சோழகங்க பல்லவராயன் ஆளவந்தானே, பிறவா வேந்தன் இராசராச சிசுபாலன் என்று குறிக்கப் பெறுகிறான். இவன் மாமாந்தூரில் கோயில் எடுப்பித்தவன், சம்பை திருத்தான்தோன்றியாற்கு நிலம் நன்கொடையாகவும், (க.ஆ.அ.73/1906) காமக்கோட்டத்து நாச்சியார்க்கு 400 குழி நிலம் தானமாகவும் கொடுத்தான் (க.ஆ.அ.69/1906).

## பிறர்

மூன்றாம் இராசராசன் காலத்தில் பதுமதேவரசன் என்பவன் இப்பகுதியின் குறுநிலத் தலைவனாக இருந்தான். திருத்தான்தோன்றியாற்கு மனந்துய்ய நல்லூர் என்னும் சிற்றூரைத் தானமாக கொடுத்தான் (க.ஆ.அ.72/1906).

இவனுடைய நடுகல் ஒன்று ஜம்பை ஓடையிலுள்ளது. விபரம் நடுகல்லில் காண்க.

கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் இவனுடைய 11ம் ஆட்சியாண்டில் இராசராச தேவன் வன்னெஞ்சராயன், குணமங்கலத்தின் காசாயவரி, பொன்வரி, ஆளமஞ்சிவரி மற்றும் அன்தராய வரிகளைச் சண்பைத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனாற்கு வழங்கினான் (க.ஆ.அ.122/1906). இவனுடைய 14வது ஆட்சியாண்டில் மலையன் உடையான் பொன்பரப்பினான் கோவலராயன் என்னும் மலையகுலத்து மன்னன், சண்பைத் திருத்தான்தோன்றியாற்கு ஏழாம் நாள் விழாச் செலவுக்காக நெல் வழங்கினான் (க.ஆ.அ.113/1906).

சோழர் ஆட்சி வலிமையிழந்து, பாண்டியர் இப்பகுதியைக் கைப்பற்றிய போது இதே குறுநிலத் தலைவர்கள், பாண்டியர் மேலாதிக்கத்தை ஏற்றனர்.

விக்கிரமபாண்டியன் காலத்தில் குறுநிலத் தலைவனான மகாபலி வாணாதிராயன், திருத்தான்தோன்றி யாற்குத் திருநாள், திருவமுதுக்கு நிலம் கொடுத்துள்ளான். மற்றொரு முதலியான முனையதரயன் வேட்டுவன் ஆளவந்தான் இருங்கோளன் என்பான் திருவமுதுபடிக்கு நிலம் தானமாகக் கொடுத்தான் (க.ஆ.அ.436/1938).

வீர நரசிங்கராயர் விஜயநகரத்தை ஆண்டபோது இப்பகுதியின் பிரதிநிதியாக இருந்தவன் பொத்திய சோழ மகாராசனின் மகன் இராமயசோழன் (க.ஆ.அ.94/1906). இவன் இக்கோயிலிலுள்ள முன் மண்டபத்தை எடுப்பித்தவன் என்பது முன் மண்டபத்து விதானத்திலுள்ள கல்வெட்டால் நன்கறியலாம். இவன் குணமங்கலம் என்னும் ஊரிலிருந்து வரும் வரிகளைத் தானமாகக் கொடுத்துள்ளான்.

அச்சுத தேவராயர் ஆட்சிக் காலத்தில் இப்பகுதியின் அதிகாரியாக இருந்த வேங்கடாத்திரி நாயக்கர், நல்லூர் என்னும் ஊரைத் தானமாகக் கொடுத்தார் (க.ஆ.அ.**106/1906**).

சதாசிவ மகாராயர் ஆட்சிக் காலத்தில் அரசனின் அடப்பம் (வெற்றிலை பாக்கு மடித்து கொடுப்பவர்) சூரப்ப நாயக்கனின் மகன் கிருஷ்ணம நாயக்கர், சதாசிவராயனின் நன்மைக்காகத் தேவி அழகியநாச்சியாருக்குச் சந்தி விளக்கெரிப்பதற்காகச் சிறுவாங்கூர் சீர்மையான மங்கலத்துப் பிடாகை சுத்த மல்லிகை கிராமத்தினைக் கொடையளித்துள்ளார் (க.ஆ.அ.**104/1906**).

## பெயர்களற்ற மற்றும் இதர கல்வெட்டுகளின் செய்திகள்

ஜம்பையில் மன்னன் பெயர்களற்ற மற்றும் இதர கல்வெட்டுகள் **35** உள்ளன. இவைகளில் சில, கல்வெட்டு ஆண்டு அறிக்கையில் வெளிவந்துள்ளன. இவற்றின் செய்திகளை இனிக் காண்போம்.

ஜம்புநாதர் கோயில் அர்த்த மண்டபத்தின் தெற்கு சுவரிலுள்ள **16-17** நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட கல்வெட்டு, உடையார் சண்பைத் திருத்தான்தோன்றி ஈசுவமுடையாற்குத் தேவதானமாக நிலம் கொடுத்ததைக் குறிக்கிறது. அடுத்து உள்ள கல்வெட்டு ஒரு முக்கியமான கல்வெட்டாகும், ஜம்புநாதர் கோயிலின் மகாமண்டபத்தின் விதானத்தில் அமைந்துள்ள இக்கல்வெட்டு, பொத்திய சோழ மகாராசன் குமாரன் இராமய சோழ மகாராசன் தர்மமாக இம்மகா மண்டபத்தை கட்டினான் என்கிறது. இவன் **16**ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் விஜயநகரப் பேரரசை ஆண்ட சாளுவ வீர நரசிங்கராயரின் சிற்றரசனாவான் (க.ஆ.அ.**94** -

1906). மகாமண்டபத்தின் ஆறாவது தூணில் 'இது பதும வேன்தந் விரகன் வீரன்' என்ற பெயர் உள்ளது.

ஜம்புநாதர் கோயிற் கருவறையின் எதிரில் திருச்சுற்று மாளிகையின் மேற்குப்புறத்தே நான்கு தூண்களில் பதுமதேவன், தனியாண்டை என்னும் பெயர்கள் உள்ளன. பதுமதேவன் என்பவன் மூன்றாம் இராசராசனின் சிற்றரசன் (72/1906). இவனைப் பற்றி நடுகல் பகுதியிலும் காண்க. இப்பிரகாரத்தை இவன் கட்டியிருக்கலாம். தனியாண்டை, பட்டாண்டை என்பன தேவரடியாரின் பெயர்கள். மேலும் இதே இடத்தில் அதிட்டானப் பட்டிகைப் பகுதியில் உள்ள மற்றொரு கல்வெட்டு, தேவரடியாரில் பட்டாண்டை மகள் கடைப்பிடி அழகியாள் என்பவள் புவனாபதி நாச்சியார் என்னும் திருமேனியைச் செய்து கொடுத்ததைக் கூறுகிறது (432/1938). இச்செப்புத் திருமேனியைப் பற்றிக் கலை கட்டிடப் பகுதியில் காண்க.

வெளித் திருச்சுற்றில் உள்ள மடப்பள்ளியின் அருகே நாலுகால் மண்டபத்தில் 17-18ஆம் நூற்றாண்டு எழுத்தமையில், 'சுற்றங்காத்த செட்டியார் குமரன் உரிசகதராயன் தன்மம்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், கோபுரத்தின் கிழக்கு, வடக்குச் சுவர்களில் இடம் மாறியும் தலைகீழாகவும் சில கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் இருந்து ஆமணக்கு, வெற்றிலை, பயிறு, கரும்பு, மஞ்சள், இஞ்சி, கேழ்வரகு, தினை, கருணை, சிறுகிழங்கு ஆகிய பயிரினங்கள் பயிரிடப்பட்டபோது செலுத்த வேண்டிய வரிகள் நெல்லாகக் குறிக்கப்பட்டுள்ள செய்தியை அறிகிறோம்.

மற்றும் இரண்டு கல்வெட்டுகள் திருத்தான் தோன்றியாற்குத் தேவதானம் கொடுத்ததைப் பற்றிக்

கூறுகிறது. ஜம்பைக்கு வடக்கே உள்ள ஒருசிறு தட்டைக் கல்லில் கி.பி.1920ல் தீ. வைத்திய கவுண்டர் தர்மம் கொடுத்ததைப் பற்றி ஒரு கல்வெட்டுள்ளது. ஜம்பைக்கு மேற்கே ஒண்டி அய்யனார் கோயிலுக்குப் பெரியநாட்டு வேளாளர் 9 குழி நிலம் தானமாகக் கொடுதுள்ளார் (க.ஆ.அ. **447/1938**).

கயிலைநாதர் கோயிலுக்கு மேற்கே அழிந்த சைனியம்மன் கோயிலுக்கருகில் உள்ள கல்வெட்டு சாளுவ நரசிங்க ராயரின் ஆட்சிக் காலத்தில், வையப்ப நாயக்கன் என்பவன் இச் சமணக்கோயிலுக்கு, ஜோடிவரி, சூலவரி ஆகியவற்றைத் தானமாக வழங்கியதைக் குறிக்கிறது (க.ஆ.அ. **449/1938**).

அருகிலுள்ள தேவரடியார் குப்பத்திலுள்ள திருவள்ளுவர் தெருவில் உள்ள இரண்டாம் ராசராசனின் 27ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகாரசூரன் திருவண்ணாமலைப் பெருமாள் ஆன ராஜகம்பீரச் சேதிராயன் என்பவன் சண்பைத் துர்க்கையாருக்கும் ஏரிவலஞ்செய்த நாயனரான வைரீஸ்வரமுடைய நாயனாருக்கும் அத்தமலையான் பட்டு என்னும் ஊரைத் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது (க.ஆ.அ.**450/1938**). இவன் தான்தோன்றீஸ்வரர் கோயில் கல்வெட்டிலும் குறிக்கப் பெறுகிறான் (க.ஆ.அ.**87/1906**).

மற்றும் ஒரு கல்வெட்டு சோதிடம், மந்திரம் போன்று மேலும் கீழும் கோடுகள் வரைந்து செவ்வக, சதுர வடிவக் கட்டங்களுடன், ஒவ்வொரு சதுரத்திற்குள்ளும், செவ்வகத்திற்குள்ளும் நான்கு நான்கு சூலங்களும் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இது சன்னியாசிக்கல்

என்று அழைக்கப்படுகிறது. இது கால்நடைகளுக்கு வரும் நோயினைத் தீர்க்க வழிபடப்படும் நம்பிக்கை அடிப்படையில் நடப்பட்டதாகும்.

## அளவுகளும் வரிகளும்

ஜம்பையிலுள்ள கல்வெட்டுச் செய்திகளிலிருந்து அக்காலத்தில் பழக்கத்திலிருந்த நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவுகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

மா, கோல், வேலி, பூமி, குழி, கழனி முதலிய நீட்டல் அளவுகளும், பலம், செம்பலம், கழஞ்சு முதலிய நிறுத்தல் அளவுகளும், உழக்கு, நாழி, மரக்கால், கலம், குறுணி, பதக்கு, தூணி முதலிய முகத்தல் அளவுகளும் அன்றிருந்தது தெரிய வருகிறது.

நில அளவு பற்றி ஒரு தெளிவான வாய்ப்பாடு திருவையாறு ஒலோக மாதேவீஸ்வரம் கோயில் கல்வெட்டில் கிடைக்கிறது (திருவையாறு - சு. இராசகோபால் எம்.ஏ., பக்.114)

மலையமான் நாடு 2000 பூமி நிலப்பரப்பு கொண்டதாகக் கல்வெட்டு கூறுகிறது (எபி.இந்.தொ. எண்.*146*). ஒரு பூமி என்பது 2 முதல் 10 வேலி அளவுள்ள நிலப்பரப்பாக இருக்கலாம் என்பது ஆய்வாளரின் கருத்து (கல்வெட்டுகளால் அறியப்படும் உண்மைகள் - டி.வி. சதாசிவ பண்டாரத்தார்).

ஜம்பையில் பல்வேறு கல்வெட்டுகளில் நீட்டல் அளவுகள் குறிப்பிடப்படுகின்றன. வீர ராசேந்திரனின் 11ம் ஆட்சியாண்டில் நாலுசாண் கோலால் 500 கோல் அளந்து ஒரு நிலமாக கொடுக்கப்பட்டுள்ளது (க.ஆ.அ. 100/1906).

ஒரு நிலம் என்பது ஒரு வேலி என திருவையாறு கல்வெட்டு மூலம் அறிகிறோம். இதுபோல இவ்வூரில் 400 குழி நிலம், 92 குழி நிலம், 200 குழி, 500 குழி, மற்றும் 80 குழிகள் பல்வேறு கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

குறுணி, நாழி, உழக்கு மரக்கால், கலம், தூணி ஆகிய முகத்தலளவுகள் குறிக்கப்படுகின்றன.

192 உழக்குகள் கொண்டது ஒரு கலமாகும்.சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும் வரிகள் நெல்லாகச் செலுத்தப்பட்டன என ஜம்பைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

பலம் என்ற முகத்தலளவு இருந்ததா அல்லது எண்ணெய் நிறுக்கப்பட்டதா என்று கருதத்தக்க வகையில் 1029 பலம் எண்ணெய் சேகரித்துத் திருத்தான்தோன்றியாற்கு விளக்கெரிக்கத் தானம் கொடுத்த செய்தி அமைகிறது (க.ஆ.அ. 82/1906). பொன், கழஞ்சு என்ற எடையில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

வரிகளைப் பற்றிய பல செய்திகள் ஜம்பைக் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. புரவுவரி, உள்வரி, இறை (க.ஆ.அ. 69/1906), பெரும்பாடி காவல், சிறுபாடி காவல் (க.ஆ.அ. 430/1938), காசாயம், பொன்வரி, ஆளமஞ்சி அன்தராயம் (க.ஆ.அ. 122/1906) போன்ற வரிகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

குலசேகர பாண்டியனின் கல்வெட்டு, எந்த எந்தப் பயிருக்கு எவ்வளவு நெல் தீர்வையாக செலுத்த வேண்டும் . எனக் கூறுகிறது (க.ஆ.அ. 98/1906).

## திருவிழாக்கள்

ஜம்பைக் கல்வெட்டுகளில் வன்னெஞ்சராயன் திருவிழா, குலசேகரன் சந்தி, புவனேகவீரன் சந்தி. நரலோகன் திருநாள் போன்றவைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. விஜயநகர ஆட்சிக் காலத்தில் முதலாம் விருபாக்ஷன் அல்லது விருப்பண்ண உடையார் ஆட்சிக்காலத்தில் "திருத்தூது'' விண்ணப்பஞ் செய்தல் நடைபெற்றது என்பதனை இங்குள்ள (ஜம்புநாதர் கோயிலுள்ள) கல்வெட்டுக் கூறுகிறது.



## ஓலைச் சுவடிகள்

சண்பையில் ஓலைச் சுவடிகள் இருவரிடம் இருந்தன. 32 கட்டுகளில் இருந்த மொத்த. ஏடுகள் 2810 ஆகும்; அவற்றில் தெலுங்குச் சுவடிக்கட்டுகள் 11. மீதி தமிழ்ச் சுவடிகள். அவற்றின் விபரம் வருமாறு;

வழங்கியவர் : நல்லதம்பி முதலியார், ஜம்பை

| | | |
|---|---|---|
| மொத்த கட்டுகள் | .. | 11 |
| மொத்த ஏடுகள் | .. | 764 |

இத் தெலுங்கு சுவடிகள் மொத்தம் 48 தலைப்புகளில் உள்ளன.

### தமிழ்ச் சுவடிகள்

வழங்கியவர் நல்லதம்பி முதலியார் - ஜம்பை.

| | | |
|---|---|---|
| 1. | சிவானந்த போதகம் | 44 |
| 2. | வீட்டுக் கணக்கு (2 கட்டுகள்) | 32, 22 |
| 3. | எண் வாய்பாடு | 14 |
| 4. | சிவன் பற்றிய பாடல்கள் | 36 |
| 5. | வாதவூர்ப் புராணம் | 264 |
| 6. | மந்திரிகம் | 48 |
| 7. | உச்சிகாளியம்மன் பேரில் விருத்தம் | 18 |
| 8. | பிரமோத்திர காண்டம் | 216 |
| 9. | திருவாசகம் | 176 |

10. திருப்போரூர் சுப்பிரமணியசுவாமி பேரில் பாடல் 57

11. பிரபுலிங்கலீலை 227

12. திருச்சதகம் 259

13. பிரபுலிங்கலீலை 46

14. அருணகிரிப்புராணம் உரையுடன் 303

வழங்கியவர் : வேங்கடேசக் கவுண்டர்
இயற்றியவர் : ஜம்பை சேவிக் கவுண்டர்.

1. செல்வ விநாயகர் பேரில் மகுடப் பதிகம் 36

2. கலியுக அதர்மக் காட்சிச் சிந்து 57

3. ஜம்பை கஸ்தூரி அம்மன் மீது மகுடப் பதிகம் 73

4. ஆர்க்கவாடி (ஆக்கைப்பாடி) மகமாரியம்மன் பேரில் பதிகம் 27

5. தாள விதி அனுஷ்டானம் 40

6. ஆர்க்கவாடி மாரியம்மன் பதிகம் 45

சேவிக் கவுண்டர் இயற்றிய பல பாடல்கள் ஜம்பு நாதரின் பெருமையை எடுத்துரைக்கின்றன. எடுத்துக்காட்டாக ஒன்று இதோ:

''பெண்ணைக் கள்வன் விதியிந்திரன் விண்ணவர் பரவ
பெண்ணைக்கி உத்திர மேவும் பிரான் கழற்பேணினெனக்
கண்ணைக் கவர்ந்து பசுநின்ற - தென்னவ கார்க்கவருங்
கொண்ணைச் சடைமுடி ஜம்பாபுரீசர் குலகுருவே''

# கோயிலும் புராணமும்

இறைவன் (ஈசன்) ஐந்து நிலைகளின் காட்சியளிப்பதாகச் சைவர்கள் கருத்து. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து நிலைகளில் இறைவன் காட்சியளிக்கிறார். ஜம்பையில் இந்த 5 வகையான நிலைகளுக்கும் கோயில்கள் உண்டு. அவையாவன;

1. காசி நாதர்
2. ஜம்பு நாதர்
3. கயிலை நாதர்
4. அல்லி நாதர்
5. கமல நாதர்

முற்காலத்தில் இந்த ஐந்து கோவில்களும் சிறப்பாக வழிபாட்டுடன் திகழ்ந்தன. ஆனால் இப்போது ஜம்புநாதர் கோயிலைத் தவிர மற்ற கோவில்கள் இடிந்து அதிட்டானப் பகுதிகளுடனும், வெறும் லிங்கம் ஆவுடையார்களுடனும் வயல்களின் நடுவே காட்சியளிக்கின்றன.

ஆனைக்கா - ஜம்பை ஒப்புமை

திருவானைக்காவிலுள்ள ஜம்புநாதர் கோயிலுக்கும் இங்குள்ள ஜம்புநாதர் கோயிலுக்கும் ஓர் ஒற்றுமை உள்ளது. காவிரியில் வடகரையில் அமைந்திட்ட அந்தத் திருவானைக்காவின் எதிர்கரையில் அமைந்த ஸ்ரீரங்கம் போல் இங்கும் மிகப் பழமையான திருவரங்கம் கோயில் இப் பெண்ணையாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

இவ்விரு கோயில்களுக்கும் பாரிசாதம், வில்வம் தலமரங்களாக உள்ளன.

புராணம்

விஜயாலயச் சோழன் காலத்தில் இவ்வூர் வாளையூர் நகரம் என அழைக்கப்பட்டதற்குப் புராணக்கதை ஒன்று உண்டு. தென் பெண்ணையாற்றின் கரையோரத்தில் ஒரு மடுவில் தானாக ஒரு சிவலிங்கம் தோன்றியது. இந்த சிவலிங்கத்தை அம்மடுவிலுள்ள ஒரு வாளை மீன் (வாளை மா முனிவர்) சேற்றிடைத் தோன்றிய சிவனாகத் தினமும் வணங்கி வந்தது; ஒரு நாள் அருகிலுள்ள கோட்டையிலிருந்து யானை வந்து நீராடித் தொல்லை கொடுத்ததால், வாளைமுனி தன் வாளால் ஓங்கி யானையின் தும்பிக்கையை அறைந்தார். யானை அலறிப் புடைத்து அரண்மனையடைந்தது. செய்தியறிந்த மன்னன், மடுவில் சேற்றை அகற்றி, தான்தோன்றி லிங்கத்தை வெளிப்படுத்தி அங்கு சிறப்பான இக்கோயிலை அமைத்தான் என்பது புராணக் கதை. இதை கற்பனை கதை என்றாலும், அருகில் அரண்மனை இருந்ததாக தெரிவிக்கிறது. இன்றும் இந்த அரண்மனை புதைந்துள்ளது, விபரம் தொல்லியல் புதைந்த அரண்மனை பகுதியில் காண்க. இப்புராணக் கதையைப் பாட்டாக என்னிடம் கூறியவர் திரு. திருவேங்கட நாராயண அய்யர் என வழங்கும் திரு. கணேச அய்யர். அப்பாடல் வருமாறு;

''வெண்ணை உருகுமுன் வெண்திரை பெருகிடும்
தென் பெண்ணை நதியின் வடபால்
நடுநாட்டுத் திருத்தலம் சண்பை என்னும் தொல்பதியில்
ஜம்பு மடு ஈசனுக்கு
யானையை அடித்திட்ட வாளைமா முனியினால்
பூசனைபுரிந்த அந்நாள்

அந்த மடு நீரினை வெளியாக்கியே அரசன்
சிறப்பாய் அமைத்த கோயில்
அண்ட புவனங்கள் அனைத்தினுக்கும் மாதா
அகிலாண்ட ஈசுவரியுமை
அம்பிகை சமேதனோடு ஜம்புகேசன் அருளை
அடைந்திட்ட அடியவர்கள்
தெய்வத் தமிழ் அமுதும் நீங்காத செல்வமும்
நிறைவாழ்வும் மிகவும் பெற்று
பிறவாத பேரின்பப் பேற்றினை எய்துவர் என்மனார்
அந்தணர் கணேசனாரே''



# புதிதாக அறியப்பட்டவை

## குறியீடு

ஜம்பையில் குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் இரண்டினைச் சேகரித்தேன். ஒன்றில் நாணில் இருந்து புறப்படும் அம்பும், மற்றொன்றில் வெறும் அம்புக்குறியும் இருக்கின்றன.

## தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பனை ஓடு

இப்பானையொடு சிவப்பாகப் பளபளப்பாக உள்ளது. 'கதி' என்னும் தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. மேல் வரியிலும் எழுத்துகள் உள்ளன. இது சிறிய துண்டு. எனவே மேல்வரியில் உள்ள எழுத்துகள் பாதியாக உடைந்துள்ளன.

## நடுகற்கள்

ஜம்பையில் ஐந்து நடுகற்கள் கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று ஜம்புநாதர் கோபுரத்தையொட்டி வடக்கு மதில் ஓரத்தில் புதைந்திருந்தது. மற்ற நான்கும் மண்ணால் மூடி புதையுண்டு ஓடை ஓரத்தில் கிடந்தன. ஒன்றில் நின்ற நிலையிலுள்ள வீரனின் இடது புறத்தில் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

மதிலின் வடக்கு ஓரத்தில் பாதி புதையுண்டு உள்ள நடுகல்லில் இவ்வீரன் தொடை வரை ஆடை அணிந்து கொண்டு, தலைப்பாகை கட்டிக் கொண்டிருக்கிறான். இரு கைகளையும் தூக்கிக் கத்தியால் தன்தலையை தானே அரியும்

நிலையில் இவ்வுருவம் செதுக்கப்பட்டுள்ளது. (நிழற்படத்தில் காண்க) இதன் காலம் கி.பி.13ம் நூற்றாண்டு.

ஜம்பையிலுள்ள மற்ற நான்கு நடுகற்களில் மூன்று பார்க்க முடியாதபடி ஓடையில் புதைந்திருந்தன. ஆய்வில் வெளிக்கொணரப்பட்டது. நின்ற நிலையிலுள்ள நடுகல்வீரன் கையில் கத்தியுடன் நிற்கிறான். முடி மேலே தூக்கிக் கொண்டையாகக் கட்டப்பட்டுள்ளது. இதிலுள்ள கல்வெட்டு வருமாறு;

''ஸ்ரீ இராசராச தேவற்கு யாண்டு ருவது பதும தேவன் ரிஷபம் ஒலிக்க எறிந்து பட்டான்'' (இந் நடுகல் க.ஆ.அறிக்கையில் வெளியிடப்படவில்லை).

மூன்றாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் பதும தேவராசன் என்பவன், சண்பைத் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார் கோயிலில், பூசைத் திருப்பணிக்கும் மற்றும் அமுது படைக்கவும், நல்லூர் என்னும் சிற்றூரைத் தேவதானமாக வழங்கியுள்ளான் (72/1906). ஜம்புநாதர் கோவிலுள் திருச்சுற்று மாளிகையிலுள்ள 5 தூண்களில், 'பதும தேவன்' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

இச்சிற்றரசன் பதும தேவராசனின் நடுகல்தான் இது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இப்பதும தேவன் ரிஷபத்(காளை)துடன் போரிட்டு இறந்து விட்டான். இவனுடைய நடுகல் அக்காலத்தில் வழிபாட்டில் இருந்திருக்க வேண்டும். இதன் காலம் கி.பி.1219 ஆகும். இதன் எழுத்தமைதியும் இதற்குச் சான்று பகர்கின்றது.

# கட்டடங்களும் கலையும்

ஐம்பை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பெரிய அரண்மனை, சிறப்பு மிக்க ஐந்து சிவன் கோயில், பெரிய பெரிய திருவீதிகள் என அமைந்து சோழர்களின் மிகப் பெரிய நகராக திகழ்ந்தது. ஆனால் இப்போது பெரும்பாலானவை அழிந்து சிற்றூராக 293 வீடுகளுடன் இயற்கை எழில் மிக்க பெண்ணையாற்றின் வடகரையில், குன்றுகள் சூழ்ந்து காட்சியளிக்கின்றது.

தொன்மையான கட்டடக்கலையை இன்றும் பறை சாற்றிக் கொண்டிருப்பவை, ஜம்பு நாதர் கோயில், சிதைந்து காணப்படும் காசி விசுவநாதர் கோயில், அதிட்டானத்துடன் காட்சியளிக்கும் கயிலை நாதர் கோயில், வெறும் லிங்கங்களுடனும், ஆவுடையுடனும் காட்சியளிக்கும் அல்லிநாதர் கோயில், கமலநாதர் கோயில் ஆகியவைகள் ஆகும். இது தவிர இடிந்து போன சமணச் சைனியம்மன் கோயில், மற்றும் சில கிராம தெய்வக் கோயில்கள் இங்கு இருக்கின்றன. இங்குள்ள கோயில்களைப் பற்றி சேவிக் கவுண்டர் இயற்றிய பாடல் வருமாறு:

திருவருணை நகருக்கு தென்பெண்ணை நதி
தீர்த்த வடகரையில் ஐம்பை,
திங்கள் பிறை அணிகின்ற ஐம்புலிங்கேசுவரர்
தேவி அகிலாண்ட வல்லி
கருணை தரும் கஸ்தூரி அம்மன் முனி அப்பனோடு
கமல பாதம் தரும் அய்யனார்

காத்தவராயன் மகமாரி அம்மைச் சாரோடு
கன்னிமார் காமாட்சியும் அகிலம் பெருகும்
அங்காள வல்லி ராசய்யனோடு அடி இணை
பெறுவோர்க்கு அல்லல் பிணி அணுகாது

வைத்தியலிங்க ஆசாரி என்பவர், ஜம்பையிலுள்ள எல்லா தெய்வங்களையும் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்;

''மலையடி வாரத்திலும் அலையடி ஓரத்திலும்
மத்தக முகத்துடனே அமர்ந்தவா! சக்தி மைந்தனாகவே
முதல் பிறந்தவா!
சித்தி புத்தியை மணந்து தேரடிதனிலமர்ந்த
அத்திமுக ஐங்கரனே! ஓடிவா! உன்னை
பக்தியாய் பாடுகிறோம் இங்கே ஆடிவா!
பெண்ணைநதிப் படிகல்லில் எண்ணையிட்டரசடியில்
வெள்ளையானை ருபங் கொண்ட ஐங்கரா!
கந்தர்க்கு வள்ளியை மணம் முடித்த சிங்காரா!
ஆசனர்க்கு பெருமதில் ஈசனியம் தன்னில் அமர்ந்தீர்!
அருகு கொன்றை தும்பை புஷ்பம் சாத்தியே,
அடி பணிந்து கரம் குவித்தோம் போற்றியே.
காலமும் தவறிடாமல் மூல ஸ்தானத்தருகே
கோலமா முதல் பூசை கொண்டவா அகிலாண்ட
ஈசுவரி சமேதராய் நின்றவா!
கமலநாதர், அல்லிநாதர் கயிலைநாதர் விசுவநாதர்
ஜம்புநாதர் பஞ்சவர் போல் ஐந்து ஸ்தலம் இருக்குதே,
இங்கு நால்வர் பாடலில்லாக் குறை வெறுக்குதே
காசி விசுவநாதர் கோயில் பாசம் பிடித்து போச்சு
இவற்றைக் கூட்டி விளக்கேற்ற ஒருவருமில்லையே
அவரைக் கண்டு தரிசிக்க நாளும் வரவில்லையே
சுத்து மதில் மேல் புறத்தே சக்தி வேல்கையில் தாங்கி

சித்து விளையாடி வரும் சண்முகா!
இந்த பக்தர்களை இரட்சித்தருள்வாய் குகா!
சங்கரனார் செஞ்சடையில் கங்கையாய் அவதரித்து
ஜம்பை பதி மேலமர்ந்த சற்குணி
செந்தமிழுக்கு உதவி செய்வாய் நிர்குணி
ஏரிக்கரைக் கீழ்புறத்தில் சாரி வரும் முனியப்பா!
ஈசுவரி கஸ்தூரி தாயே ஏசிலா
எங்களை ஆதரிக்க வேறு ரூபமாகி வா
பெண்ணை நதி வடதிசை கன்னியாம் பகவதியாள்
வெள்ள வருமுன்னே அணை போடுவாள் ஊரில்
கொள்ளை நோய் வராமல் பாதுகாப்பாள்
எம்மலக் கன்னி ஜம்பைமலை கன்னியுடன் கும்மி
கொட்டிக் கொண்டு கூத்து ஆடுவாள், நாம்
கூப்பிட்டால் செவிட்டு சத்தம் போடுவாள்
பூரணி பொய்க்கலையுடன் சாரதி குதிரையேரி
பாரினில் அய்யனாரப்பனாய் மாரி கோயில்
மேல்புறத்தில் இருப்பான்
மகமாரி அம்மச்சாரு முகம் கிழக்கு திசையில்
பழக்கப்பட்டவர் அங்கே போகலாம் பெரும்பயப்
பட்டவர்கள் வெளியேறலாம்
ஜம்பை நகர் தன்னில் வாழும் எங்கள் குல
தேவதைக்குத் தமிழில் பாடினேன் இந்தப் பாட்டையே
தாசன் வைத்தியலிங்கத்திற்கு ஒரு பல் ஒட்டையே![1]

இப்பாடலில் இங்குள்ள எல்லாக் கோயில்களும் இடம் பெற்றிருக்கின்றன.

கலைச் சிறப்புமிக்க கட்டடங்களான கோயில்களைப் பற்றி ஆய்வோம்.

ஜம்பு நாதர் கோயில்

இங்குள்ள கலைச்சிறப்பு மிக்க கட்டடங்களில், ஓரளவு முழுமையாகக் காட்சியளிப்பது ஜம்புநாதர் கோயிலாகும். இக்கோயில் பெண்ணையாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இதனைச் சுற்றி நான்கு புறமும் பெரிய மதில் உண்டு. தெற்கு மதில் சுவர் பெண்ணையாற்றின் வடகரையிலும் வடக்கு, கிழக்கு, மேற்கு மதில்கள் ஊரை ஒட்டியும் அமைந்துள்ளன. ஊர் மட்டத்தைக் காட்டிலும் நான்கு அடி பள்ளத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.


இக் கோயிலுக்குச் செல்ல இரண்டு வாயில்கள் உண்டு. கிழக்கு மதில் புறத்திலுள்ள வாயில் அடைக்கப் பட்டுள்ளது. இதன் முலையில் பிள்ளையார் கோயிலுள்ளது. வடக்கு மதில் வாயில் வழியாக உள்ளே செல்ல வேண்டும். இந்த வடக்கு மதில் வாயிலில் செவ்வக வடிவில் நான்கு தூண்கள், பெரிய அளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கோபுரம் கட்டுவதற்காக இவைகள் நிறுத்தப்பட்டவை. இக்கோபுரப் பணி முற்றுப் பெறவில்லை. இச் செவ்வக வடிவத் தூண்கள் விஜயநகர காலத்தைச் சார்ந்தவை.

முற்றுப்பெறாத இக்கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பொலிவிழந்து காட்சியளிக்கும் தொன்மையான கோயிலைக் காணலாம். இதனுள் இரண்டு சன்னதிகள் உள்ளன;

1. ஜம்புநாதர் கோயில்
2. அகிலாண்ட ஈசுவரி அம்மன் (காமகோட்டம்)

வடக்கு மதில் வாயிலின் இருந்து தொடங்கி கிழக்கே அடைக்கப்பட்டுள்ள வாயில் வரை திருச்சுற்று மாளிகை அமைந்துள்ளது.


ஜம்புநாதர் கோயில்
(நிலப்படம்)




சிவன் சன்னதி

1. கருவறை
2. அர்த்தமண்டபம்
3. முன்மண்டபம்
4. மகாமண்டபம்
5. நந்தி
6. கொடிக்கம்பம்
7. பலிபீடம்
8. மடப்பள்ளி
9. திருச்சுற்று மண்டபம்
10. பரிவார ஆலயங்கள்
11. நிருத்தமண்டபம்
12. துவாரபாலகர்கள்
13. நாலுகால் மண்டபம்
14. யானை மண்டபம்
15. சிதைவுற்ற பகுதி
16. 100 கால் மண்டபம்

திருச்சுற்றுமாளிகையில் இப்போது இருப்பது **56** தூண்களே. மற்ற தூண்கள் கீழே விழுந்து சிதைந்து முட்செடிகள் முளைத்துக் காட்சியளிக்கின்றன. இத்தூண்கள் பிற்காலச் சோழர் அமைப்பை நினைவுறுத்துகின்றன. மேடை போன்ற அமைப்புடன் இது காட்சியளிக்கின்றது. இம் மண்டபம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப் பட்டிருக்கவேண்டும். காரணம் இம்மண்டபத்தின் அதிட்டானப் பட்டிகைப் பகுதியிலுள்ள கல்வெட்டு, கோப்பெருஞ்சிங்கனின் **16**ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. (க.ஆ.அ. **96/1906**)



## மடப்பள்ளி

திருச்சுற்று மாளிகைக்கு எதிரே கிழக்காகத் தெற்கு மதிலை ஒட்டி ஒரு மடப்பள்ளி அமைந்துள்ளது. மற்றொரு மடப்பள்ளி ஜம்புநாதர் கோயிலுக்குள்ளயே அமைந்துள்ளது. அதில்தான் மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு உள்ளது. இரண்டும் சோழர் அமைப்பை நினைவுறுத்துகின்றன. உள்ளே நான்கு புறமும் திருச்சுற்று மேடை போன்ற அமைப்பு உள்ளது.

## நான்கு கால் மண்டபம்

மடப்பள்ளிக்கு அருகே தெற்கு மதிலைச் சார்ந்து கட்டப்பட்டுள்ள சிறிய நான்குதூண் மண்டபம் உள்ளது. இது விஜயநகர நாயக்கர் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம். இதில் ஒரு கல்வெட்டு உள்ளது.

அக்கல்வெட்டு வருமாறு;

''சுற்றங்காத்த செட்டியார் குமரன் உசரிதராயன் தன்மம்''

எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டின் எழுத்தமைதி 18ம் நூற்றாண்டினைச் சேர்ந்தது.

## யானை மண்டபம்

மேற்கு மதிலும், தெற்கு மதிலும் சந்திக்கும் முலையில் அமைந்துள்ளது இம் மண்டபம். ஒரு அடி உயரத்தில் யானை உருவம் பொறிக்கப்பட்ட செவ்வக வடிவிலான கற்கள் தரைமட்டத்தில் அமைந்துள்ளன.

## கோபுரம்

மதிலின் கிழக்குப் புறம் வாயிலும் கோபுரமும் அமைந்து உள்ளன. இக் கோபுரம் சாலை வடிவில் அமைந்துள்ளது. இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. விரிசில்

ஏற்பட்ட இக்கோபுரம் கீழே விழாமல் தடுப்பதற்காகக் கி.பி.1942ல் கருங்கற்களாலான முட்டுச் சுவர் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக் கோபுரம், சுதை செங்கற்கள், ஆகியவற்றாலானது. இதிலுள்ள சுதை உருவங்கள் கலைச் சிறப்பு மிக்கவை.

இருபுறமும் சுதையிலான துவார பாலகர்கள் நிற்கின்றனர். ஒரு கையால் தர்ஜினி முத்திரைகாட்டி, மறுகையில் கதை வைத்துக் கொண்டிருக்கின்றனர். சுற்றித் தேவ கணங்கள் கூட்டமாக இருக்கின்றனர். எல்லாமே சுதையிலானவை. மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றன.

இக் கோபுரத்தைத் தாங்கும் வாயில் புறமுள்ள இரு செவ்வகத் தூண்களிலும் சிறிய, மிக அழகான கொடிப் பெண்கள் இரண்டு பக்கமும் பக்கத்திற்கு ஒருவராக நம்மை வரவேற்கின்றனர்.

இவ்வாயிலுக்கு எதிரே கி.பி.9-10ம் நூற்றாண்டை சார்ந்த நந்தி சிற்பம் ஒன்று படுத்த நிலையிலுள்ளது. மிக இயற்கையாகக் காட்சியளிக்கும் முற்கால சோழர் அமைப்பை ஒத்துள்ளது. இதன் முகம் உடைக்கப்பட்டு உள்ளது. இந்நந்தி சிறு அறைக்குள் அமர்ந்து, உள்ளே இருக்கும் சிவனை நோக்கிய நிலையில் உள்ளது. இதற்குப் பின்னால் கொடிக்கம்ப மேடையும், பலிபீடமும் அமைந்துள்ளன. கொடிக்கம்ப மேடை கம்பம் எதுமின்றி வெறுங்குழியுடன் காட்சியளிக்கிறது.

### கொடிப் பெண்கள்

மிக அழகாக காட்சியளிக்கும் கொடிப் பெண்கள் வாயிலின் இருபுற செவ்வகத்தூண்களில் காட்சியளிக்கின்றனர். தலைமுடியைத் தூக்கிக் கொண்டையாக

அணிந்து கொண்டு காதுகளில் குதம்பை ஆபரணத்தை அணிந்து கொண்டு, ஒரு காலை ஊன்றி, மறுகாலைத் தூணில் சாய்த்துக் கொண்டு புன்முறுவலுடன் காட்சியளிக்கின்றனர்.

கோபுரத்தின் பக்கத்திலுள்ள கல்வெட்டுகள் சில தலைகீழாகவும், மற்றக் கல்வெட்டுகள் தொடர்பின்றித் துண்டுக் கல்வெட்டுகளாகவும் உள்ளன.

கோபுரத்தின் உள் பகுதியில் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு உள்ளதால், இக்கோபுரம் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலோ சிறிது முன்னரோ முன்பு கட்டப்பட்டிருக்க வேண்டும். இக்கோபுரம் மூன்றாம் குலோத்துங்கச் சோழர் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம்.

சிம்மத் தூண்

இங்கு உள்ள சிம்மத் தூண்கள் இரண்டும் முற்கால சோழர், பல்லவர், காலங்களை நினைவுறுத்துகின்றன. இவை பிற்காலத்தில் இங்கு சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். வாயைத் திறந்து கொண்டு சிங்கம் நிமிந்து அமர்ந்து கொண்டிருக்க அதன் தலைமீது தூண் அமைந்துள்ளது. பத்மம் போன்ற அமைப்பு தூணின் மேல் அரைக்கோள வடிவில் கவிழ்க்கப்பட்ட நிலையிலுள்ளது. இது கி.பி.9-10ம் நூற்றாண்டைச் சார்ந்தது. கீழப்பழுவூரிலும், மாமல்லபுரத்திலு முள்ள சிம்மத் தூண்களைப் போன்றுள்ளது. இதைக் கடந்தவுடன் மகாமண்டபம் அமைந்துள்ளது.

மகா மண்டபம்

இம் மகா மண்டபம் 34 தூண்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு தூணும் நான்கு மீட்டர் உயரம் உள்ளவை. தூண்களின் அமைப்பு சோழர் காலத்தை நினைவுறுத்துகிறது.

மடைப்பள்ளி

இம்மடைப்பள்ளி (சமையல் அறை) நுழைவாயிலை அடுத்து வலது பக்கத்தில் குலோத்துங்க சோழனின் பட்டப் பெயர்களில் ஒன்றான விசையராசேந்திரன் பெயரில் அமைந்தது. விஜயராசேந்திரன் என்பது மூன்றாம் குலோத்துங்க சோழனின் பட்டப் பெயராகும் என்பது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்துறை இயக்குநரின் கருத்தாகும். இதற்கு வேறு சான்றுகளும் உள்ளன. விபரம் கல்வெட்டுப் பகுதியில் காண்க. இம்மடைப்பள்ளியைக் குருகாடு கிழான் அக்கிவளவந் பல்லவரையன் மண்டைப் பிள்ளை விசையராயனின் மனைவி பெருங்கருணையாளி ஆன சுவாமிக்குப் பிழையாதாள் என்பவள் எடுப்பித்தாள் *(க.ஆ.அ.99/1906)*. இம்மடைப்பள்ளியின் எதிரே பரிவார ஆலயத்திற்குச் செல்லும் வாயில் இடிந்து தூண்கள் கீழே விழுந்திருப்பதால் இவ்வாயில் அடைக்கப்பட்டுள்ளது. இம்மடைப்பள்ளியின் வாயிலில் உள்ள தூண்களில் கொடிப் பெண்கள் நின்று வரவேற்கின்றனர். உள்ளே வறண்ட கிணறு ஒன்று உள்ளது. இம்மடைப்பள்ளிக்கு எதிரே ஒரு சிறு அறை உள்ளது. இதை இங்குள்ள மக்கள் சுரங்க அறை என்கின்றனர்.

நவக்கிரகம் - திசைகள்

| | |
|---|---|
| சூரியன் - கிழக்கு | வெள்ளி - தென்கிழக்கு |
| சந்திரன் - கிழக்கு | சனி - மேற்கு |
| செவ்வாய் - தெற்கு | ராகு - வடமேற்கு |
| புதன் - வடக்கு | கேது - தென் மேற்கு |
| வியாழன் - வடகிழக்கு | |

இந்நவக்கிரகச் சிற்பங்கள் தமக்கு உரிய திசையில் திரும்பி உள்ளன.

நிருத்த மண்டபம்

இந்த நிருத்த மண்டபம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் கட்டப்பட்டது. இந்நிருத்த மண்டபம் இனிதாகக் கட்டி நிறைவேற இக்கோயில் தேவரடியாரின் தம்பி ஆட்கொண்டான் தன் தலையைத் தானே அரிந்துகொண்டு உயிர் விட்டான். இவனுக்கு வீரக்கல் ஒன்றும் உள்ளது. எனவே இந்நிருத்தமண்டபம் கோப்பெருஞ்சிங்கன் ஆட்சி காலத்தில் கட்டப்பட்டதாகும்.

மகாமண்டபத்திற்கும், நிருத்த மண்டபத்திற்கும் இடையிலுள்ள விதானப் பகுதி விஜய நகர ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

விதானம்

இவ்விதானப் பகுதி விஜயநகர ஆட்சிக் காலத்தில், விஜயநகர மன்னர் வீரநரசிங்க ராயர் ஆட்சி செய்து கொண்டிருந்த போது, இவரது சிற்றரசன் இராமய சோழன் என்பவனால் கட்டப்பட்டது. அதில் உள்ள கல்வெட்டு வருமாறு,

> ''பொத்திய சோழ மகாராசன் குமரன்
> இராமய சோழன் தன்மம்''

எனப் பொறித்து, விஜய நகர சின்னங்களும் செதுக்கப் பெற்றுள்ளன. எனவே இவ்விதானப் பகுதியும், மகாமண்டபத்திலுள்ள இரு பெரிய துவார பாலகர்களும் விஜய நகர காலத்தை சேர்ந்தவை.

துவார பாலர்கள்

மூன்று மீட்டர் உயரமுள்ள இத்துவார பாலகர்கள் வாயிலின் (முன் மண்டபம்) முன் நின்றுகொண்டு காவல் புரிகின்றனர். ஒரு (இடது) காலை ஊன்றிய நிலையிலும்,

(வலது) மறுகாலைத் தூக்கிய நிலையிலும் வைத்துள்ளனர். தலையில் கிரீட மகுடம், காதில் பத்ர குண்டலம், கழுத்தில் கழுத்தாரமும், முத்தாரமும் உள்ளன. வலது முன்கை "கொன்று விடுவேன்" (எதிரிகளை - துஷ்டர்களை) என ஒரு விரல் காட்டிய தர்சனி முத்திரையிலும் வலது பின்கை மழுவை ஏந்தியும் உள்ளது. இடது முன்கை தூக்கிய காலை ஒட்டியுள்ள கதையின் மீதும், இடது பின்கை பாசக் கயிறு வைத்துக் கொண்டுமுள்ளது. மற்றொரு துவார பாலகரின் பின்னிரு கைகளில் மழுவுக்குப் பதில் சக்திப் படையும், பாசக் கயிறுக்குப் பதில் பாம்பும் உள்ளன. இத்துவாரபாலர்கள் அருகே கணபதியும் நாகராசனும் உள்ளனர். இடப் புறத்திலுள்ள துவார பாலகரின் அருகே எல்லார் கண்ணையும், கருத்தையும் கவரும் சிற்பமான மேலைச் சாளுக்கியரின் கலைப்படைப்பான மகிஷாசுரமர்த்தினியின் சிற்பம் அமைந்துள்ளது.

### மகிஷாசுர மர்த்தினி

ஜம்பையின் குறிப்பிடத்தக்க கலைச் சிறப்பு மிக்க சிற்பங்களில் இதுவும் ஒன்று. முதலாம் இராசேந்திரனின்



முதல் மைந்தன், மேலைச் சாளுக்கியர்களான கல்யாணிச் சாளுக்கியர்களை வெற்றிக்கொண்டு போரின் நினைவுச் சின்னமாக அங்கிருந்து பல கலைச் சிறப்பு மிக்க சிற்பங்களை எடுத்து வந்தான். கங்கை கொண்ட சோழபுரத்தில் இவன் கொண்டு வந்த சூரியபீடம் இப்போது நவக்கிரகமாக மக்களால் வழிபடப்படுகிறது. தஞ்சைக் கலைக் கூடத்தில் கல்வெட்டுடன் கூடிய கலைச் சிறப்பு மிக்க துவாரபாலர் சிலை உள்ளது. அதில் இம்மன்னன் கல்யாணபுரம் எறிந்து அதனைக் கொண்டு வந்ததாகக் கல்வெட்டு உள்ளது. ***(Gangaikonda Cholapuram - Dr. R. Nagasamy, p.59)***

இதுபோன்று வெற்றிச்சின்னமாகக் கொண்டுவந்த மகிஷாசுரமர்த்தினியின் சிற்பம் ஒன்று ஜம்பை ஜம்புநாதர் கோயிலிலும் உள்ளது.

தலையில் கரண்ட மகுடம், பின்னால் ஒளிவட்டம் காதில் குண்டலம், கழுத்தில் கழுத்தாரம், மார்பில் கச்சை இல்லை. மார்பினூடே பூணூல் செல்கிறது. போரிடும் (மகிஷாசுரனுடன்) போது நழுவாமல் இருக்க, இடுப்பில் கத்தையாக துணி இறுக்கமாக அணிந்துள்ளது. எட்டுக் கைகளுடன், முகத்தில் சற்றுக் கோபத்துடன் காட்சியளிக்கிறது. முதுகில் இருபுறமும் அம்புக் கூடுகள் உள்ளன. வலது முதல் கை அம்பை உருவிய நிலையிலும், இரண்டாம் கை சுழலும் சக்கரத்துடனும், மூன்றாம் கை ஏந்திய வாளுடனும், நான்காம் கை நீண்ட சூலத்தைப் பிடித்து மகிஷாசுரனின் முதுகில் பாதி உள்ளே குத்திய நிலையிலும், இடது முதல் கையில் சங்கும், இரண்டாம் கையில் வில்லும், மூன்றாம் கையில் கேடயமும், நான்காம் கை மகிஷாசுரனின் எருமைத் தலையைத் திருப்பி நாக்கை வெளியே இழுத்துப் பிடித்த நிலையிலும் உள்ளன. ஒவ்வொரு முன் கையிலும் சூடகமும் (வளை) மேல் கையில் வாகுவளையும் உள்ளன.

மகிஷாசுரன் பயந்த நிலையில் கோபத்துடன் தேவியைமேல் நோக்கி நிலையில் உற்று நோக்கிய வண்ணம் காலைமடக்கி ஊன்றி, ஒரு கையில் கேடயத்தைப் பிடித்துக் கொண்டு மறுகையில் கத்தியை ஊன்றி எழ முடியாமல் இருக்கிறான். துர்க்கை தனது வலது காலை மகிஷாசுரனின் மடக்கிய கால் மீது அழுத்தமாக ஊன்றி, இடது காலைத் தொடை வரை மடக்கி, வலக்கையால் சூலத்தைப் பிடித்துக் குத்துகிறாள், இடக்கையால் மகிஷாசுரனின் நாக்கை விரலுக்குமேல் பிடித்து இழுக்கிறாள். துர்க்கையின் வாகனமான சிங்கமும், முன்னங்கால்களைத் தூக்கிய நிலையில் உள்ளது. இச்சிற்பம் கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

திருச்சுற்று மண்டபம்

கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகள் அனைத்தையும் சுற்றித் திருச்சுற்று மாளிகை அமைக்கப்பட்டுள்ளது. அதில் பரிவார ஆலயங்கள் இடம் பெற்றுள்ளன. திருச்சுற்று மாளிகையின் வடக்குப் புறத்தில் 14 தூண்களும், தெற்குப் புறத்தில் 14 தூண்களும், பரிவார ஆலயங்கள் இருக்கும் மேற்கு பகுதியில் 10 தூண்களும் உள்ளன. மேற்குப் பகுதியிலுள்ள தூண்களில் நான்கில் ‘பதும தேவன்’ எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. மற்ற இரண்டு தூண்களில் தனியாண்டை, பட்டாண்டை எனும் பெயர்கள் காணப்படுகின்றன.

இப்பதுமதேவன் மூன்றாம் இராசராசன் காலத்தில் இப்பகுதியின் சிற்றரசனாக இருந்து ஆட்சி செய்தவன். மூன்றாம் இராசராசனின் 28ம் ஆட்சியாண்டில் இப்பதும தேவராசன், நல்லூர் என்னும் சிற்றூரைத் திருத்தான்

தோன்றியாற்குத் தேவதானமாக வழங்கியுள்ளான். (க.ஆ.அ.72/1906) மேலும் விபரம் நடுகல் பகுதியில் காண்க. மற்ற இருவரும், இங்குள்ள மற்றொரு கல்வெட்டிலும் குறிக்கப்படுகின்றனர்.

> ''இப்புவனாபதி நாச்சியாரை எழுந்தருளுவித்த தேவ அடியாரில் பட்டயாண்டைமகன் கடைப்பிடி அழகியான்'' (க.ஆ.அ.432/1938)

என்பதே அக்கல்வெட்டு.

இவள் செப்புத் திருமேனி ஒன்றைச் செய்து கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. மூன்றாம் இராராசனின் சிற்றரசனின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதால் இத்திருச்சுற்று மண்டபம் மூன்றாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

### பரிவார ஆலயங்கள்

இங்கு மொத்தம் 12 ஆலயங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று வெற்று ஆலயமாகக் காட்சி அளிக்கிறது. வடக்கிலிருந்து தெற்காகக் காண்போம்.

### பார்வதி

இச்சிற்பம் சிதைந்து போன காசி விசுவநாதர் கோயிலிலிருந்து இங்கு கொணர்ந்து வைக்கப்பட்டுள்ளது. கரண்ட மகுடம், கழுத்தில் ஆபரணங்கள்; பின்னிரு கரங்களில் நீலோற்பல மலர்கள் இருக்கின்றன. முன் வலது கை அபயம் கொடுத்துக் கொண்டும் முன் இடது கை வரம் அளித்துக் கொண்டும் உள்ளன. கால் இறுதி வரை ஆடை அணிந்து கொண்டு கம்பீரமாக நிற்கிறது. மார்பு கச்சை அணியவில்லை. விஜயநகர காலத்தைச் சார்ந்தது.

மூதேவி (ஜேஷ்டா)



நிமிர்ந்து அமர்ந்த நிலையிலுள்ள மூதேவியின் உருவம் பெரிய அளவிலானது. காக்கைக் கொடி மேலே பறக்கிறது. கரண்ட மகுடம், பத்ரகுண்டலம், கச்சு இல்லை மார்பிடை பூணூல், வலது கையில் மலர், இடக்கையை தொடை மீது வைத்துள்ளது. ஆடை முழங்காலுக்குப் பாதி வரை உள்ளது. அருகில் துணையாக நந்தியும் ஒரு பெண்ணும் உள்ளனர். இச் ஜேஷ்டா தேவிக்குப் பராந்தகர் இரண்டு நொந்தா விளக்குகள் கொடுத்தாக அகிலாண்ட ஈசுவரி அம்மன் கருவறையின் தெற்கில் தரையில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. இச் சிற்பம் கி.பி.9-10ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அடுத்து உள்ள இரண்டு பரிவார ஆலயங்களில் ஆவுடையாருடன் லிங்கம் உள்ளே இருக்க வெளியே முகம் உடைக்கப்பட்ட நந்திகள் உதிரியாக இருக்கின்றன. இந்நந்திகள் கி.பி.9-10 நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும்.

முருகன், வள்ளி, தெய்வானை

இம் மூன்று சிற்பங்களும் நின்ற நிலையிலுள்ளன. கிரீட மகுடம், பின் வலது கை வச்சிர ஆயுதத்தையும், முன் வலது கை அபயம் அளித்துக் கொண்டும், பின் இடது கை சக்திப் படை ஏந்தியும், முன் இடது கை வரம் அளித்துக் கொண்டும் உள்ளன. கழுத்தில் ஆரம், மார்பில் வீர சன்னம். காதில்

குண்டலம். இடையில் மெல்லிய ஆடை,. இவரை ஒட்டி மயில்வாகனம், பாம்பை வாயில் கவ்விக் கொண்டுள்ளது. வள்ளியும் தெய்வானையும் கரண்ட மகுடத்துடனும், ஒரு கையில் மலர் மொட்டை ஏந்தியும் மறுகையை லோலஹஸ்தமாகத் தொங்க விட்டும் இருக்கின்றனர். வள்ளி மார்புக் கச்சை அணிந்துள்ளாள்.

பக்கத்துப் பரிவார ஆலயத்தில் முருகன் மட்டும் உள்ளது. அதற்குப் பக்கத்தில் வெற்று ஆலயம், முன்னால் ஒரு உதிரி நந்தி. இதன் அருகில்தான் விஷ்ணு, சீதேவி, பூதேவி சிற்பங்கள் உள்ளன. இவை உதிரிகளாகச் சாத்தி வைக்கப்பட்டுள்ளன.

விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி

விஷ்ணு நடுவில் நிற்க ஸ்ரீதேவி வலது பக்கத்திலும், பூதேவி இடது பக்கத்திலும் உள்ளனர். விஷ்ணுவிற்குக் கிரீட மகுடம், காதில் சிறிய குண்டலம் கழுத்தில் ஆபரணமும், முத்தாரமும் உள்ளன. வயிற்றில் உதரபந்தம், மார்பில் புரிநூல், வலது பின்கை பிரயோக சக்கரத்தை ஏந்தியும், வலது முன் கை அபயம் அளித்துக் கொண்டும்; இடது பின்கை சங்கேந்தியும், இடது முன்கை கடிஹஸ்தம் என்னும் முறையிலும் உள்ளன. இடையிலுள்ள மெல்லிய ஆடை கால் இறுதி வரை உள்ளது.

ஸ்ரீதேவி கச்சை அணிந்து கொண்டு ஒரு கையில் மலர் ஏந்தியும், மற்றொரு கை லோல ஹஸ்தம் என்னும் முறையில் வைத்தும் காணப்படுகிறாள். கழுத்தில் ஆரம், இடையில் உடை கால் இறுதி வரை அணிந்து உள்ளது. பூதேவிக்கு கச்சை இல்லை. கி.பி.11ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

## இடம்புரி விநாயகர்

இது அடுத்துள்ள பரிவார ஆலயமாகும். அகண்ட காது; லேசாகச் சுருட்டிய தும்பிக்கை; முன்கையில் தின் பண்டமும், பின் கையில் ஆயுதமும் உள்ளன. கி.பி.13ம் நூற்றாண்டு.

## வலம்புரி விநாயகர்

இவ்விநாயகரின் தும்பிக்கை இடம் சுருட்டாமல், வலப்புறமாகச் சுருட்டியுள்ளது. இது கஸ்தூரி அம்மன் கோயிலில் சப்தமாதர் தொகுதியில் உள்ளது போன்றே உள்ளது. கி.பி.10 நூற்றாண்டு. அந்தக் குழுவிற்கு உரியதாகலாம்.

மூதேவி சிற்பத்திற்கு அருகே கேட்பாரற்றுத் தனியாக ஒரு பைரவர் சிற்பம் உள்ளது. இதன் தோற்றம் மேலைச் சாளுக்கிய பாணியாக உள்ளது.

## கருவறை - விமானம்

ஜம்புநாதர் கோயிலின் கருவறை விமானம் சோழர்களின் கட்டிடக்கலைச் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. உபபீடம் தரையில் மறைக்கப் பட்டுள்ளது. அதிட்டானப் பகுதி, பட்டிகை. குமுதம், கண்டம், பட்டியாக உள்ளன. இந்நான்கு பகுதிகளிலும் கல்வெட்டுகள் உள்ளன. அதிட்டானத்தின் மேல் சுவர்ப் பகுதியில் கோஷ்ட தெய்வங்கள் உள்ளன. அரைத்தூண்கள் உள்ளன. தூணின் மேல் பகுதியில் சதுரம் போன்ற பலகை உள்ளது. பிரஸ்தரம் என்னும் கூரைப் பகுதி. இப்பிரஸ்தரப் பகுதி வரை கல்லால் ஆனது(கற்றளி). இதன் மேல் சுதையாலும், செங்கற்களாலும் கட்டப்பட்ட விமானம் அமைந்துள்ளது.

இவ்விமானம் இரண்டு தளம் கொண்டது. கிரீவப்பகுதியில் வடக்கே பிரம்மாவும். மேற்கே திருமாலும். தெற்கே சிவனும். சுதையால் நன்கு செய்யப்பட்டிருக்கின்றனர். மற்றுமுள்ள தேவகணங்களின் சுதை வேலைப்பாடுகள் மிகவும் அழகானவை. மேலே நாகர சிகரம் அமைந்துள்ளது. அதன்மேலே ஸ்தூபி அமைந்துள்ளது.

சுவர்ப் (பித்தி) பகுதிகளில் கல்வெட்டுகள் இருக்கின்றன. கருவறையில் மூன்று தேவ கோட்டங்கள் உள்ளன.

வடக்கே பிரம்மாவும். தெற்கே தட்சிணாமூர்த்தியும் மேற்கே லிங்கோத்பவரும் உள்ளனர்.

பிரம்மா

இச் சிற்பம் நின்ற நிலையிலுள்ளது. பிரம்மாவின் நான்கு முகங்களில் மூன்று வெளியே தெரிகின்றன. கீரிட மகுடம், பின்னிரு கரங்களில் அட்சமாலையும் கமண்டலமும் உள்ளன. முன் வலது கரம் அபயம் அளித்துக் கொண்டும் முன் இடது கரம் ஊரு ஹஸ்தம் என்னும் வகையிலும் அமைந்துள்ளது. மார்பில் முப்புரிநூல், வயிற்றில் உதர பந்தம். இடையிலுள்ள ஆடை கால் வரை உள்ளது. கனத்த ஆடை, இடையில் முடியிட்டுக் கட்டப்பட்டுள்ளது. கி.பி.13ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

லிங்கோத்பவர்

இஃது மேற்குத் தேவ கோட்டத்தில் அமைந்துள்ளது. அருட்பெருஞ்சோதியாய்க் காட்சியளிக்கும் அண்ணல் லிங்கத்தினின்று வெளிப்படுகிறார். உலகு எங்கும் ஒரு

காலத்தில் சிறப்பு பெற்றிருந்த ஆண்குறி - லிங்க வழிபாட்டினை இந்த லிங்கம் நினைவுபடுத்துகிறது. சிவனின் முடியைத் தேடி பிரம்மா அன்னப் பறவை உருக் கொண்டு மேலே பறக்க, கீழே திருமால் வராக அவதாரம் எடுத்து சிவனின் அடியைக் காணப் பூமியைத் துளைத்துச் செல்கிறார். லிங்கத்திலுள்ள சிவன் கீரிட மகுடம், அபயம், ஊருஹஸ்தத்துடன் காட்சியளிக்கிறார். இதன் அமைப்பு கி.பி.14-15ம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.


### ஆலமர் செல்வன்

தட்சிணாமூர்த்தி தெற்குக் கருவறை தேவ கோட்டத்தில் அமைந்துள்ளார். விரிசடை. ஆலமரத் தடியில் நிமிர்ந்து அமர்ந்த நிலை. வலது காலை மடக்கி பூதத்தின் மீது மிதித்துள்ளார். வலது பின்கை அரவத்தையும், முன்கை அபயம் அளித்துக்கொண்டும், இடது பின்கையில் அக்னி, முன் கையில் கபாலமும் உள்ளன. கழுத்தில் ஆபரணம், முப்புரிநூல், வயிற்றில் உதரபந்தம், இடையில் கனமாகக் கட்டிய ஆடை. கீழே முனிவர்கள் சிவனை நோக்கித் தவம் செய்கின்றனர். காலம் கி.பி.13ம் நூற்றாண்டு.

### அர்த்த மண்டபம்

அர்த்த மண்டபத்திலுள்ள தேவ கோட்டங்களில் வடக்கே விஷ்ணு துர்க்கையும். தெற்கே விநாயகரும் உள்ளனர்.

விஷ்ணு துர்க்கை



கம்பீரமாக நின்ற நிலை; கால்கள் மெலிந்து பல்லவ கலையிலிருந்து சோழர் சிற்பக் கலைக்குப் பரிணமிக்கும் (புதிய மாற்றம்), காலம், தலையில் கரண்ட மகுடம், காதில் குண்டலம், கழுத்தில் ஆரம், மணியாகக் கோர்க்கப்பட்டுள்ளது. மார்பில் கச்சை முடியிட்டு, அதன் முடிச்சின் எஞ்சிய பகுதி வயிற்றில் தொங்குகிறது. மேல் தொடை வரை உடுத்திய உடை. நீண்டு மெலிந்த கால்கள்; காலில் பாடகமும், நூபுரமும் உள்ளன. பின் வலக்கை சக்கரத்தையும், முன் வலக்கை அபயம் அளித்துக் கொண்டும், பின் இடக்கை சங்கும், முன் கை ஊருஹஸ்தம் என்ற வகையிலும் அமைந்துள்ளன. மேல் கையில் வாகுவளையும், கீழ்க்கையில் சூடகவளையும் அணிந்துள்ளது. இதன் காலம் கி.பி.9-10ம் நூற்றாண்டு.

வடக்கே விஷ்ணு துர்க்கைக்கு எதிரே சண்டிகேசுவர் கோயில் உள்ளது.

சண்டிகேசுவரர்

நிமிர்ந்து அமர்ந்த நிலை. வட்டமான விரிசடை. காதில் பத்ர குண்டலம். கழுத்தில் ஆரம். மார்பில் முப்புரி நூல், வயிற்றில் உதர பந்தம். இடையில் தொடை வரை ஆடை. ஒரு காலைத் தொங்கவிட்டுக் கொண்டு, மறுகாலைப்

பீடத்தின் மீது வைத்து அமர்ந்தநிலை; வலக்கையில் மழுவும், இடக்கை தொடைமீதும் உள்ளன. காலம் கி.பி.10-11ம் நூற்றாண்டு.

அர்த்த மண்டபத்தின் வெளியே வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கு ஒன்றாக இரு துவாரபாலர்கள் நிற்கின்றனர்.

துவார பாலர்

நின்றநிலை, கீரிட மகுடம், பின்னால் கற்றையான முடி, காதில் குண்டலம், கழுத்தில் ஆரங்கள், தடித்த முப்புரிநூல், மெல்லிய உதரபந்தம், இடையில் தொடை வரைமெல்லிய ஆடை, வலக்காலைத் தூக்கிய நிலையிலும், இடக்காலை வலுவாக ஊன்றியுமுள்ளனர். வலக்கை தர்சினி முத்திரையிலும், இடக்கை கதையின் மீதும் உள்ளன. இதன் காலம் கி.பி.9-10ம் நூற்றாண்டு.

கருவறை - அர்த்த மண்டபத்தின் காலம்

கருவறையிலும், அர்த்த மண்டபத்திலும் உள்ள பழமையான கல்வெட்டுகள் முதல் இராசராசனின் கல்வெட்டுகளாகும். ஆனால் அக்கல்வெட்டுகளில் கோயிலுக்குத் தானம் கொடுத்த செய்திகள்தாம் உள்ளன. இக்கோயிலை எடுப்பித்ததாக கல்வெட்டு இல்லை.

பராந்தகன் காலத்துக் கல்வெட்டுகள் 13, கோபுரத்திலும் தரையிலும் துண்டுக் கல்வெட்டுகளாகச் சிதறிக் கிடக்கின்றன. அக்கல்வெட்டுகள் வாளையூர் திருத்தான்தோன்றியாற்குத் தானம் கொடுத்ததைப் பற்றிக் கூறுகின்றன. மூன்றாம் கிருஷ்ணன் கல்வெட்டும் வாளையூர் வீதிவிடங்கற்கு நொந்தா விளக்கு தானம் கொடுத்ததைப் பற்றிக் கூறுகிறது.

பராந்தகன் காலத்தில் இப்போது உள்ள அர்த்த மண்டபமே கருவறையாக இருந்திருக்கவேண்டும். காரணம் இப்போது உள்ள அர்த்த மண்டபத்தை அண்ணாந்து பார்த்தால் மேலே விதானத்தில் கோண வட்டமும் சதுர வட்டமும் உள்ளன. தரையில் லிங்கம் இருந்ததற்கான குழியும் உள்ளது. முதலாம் இராசராசன் காலத்திற்கு முன்னாலும், பராந்தகன் காலத்திற்கு பின்னாலும் இப்போதுள்ள கருவறை கட்டப்பட்டிருக்கவேண்டும். இப்போதுள்ள அர்த்த மண்டபமே பழைய கருவறையாகும்.

பராந்தகன் காலத்தில் இக்கோயில் கற்றளியாகக் கட்டப்பட்டிருக்கவேண்டும். அர்த்த மண்டபத்திற்கும் முன் மண்டபத்திற்கும் இடையில் சாந்தாரம் அமைந்துள்ளது. வலப்புறத்திலுள்ள வாயில் அடைக்கப்பட்டுள்ளது. இவ்வாயில் பரிவார ஆலயத்திற்குச் செல்கிறது. இடப்பக்கத்திலுள்ள பகுதி பிற்காலத்தில், முதலாம் விருபக்ஷனான விருப்பண்ண உடையார் காலத்தில் ஓர் அறையாகத் தடுக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்பகுதியில் விருப்பண்ண உடையார் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு திருத்தூது விண்ணப்பித்தலைப் பற்றிக் கூறுகிறது. சாந்தாரப் பகுதியை அடுத்து முன் மண்டபம் அமைந்துள்ளது.

முன் மண்டபம்

இம் முன் மண்டபம் 16 தூண்களைக் கொண்டது. சோழர்கள் கலைப்பாணியில் உள்ளது. தூண்கள் கால், கூடம், பெரிய பலகை என்ற அமைப்பிலுள்ளன. இதிலுள்ள தேவ கோட்டங்கள் வெற்றுக்கோட்டங்களாக உள்ளன. இதில் சோழர், பாண்டியர், விஜயநகரர் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள கல்வெட்டுகளில் மிகப் பழமையானது முதலாம் இராசேந்திரனின் 3ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். மேலும் இராசேந்திரனின் முழு மெய்க்கீர்த்தியுடன் இங்கு மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் இராசாதிராசனின் முழுக் கீர்த்தியுடன் தொடங்கும் கல்வெட்டும் உள்ளது.

எனவே இம் முன் மண்டபம் இராசேந்திரன் காலத்திற்கும் முற்பட்டது என அறியலாம்.

## செப்புத் திருமேனிகள்


இங்குள்ள செப்புத் திருமேனிகள் ஏதும் வழிபாட்டில் இல்லை. திருவிழாவின் போது அவ்வப்போது எடுத்துப் பயன்படுத்தப்படுகின்றன. இங்குள்ள செப்புத் திருமேனிகள் சில சோழர் காலத்தையும், சில விஜய நகர - நாயக்கர் காலத்தையும், சில தற்காலத்தையும் சார்ந்தவையாகும்.

## சோழர் காலச் செப்புத் திருமேனிகள்

### நடராசரும் சிவகாம சுந்தரியும்

ஆடவல்லான் ஆனந்த தாண்டவம் ஆடுகிறார். உயரம் நான்கு அடி, சிவகாமிசுந்தரியின் உயரம் 3¼அடி. ஒரு காலைத் தூக்கி, வலக்காலைக் கீழே படுத்துக் கடத்தை ரசித்துக் கொண்டிருக்கும் முயலகன் மீது ஊன்றி ஆடுகிறார். வேகமாக ஆடும்போது சடை விரி சடையாகிறது. விரி சடையில் கங்கை காட்சியளிக்கிறாள். வலது பின்கையில் உடுக்கை உள்ளது. இடது பின் கையில் அக்னி உள்ளது. இடது முன் கை கஜஹஸ்த வகையில் நீண்டுள்ளது. கழுத்தில் ஆரம், கையில் வாகுவளை, காலில் நூபுரம், சிலம்பு உள்ளன. சுற்றிலும் சுவாலைப் பிரபை உள்ளது. இதைச் சாந்தமாக பார்க்கும் வகையில் சிவகாம சுந்தரியும் உள்ளாள்.

கரண்ட மகுடம், கழுத்தில் ஆரம், வலக்கை அபயம் அளித்துக் கொண்டு, இடக்கை லோலஹஸ்தம் என்னும் வகையிலுள்ளது. கி.பி.12-13ம் நூற்றாண்டைச் சார்ந்தது.



சம்பந்தர்

உயரம் 1¾ அடி, வட்ட முகம், தொங்கிய காது, கழுத்தில் ஆரம், தூக்கிய கரங்களில் இரண்டு தாளங்கள். இடையில் அரைஞாண் கயிறு. வேறு ஆடை இல்லை. காலில் நூபுரம், சிலம்பு, பீடத்தில் நின்ற நிலையிலுள்ளது. இதன் காலம் கி.பி.11-12ம் நூற்றாண்டு.

நின்றநிலை விநாயகர்

கரண்ட மகுடம், அகன்றகாது, ஏகதந்தம், தின்பண்டத்தைப் பற்றும் நீண்ட தும்பிக்கை. வலது பின் கையில் மழு. முன் கை தந்தத்தைப் பற்றியுள்ளது. இடது

பின்கையில் சங்கு; உதரபந்தம், புரிநூல். மார்பில் ஆபரணம். பெருத்த வயிறு; பத்ம பீடத்தில் நின்றுள்ளது. கி.பி.11-12ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## இரு தனி அம்மன்கள்

இடப்பக்கம் உள்ள தனி அம்மன் 13ம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நீண்ட கரண்ட மகுடம், கழுத்தில் ஆரம், மேலாடை இல்லை, இடையில் மெல்லிய ஆடை கால் வரை உள்ளது. வலக்கை மலர் ஏந்தி உள்ளது. இடக்கை லோலஸ்த வகையிலுள்ளது. தேவரடியார் மகள் ஒருத்தி, புவனாபதி நாச்சியார் செப்புத் திருமேனியைச் செய்வித்தாகக் கல்வெட்டு கூறுகிறது. அத்திருமேனி இதுவாக இருக்கலாம்.

மற்றொரு தனி அம்மன் 16ம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதுவும் அதே அமைப்புடன் உள்ளது. ஆனால் ஆடை, மற்ற ஆபரணங்கள் 16ம் நூற்றாண்டு அமைதியில் உள்ளன. இரண்டும் தலா இரண்டு அடி உயரம் உள்ளவை.

## விஜயநகர, நாயக்கர் காலச் செப்புத் திருமேனிகள்

### மாணிக்கவாசகர்

நின்ற நிலை, தாழ்ந்தகாது, கழுத்தில் கைகளில் உருத்திராட்ச மாலை, இடையில் சற்றுத் தடித்த ஆடை. பத்ம பீடத்தில் நின்றுள்ளார். மார்பில் புரிநூல். வலது கையில் அக்க மாலையை உருட்டுகிறார். இடக்கையில் ஏடு (ஓலைச்சுவடி) உள்ளது. அச்சுவடியில் நமசிவாய என்னும் சொல் 14-15ம் நூற்றாண்டின் எழுத்தமைதியில் உள்ளது. எனவே இத்திருமேனி 14-15ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சோமாஸ்கந்தர் - சிவன்



சோமாஸ்கந்தர் தொகுதியில் சிவன் மட்டும் உள்ளார். பத்ர பீடத்தின் மீது உள்ள பத்ம பீடத்தில் அமர்ந்துள்ளார். கீரிட மகுடம், காதில் பத்ர குண்டலம். கழுத்தில் ஆரம், முப்புரிநூல், கயிற்றில் உதரபந்தம். நான்கு கைகளில் இடது பின் கையில் மான், முன் கை வரத ஹஸ்தம், வலது முன் கை அபயம் அளித்துக் கொண்டும், பின்கை மழுவை ஏந்திக்கொண்டும் உள்ளன. இது. கி.பி.15ம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 2¼ அடி.

கிராதார்ச்சுனர்



திரிபங்க நிலையில் இத்திருமேனி அமைந்துள்ளது. கழுத்தில் ஆபரணங்கள், கையில் ஏதோ (வில்) ஒன்றைப் பிடித்திருப்பது போல் காட்சியளிக்கிறார். முகத்தில் தொங்கு மீசை உள்ளது. எனவே இது கிராதார்ச்சுனனராக இருக்கலாம். இடையில் கட்டிய ஆடை, வேடர்க்கு உரிய ஆடை போல் தோற்றமளிக்கிறது. இது கி.பி.15-16ம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 2¾அடி.

## அம்மைச்சாரும் காளியும்

2அடி உயரத்தில் நின்ற நிலையிலுள்ள காளி ஒன்றும், அன்னையர் இருவரும் (அம்மைச்சாரு) உள்ளனர். அன்னையர் இருவருள் ஒருவர் அமர்ந்துள்ளார். மற்றவர் நின்றுள்ளார். உயரம் 1 அடி, தலைக்குப் பின்னால் சுவாலை, பின்னிரு கைகளில் பாசமும், சூலமும், முன்னிரு கரங்களில் சூலமும் கபாலமும் உள்ளன. இதன் காலம் முறையே கி.பி.12-13, 15-16 நூற்றாண்டாகும்.

## ரிஷபாந்திகரும் தேவியும்

நின்ற நிலையில் சிவன் உள்ளார். அருகில் உமை நிற்கிறாள். சிவன் பின்னிரு கரங்களில் மான் மழுவும், முன் கரங்களில் வலக்கை அபயமும், இடக்கை எதன் மீதோ (ரிஷபம்) வைப்பது போன்றுமுள்ளது. கீரிட மகுடம். உமை கரண்ட மகுடத்துடன் காட்டப்பட்டுள்ளார். ஒரு கையில் மலரும், மறுகை லோலஹஸ்தத்திலும் உள்ளன. இதன் அருகில் தனி அம்மன் நின்ற நிலையிலுள்ளது. உயரம் 1½அடி; உமை 1¼அடி; சந்திரசேகரர் 1½ அடி இவர்கள் பக்கத்தில் ஆயுத புருஷர் இருவர், (சூலம்). 1½ அடியில் ஒன்றும் 1அடியில் மற்றொன்றுமாக உள்ளனர். இவை கி.பி.15-16ம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

## பிற்கால - தற்காலச் செப்புத் திருமேனிகள்

### முருகன், வள்ளி, தெய்வானை

முருகனின் உயரம் 2அடி, கரண்ட மகுடம். மயில் மீது அமர்ந்துள்ளார். பின்னிரு கரங்களில் சக்திப் படையும், வச்சிரப்படையும் உள்ளன. முன்னிரு கரங்கள் அபயமும்

வரதமும் காட்டுகின்றன. மயில் அரவத்தைப் பற்றியுள்ளது. அருகிலுள்ள வள்ளியும் தெய்வானையும் நின்ற நிலையிலுள்ளனர். உயரம் தலா 1அடி. கரண்ட மகுடம். வலக்கை வரம் அளித்துக் கொண்டும், இடக்கையில் மலர் பிடித்துக் கொண்டும் நிற்கின்றனர். கி.பி.16-17ம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

## சண்டி, சந்திரசேகரர், உமை

சண்டிகேசுவரர் நின்றநிலையில் இரு கரமும் குவித்து அஞ்சலி நிலையிலுள்ளார். இடையில் மழுவைச் செருகி மார்பில் சாய்த்து வைத்துள்ளார். உயரம் 2அடி. பக்கத்தில் சந்திரசேரர் நிற்கிறார். அருகில் உமை நிற்கின்றாள். இம் மூன்றின் அமைப்பும் பிற்காலத்தவை. சந்திரசேகரர் உயரம் 2½அடி, உமை உயரம் 2¼அடி. இவை கி.பி.18ம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

## சுக்கிரவாரத்தம்மன்

18-19ம் நூற்றாண்டைச் சார்ந்த தேவியின் உருவமிது. வலக்காலைத் தொங்க விட்டுக் கொண்டு, இடக்காலை மடித்து அமர்ந்த நிலையில் உள்ளது. இதைச் சூழ்ந்து பிரபை அமைந்துள்ளது. கரண்ட மகுடம், கைகளில் சூலம், உடுக்கை, கத்தி, கபாலம் வைத்துள்ளது. மார்புக் கச்சை உள்ளது. இதன் உயரம் 1½ அடி.

மேற்கூறிய செப்புத் திருமேனிகள் அனைத்தும் தினசரி வழிபாட்டில் இல்லை. திருவிழாவின்போது மட்டும் பயன் படுத்தப்படுகின்றன.

## பிற திருமேனிகள்

ஜம்பைக் குன்றின் அடிவாரத்திலும், சமவெளிப் பகுதிகளிலும், நத்தக் கொல்லையிலும் இவ்வூரிலுள்ள மக்களால் முன்பு கண்டு எடுக்கப்பட்டு இவ்வூர் சபையிடம் வைத்திருந்த மூன்று செப்புத் திருமேனிகள் இருப்பதறிந்து ஆய்வு செய்யப்பட்டது. அவை வருமாறு:

1. ஆலிலைக்கிருஷ்ணன். 2. தவழ்ந்து வரும் பால கிருஷ்ணன்(பெரியது). 3. தவழ்ந்து வரும் பால கிருஷ்ணன் (சிறியது)

## ஆலிலைக் கிருஷ்ணன்

இச்செப்புத் திருமேனி கலைச் சிறப்பு மிகுந்தது. ஆலிலையின் மீது படுத்து இருக்கும் பாலகிருஷ்ணன். மல்லாந்து படுத்துக்கொண்டு மிக அழகாகக் காட்சி அளிக்கிறார். தலையில் சுருண்ட முடி, தலையின் நடுவே நெற்றி ஆபரணம். நீண்ட காதில் குண்டலம். கழுத்தில் ஆபரணங்கள். மல்லாந்து படுத்துக்கொண்டு, வலது கையால் வலது தொடையைத் தூக்கிக்கொண்டு, இடது கையால் வளைத்த அந்த வலது காலின் கணுக்காலைப் பிடித்துப் பெருவிரலை வாயருகே கொண்டு செல்ல முயல்கிறார். வாயும் வலது காலின் பாதத்தைப் பதம் பார்க்க வாயையும் தலையையும் தூக்கிக் கொண்டு முயற்சி செய்கிறார். இடது காலைத் தான் மேற்கொண்ட செயலுக்கு ஏற்ப சிறிது மடக்கியுள்ளார். மேற் கையில் வாகுபந்தமும் முன்கையில் சூடகமும் உள்ளன. இடையில் அரைஞாண் கயிறும், மணியும் உள்ளன. ஒட்டியாணம் உரிய இடத்தில் இல்லாமல் வலப்புறத்தில் ஒதுங்கியுள்ளது. காலில் பாடகமும்,

நூபுரமும் உள்ளன. இது மிகவும் அற்புதமான செப்புத்திருமேனி. இதன் காலம் கி.பி.12ம் நூற்றாண்டு.



தவழ்ந்து வரும் பாலகிருஷ்ணன் :
(இரண்டு செப்புத் திருமேனிகள்)

மண்டியிட்டுத் தவழ்ந்து வரும் நிலை. வலது காலைத் தரையில் மடித்து ஊன்றி, இடது காலை முட்டியிட்டு, இடது கையைத் தரையில் ஊன்றி, வலது கையில் ஆள்காட்டி விரலுக்கும், கட்டைவிரலுக்கும் இடையில் வெண்ணெய்

வைத்துக் கொண்டு வாயருகே வைத்துக் கொள்ளக் கையைத் தூக்கிய நிலையில் தவழ்ந்து வருகிறார்.



தலைமுடி நன்றாகப் பின்னப்பட்டு, மடித்துப் பெரிய வட்டமாகத் தூக்கிவைத்துக் கட்டிய கொண்டை; காதுகளில் குண்டலங்கள், நீண்ட விழி, கூரிய மூக்கு, புன்முறுவலித்த மெல்லிய வதனம், கழுத்தில் முத்தாரம், இடையில் மணிகளால் கோர்க்கப்பட்ட அரைஞாண். வலது முன்கையில் சூடகம், மேலே கடகம், வாகுவளை, வாகுபந்தம், தூக்கிய வலது கையில் வெண்ணெய் உண்ணும் பாணி; கால்களில் நூபுரம், பாடகம், உள்ளன. தவழ்ந்துவரும் இக்காட்சி மிகவும் அழகாக உள்ளது. இரு திருமேனிகளும் அளவு தவிர, ஒரே வடிவமைப்பில் உள்ளன. இவற்றின் காலம் கி.பி.14-15ம் நூற்றாண்டு.


அகிலாண்ட ஈசுவரி அம்மன் கோயில்

இக்கோயில் ஜம்புநாதர் கோயிலின் பக்கத்திலேயே கிழக்கு மேற்காக அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு முன்னே

நந்திக்கென்று சிறு மண்டபமும் உள்ளது. இதில் கல்லான சிறு நந்தி உள்ளது; நான்கு வரிசையில் 10 கல் தூண்கள் விதானமின்றி நிற்கின்றன. ஏதோ மண்டபம் கட்ட இவைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கலாம். இடது பக்கம் முதல் வரிசையில் ஒன்றும், இரண்டாம் வரிசையில் நான்கு கல்தூண்களும் உள்ளன. வலப்பக்கத்தில் மூன்றும் இரண்டுமாக இரண்டு வரிசைகள் உள்ளன. இவற்றின் எதிரே பைரவர்க்கென்று தனிக்கோயில் உள்ளது. அகிலாண்ட ஈசுவரி அம்மன் கோயில், மகாமண்டபம், முன் மண்டபம், அர்த்த மண்டபம், சாந்தாரம், கருவறை என்ற அமைப்பிலுள்ளது.

## பைரவர் கோயில்

அம்மன் கோயிலுக்கு எதிரேயுள்ள பைரவர்க்கு என அமைந்துள்ள தனிக் கோயிலாகும் இது. சிறு அறைக்குள், அமைதியாக நின்று கொண்டிருக்கிறார். நிர்வாண நிலையில் நின்று கொண்டிருக்கும் பைரவர் தலையில் விரிசடை, காதில் குண்டலம், கழுத்தில் ஆரம் முன் வலக்கையில் நீண்ட சூலம் தாங்கியுள்ளார். முன் இடது கையில் கபாலமும், பின் கையில் உடுக்கையும் வைத்துக் கொண்டிருக்கிறார். முப்புரி நூலுக்குப் பதிலாகக் கபால மாலை (மண்டையோடு) அணிந்திருக்கிறார். இடையில் அரைஞாண் உள்ளது. இது கி.பி.11ம் நூற்றாண்டைச் சார்ந்தது.



கருவறை

அகிலாண்ட ஈசுவரி கோயிலின் கருவறையில் தேவ கோஷ்டங்கள் ஏதுமில்லை. ஆனால் அதிட்டானப் பகுதியிலுள்ள மேல் கண்டப் பகுதியில் புடைப்பு இராமாயணச் சிற்பங்கள் வடிக்கப்பட்டு உள்ளன. சிலவற்றில் பாதியாக உள்ளன. இச்சிற்பங்கள் முற்றுப் பெறவில்லை. விமானம், கீழே உபபீடம், பட்டிகை, குமுதம், கண்டம், பட்டி, பித்தி என்ற அமைப்பிலும், மேலே சுவர் கால், குடம், பலகை, பிரஸ்தரம், கிரீவம், கலசம் என்ற வகையிலும் அமைந்துள்ளது. பிரஸ்தரம் வரை கற்றளியாகவும், மேலே விமானம் சுதையாலும், செங்கற்களாலும் ஆனது. விமானத்தில் சுதைச் சிற்பங்கள் ஏதுமில்லை. விமானம் இரு தளமாகவும், நாகர சிகர வடிவிலும் உள்ளது. இனி அதிட்டானக் கண்டப் பகுதியிலுள்ள இராமாயணச் சிற்பங்களை ஆய்வோம். சில சிற்பங்கள் தொடங்கியும், சில முடிவு பெறாமலும் உள்ளன. முழுமையாக இரண்டு சிற்பங்கள் உள்ளன.

வாலி சுக்கிரீவன் சண்டை


ஒன்றில், வானர அண்ணன் தம்பிகளான வாலியும் சுக்கிரீவனும் ஆட்சியுரிமைக்காகப் போரிடுகின்றனர். இராமன் மறைந்து நின்று கொண்டு வாலிமீது அம்பு எய்யத் தயராக இருக்கிறார்.

சீதையும் அனுமனும்


மற்றொரு சிற்பம், சீதை அசோக வனத்தின் சோக உருவாக உட்கார்ந்திருக்கிறாள். அருகில் அரக்கிகள் தூங்குகின்றனர். அனுமன், தான் இராமனின் தூதுவன் எனக் கூறுவது போல் அடக்கமாக நிற்கிறார்.

இவை இரண்டும் கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

வாலி சுக்கிரீவன் சண்டை



சீதையும் அனுமனும்



கருவறையை அடுத்துச் சாந்தாரப் பகுதி அமைந்துள்ளது. விமானத்திலிருந்து இடிவிழுந்த சிதைவு ஏற்பட்டதைத் தடுக்கச் சாந்தாரத்தில் ஒரு பெரிய கட்டையை முட்டுக் கொடுத்து நிற்க வைத்திருக்கின்றனர். கருவறையில் அகிலாண்ட ஈசுவரி அம்மன் வீற்றிருக்கிறாள்.

## அகிலாண்ட ஈசுவரி

கரண்ட மகுடம், பின்னிரு கரங்களில் மலர்கள் வைத்துக் கொண்டும், முன்னிரு கரங்களில் அபயம், வரம் அளித்துக் கொண்டும் இருக்கிறாள். அமைப்பு கி.பி.11ம் நூற்றாண்டு.

## அர்த்த மண்டபம்

அர்த்த மண்டபத்தில் இரண்டு துவார பாலகிகள் நின்று காவல் செய்கின்றனர். இந்த அர்த்த மண்டபத்தின் உள்ளே இரண்டு தூண்கள் உள்ளன.

## காலம்

கருவறையிலும், அர்த்த மண்டபத்திலும் உள்ள கல்வெட்டுகளில் வீரராசேந்திரனின் கல்வெட்டுப் பழமையானதாகும். இங்கு முதலாம், மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டும், விஜயநகரர் தம் கல்வெட்டுகளும் உள்ளன. எனவே கருவறையும் அர்த்த மண்டபமும், வீரராசேந்திரன் காலத்திற்கும் முற்பட்டதாகும். அருகில் பராந்தகனின் துண்டுக் கல்வெட்டுத் தரையில் கிடக்கிறது.

## முன் மண்டபம்

முன் மண்டபத்தில் 6 தூண்கள் உள்ளன. தூணில் விஷ்ணுவின் மத்ச, கூர்ம அவதாரங்கள் சிற்பமாக உள்ளன.

இங்குக் கல்வெட்டுகள் ஏதும் இல்லை. இம்மண்டபம் விஜயநகர காலத்தைச் சார்ந்தது.

### மகா மண்டபம்

மகா மண்டபத்தின் வாயிலில் இரண்டு விஜயநகர யாளித் தூண்கள் நிற்கின்றன. இவை திருச்சி ஸ்ரீரங்கம் 1000 கால் மண்டபத்தில் உள்ள தூண்களைப் போலுள்ளன. யாளியின் மீதுள்ள வீரன் முழு கால் சட்டை (full pant) அணிந்து மொகலாய உடையில் காட்சியளிக்கின்றான். தூணில் வலப்பக்கத்தில் கீழே விநாயகர், மேலே சிவன் அமர்ந்துள்ளனர். இடப்பக்கத்திலுள்ள தூணில் கீழே ஒரு பக்தை இரு கரங்களைத் தூக்கிக் கும்பிடுகிறாள். மேலே முருகன் காட்சியளிக்கிறார். மகாமண்டபத்தில் பிற்கால நந்தி ஒன்று உள்ளது. இம்மகா மண்டபமும் விஜய நகர காலத்தைச் சார்ந்தது.

## பிற கோயில்கள்

### காசி விசுவநாதர் கோயில்

இக் கோயில் ஜம்பைக்கு வடக்கே அமைந்துள்ளது. இதுவும் சோழர் காலத்துக் கற்றளியாகும். கருவறையும், அர்த்த மண்டபமும் சிதையாமல் உள்ளன. முன் மண்டபமும், மகா மண்டபமும் சிதைந்து, தூண்கள் கீழே விழுந்து உள்ளன. இதிலுள்ள தூண்கள் சோழர் அமைப்பை உடையவையாகும். கருவறையிலுள்ள லிங்கமும், ஆவுடையாரும் நல்ல நிலையில் உள்ளன. ஆவுடையார் மூன்று அடி உயரத்திலும், லிங்கம் அதன் மீது மூன்று அடி உயரத்திலுமாக மிகப் பெரிய அளவிலுள்ளது. கருவறையில் கோபுரம் இல்லை. அர்த்த மண்டபத்தில் சில தூண்கள் விழுந்து சிதைந்து உள்ளன. முட்செடிகள் சூழ்ந்துள்ளன.

மகா மண்டபம் இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமாய் இருக்கிறது. பக்கத்தில் தூண்கள் சிதறிக் கிடக்கின்றன. இம்மகா மண்டபத்தின் முன்னே 10ம் நூற்றாண்டு நந்தி முக்கால் பாகம் தரையில் புதைந்து கிடக்கின்றது.

காசி விசுவநாதர் கோயிலுக்குப் பக்கத்திலேயே வற்றிய குளம் ஒன்றுள்ளது. இதன் பக்கத்திலுள்ள காம கோட்டம் சிதைந்துள்ளது. இங்குள்ள பார்வதி - (காசி விசாலாட்சி) கற்சிலை இப்போது ஜம்புநாதர் கோயில் பிரகார ஆலயத்திலுள்ளது. இக்காமகோட்டத்தின் அருகில் தூர்ந்த கிணறு ஒன்றுள்ளது. இக் கோயிலில் கல்வெட்டுகள் ஏதுமில்லை. இருந்தாலும் இக்கோயிலின் அமைப்பு கி.பி.11ம் நூற்றாண்டினதாகக் கருதத்தக்கதாய் உள்ளது.

## கமலநாதர் கோயில்

இக் கோயில் இருந்த இடமே தெரியாமல், வெறும் லிங்கம் மட்டும் வயலின் நடுவே காட்சியளிக்கிறது. அருகில் தாமரைக் குளம் என்னும் குளம் உள்ளது. குளம் போன்று காணப்பட்டாலும் இப்போது வயலாக மாறிவிட்டது. ஜம்பைக் குன்றின் அடிவாரத்திலுள்ளது.

## அல்லிநாதர் கோயில்

இதுவும் ஜம்பைக் குன்றின் அடிவாரத்திலுள்ளது. வயலின் நடுவே ஆவுடையாருடனும், லிங்கத்துடனும், சுற்றிலும் செங்கற்கள் சிதறிக் காட்சியளிக்கும் இக்கோயில் அல்லிநாதர் கோயில் என மக்களால் அழைக்கப்படுகிறது. ஜம்பைக் குன்றின் மலைமேலுள்ள பராந்தக சோழனின் 40ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஸ்ரீகண்டராதித்த ஆதித்த

கரத்துத் தேவர்க்குத் தென்னவன் பிரமாதிராஜன் என்பான் சிறுபனையூர் என்னும் ஊரைத் தானமாக வழங்கியுள்ள செய்தியுள்ளது. இதில் குறிப்பிடப்படும் ஸ்ரீகண்டராதித்த ஆதித்தகரம் இக்குன்றில் எங்குள்ளது என ஆராயும்போது, அது அல்லிநாதர் கோயிலாக இருக்குமோ என்ற ஐயந்தோன்றுகிறது. ஆனால் ''குன்றின் மேல் எடுப்பித்த'' எனக் கல்வெட்டு கூறுகிறது. எனவே இக்கோயில் அதனின்றும் வேறாகவும் இருக்கலாம். இக்கோயிலின் பக்கத்திலேயே சிறு பாறையில் மூன்றாம் கிருஷ்ணனின் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. அக் கல்வெட்டுகளில் நகரீசுரத்து ஆழ்வார் என்ற இறைவன் குறிப்பிடப்படுகிறார். அந்தநகரீசுரம் இக்கோயிலாக இருக்கலாம்.

பிற்காலச் சோழர் கல்வெட்டுகளில் ஏரிவலஞ்செய்த நாயனார் என்று ஒரு இறைவன் குறிக்கப்படுகிறார். இக்கோயில் பக்கத்திலேயே ஏரி ஒன்று பெரிய அளவிலுள்ளது. ஜம்புநாதர் கோயிலிலும், பக்கத்திலுள்ள தேவடியார் குப்பத்திலுமுள்ள கல்வெட்டுகளிலும் ஏரிவலஞ் செய்த நாயனாற்குத் தானம் கொடுத்ததைப் பற்றிய செய்தி உள்ளது. பராந்தகன் காலத்து நகரீசுரம், பின்னர் ஏரிவலஞ்செய்த நாயனார் கோயிலாகிப் பின்னர் அல்லிநாதர் கோயிலென வழங்கப்பெற்றிருக்கலாம்.

## கயிலைநாதர் கோயில்

ஜம்பைக்கு மேற்கே வயலின் நடுவே எல்லாப் பகுதிகளும் இடிந்து, வெறும் அதிட்டானப் பகுதியுடன், காட்சியளிக்கும் இக்கோயில் அருகில் 10ம் நூற்றாண்டைச் சார்ந்த நந்தி, தட்சிணாமூர்த்தி சிற்பங்கள் இருக்கின்றன. உதிரிகளாகக் கருவறையில் லிங்கம் ஆவுடையுடன்

காட்சியளிக்கிறது. அதிட்டானப் பட்டிகைப்பகுதியில் (ஜகதி) மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. போசளன் வீரசோமேஸ்வரன் என்பான் மூன்றாம் இராசராசனின் இறுதிக் காலத்தில் இப்பகுதியை ஆண்ட போது இக்கோயிலுக்குத் தானமாக நிலம் கொடுத்துள்ளான். எனவே இக்கோயில் கி.பி.12,13ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். இக்கோயிலிருந்து சற்று வடக்கே அழிந்துபோன சைனியம்மன் என்னும் சமணக் கோயிலுள்ளது.

## சைனியம்மன் கோயில்


இக்கோயில் முழுவதும் இடிந்து போய் வெறும் கருங்கல் தூண்களும், செங்கற்களும் குவிந்து கிடக்கின்றன. இக்கற்குவியலுக்கிடையே விஜயநகர சாளுவ நரசிம்ம ராயரின் கல்வெட்டு தலையைக் காட்டிக் கொண்டுள்ளது. அக்கல்வெட்டில் சூரப்ப நாயக்கன் இச்சைனியம்மன் எனும் சமணப் பெண்கடவுளுக்கு, நிலம் தானமாக வழங்கியுள்ள செய்தியுள்ளது.

## கஸ்தூரி அம்மன் கோயில்

ஜம்பைக்குக் கிழக்கே ஏரிக்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. தற்காலத் திருப்பணியின் போது இக்கோயிலின் வடிவத்தை முற்றிலும் மாற்றிவிட்டனர். பழைய அமைப்பு முழுவதும் மறைந்து புதிய அமைப்புடன் காட்சியளிக்கும் இக்கோயிலின் உள்ளே சிறப்பு மிக்க சப்த மாதர் தொகுதிச் சிற்பங்களும், வீரபத்ரரும், விநாயகரும் இருக்கின்றனர். நடுவிலுள்ள வைஷ்ணவியை இங்குள்ள மக்கள் கஸ்தூரி அம்மன் என வழிபடுகின்றனர்.

இந்த சப்த மாதர் தொகுதிகள் சோழர்கள் கலையைப் பளிச்செனக் காட்டுகின்றன; எல்லாச் சிற்பங்களும் வலக்

காலைத் தொங்க விட்டுக் கொண்டு, இடக்காலை மடித்து உட்கார்ந்த நிலையிலுள்ளன, எல்லாவற்றிலும் வலது முன் கை அபயத்திலும், இடது முன் கை தொடையிலும் உள்ளன.



வீரபத்திரருக்குக் கீரிட மகுடம்; பின்னிரு கரத்தில் சூலம் உள்ளது.

எல்லாச் சப்த மாதர்களும், மார்புக் கச்சை அணிந்துள்ளனர். மேற்கூறிய எல்லாச் சிற்பங்களும், கி.பி.9-10ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இக்கோயிலில் இரண்டு மராட்டியர் பாணி ஓவியங்களும் உள்ளன.

விஷ்ணு கோயில்

ஜம்பைக்கு மேற்கே, மேல் நத்தக் கொல்லையில் ஒரு விஷ்ணுகோயில் முழுவதும் அழிந்து தரைமட்டமாகியுள்ளது. ஆனால் எட்டுக்கால் மண்டபம் மட்டும் அப்படியே இருக்கிறது. இத்தூண்களுக்குச் சிறிது தொலைவு கிழக்கே கல்லாலான கொடிக் கம்பம் ஒன்றுள்ளது. இக் கொடிக் கம்பம் விஷ்ணு கோயிலை நினைவு படுத்துகிறது.

இவ்வூரில் பூமிக்குள்ளிருந்து மக்களால் கண்டெடுக்கப்பட்ட கண்ணன் செப்புத் திருமேனிகள் மூன்றும் இவ்வூரில் பழைய விஷ்ணு கோயில் ஒன்று இருந்ததற்குச் சிறந்த ஆதாரங்களாகும். இதனருகில் செங்கற்களால் கட்டப்பட்டு, சிதைவுற்றிருக்கும் பிள்ளையார் கோயில் ஒன்றுள்ளது. சற்று தூரத்தில் சிறு குன்று ஒன்று இருப்பதால், இது மலையடிப் பிள்ளையார் என மக்களால் அழைக்கப்படுகிறது.

மராட்டியர் பாணி ஓவியம்

கஸ்தூரி அம்மன் கோயிலில் உள்ள இவை 100 ஆண்டுகட்கு முற்பட்டவை. இவை இரண்டும் தனித்தனியாகச் சட்டம் போட்டு மாட்டப்பட்டிருக்கின்றன. ஒன்றில் ஆடவல்லான் நடனமாட, காலடியில் முயலகன் மேலே நோக்க, அருகில் உமை நின்று ரசிக்க, தேவர்கள் எல்லாம் கூடி ஆனந்த களிப்புடன் நிற்கின்றனர். மற்றொன்றில் விஷ்ணு நிற்க, அருகில் அவருடைய இருதேவியர்கள் நிற்கின்றனர். இதன் ஆடை அமைப்பு, ஆபரணங்கள் மராட்டிய பாணியைச் சார்ந்தவை எனக் காட்டுகின்றன.

தேரடி இரட்டை விநாயகர்

இக்கோயில் ஊருக்குள் அமைந்து மக்களால் வழிபடப்படுகிறது. இரண்டு விநாயகர்கள் உள்ளே அமர்ந்திருக்கின்றனர். வெளியே சித்தி, புத்தி எனும் விநாயகரின் மனைவிகள் நிற்கின்றனர். இதன் முன்னே 9-10ம் நூற்றாண்டைச் சார்ந்த நந்தி ஒன்று படுத்துள்ளது.

ஆற்றங்கரைப் பிள்ளையார்

பெண்ணையாற்றிற்குச் செல்லக் கிழக்கிலும், மேற்கிலும் படிக்கட்டுகள் உள்ளன. இதன் அருகில்

பிள்ளையார் கோயில்கள் இருக்கின்றன. மேற்கிலுள்ள பிள்ளையார் கோயில் முற்றிலும் அழிந்து விட்டது. இதன் பக்கத்திலுள்ள அரசமரத்தடியில் நாகராஜருடன் பிள்ளையார் அமர்ந்துள்ளார். நாகராஜர் பக்கத்தில் சூரியனின் அழகான தலை மட்டும் உள்ளது. கண்டராதித்த ஆதித்தகரத்து ஆதித்தனின் தலையாக இருக்குமோ?

## கிராமிய தெய்வங்கள்

கிராமிய தெய்வங்கள் பலவாகும், ஜம்பையின் குறிப்பிடத்தக்க சில கிராமிய தெய்வங்கள், அய்யனார், மாரியம்மன், அம்மைச்சாரு, எம்மலக்கன்னி, முனுசாமி ஆகியவைகள் ஆகும். மலைக்குன்றில் ஏழு கற்களை நட்டு வைத்து கன்னிமார் கோயில் என்றும், இரண்டு செங்கற்களை நட்டு வைத்து முனுசாமி என்றும் வழிபடுகின்றனர். மாரியம்மன், அம்மைச்சாரு, அய்யனார் ஆகியோருக்குக் கோயில்கள் உண்டு, வழிபாடுகளும், திருவிழாக்களும் இவைகளுக்கு நடைபெறுகின்றன. இதுபற்றித் திருவிழாப் பகுதியில் காண்க.

## அய்யனார் கோயில்

ஊருக்கு மேற்கில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு அருகே 12 கால் மண்டபம் உள்ளது. கோயிலின் நுழைவின் இருபுறமும் துவார பாலர்கள் நிற்கின்றனர். இத்துவார பாலர் வீரச்சன்னம் அணிந்து கொண்டு, வலதுகையால் தர்சினி முத்திரை காட்டிக் கொண்டு, இடக்கையைக் கடிகஸ்தம் என்னும் முறையில் வைத்துக்கொண்டு நிற்கின்றனர். இக்கோயில் செங்கற்களால் ஆனது. உள்ளே அய்யனாருக்கு அருகில் பூரணை புஷ்கலையுடன் மற்ற சிறு உருவங்களும் உள்ளன.

### குழலூதும் கண்ணனும், ஆய்ச்சியரும்

இதற்கு இடப்புறத்தில் ஒரு பலகைக் கல்லில் ஏழு கன்னிகள் நிற்கின்றனர். இவர்கள் வரிசையாக ஒருவர் பின் ஒருவராக, வலக்கையை உயர்த்தி இடக்கையைத் தொங்க விட்டுக் கொண்டு நிற்கின்றனர். இவர்களுக்கு முன்னால் கண்ணன் இனிமையாகக் குழல் ஊதுகின்றான். பெண்கள் கொண்டை யணிந்து கொண்டிருக்கின்றனர். முழங்காலுக்குச் சற்று மேலே வரை சேலை அணிந்திருக்கின்றனர். இச் சிற்பத்தின் அமைப்பு கி.பி.17ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அய்யனார் கோயிலுக்கு முன்னால் தெரு ஓரத்தில் செங்கற்களால் கட்டப்பட்டு சுண்ணாம்பால் பூசப்பெற்ற ஒரு குதிரை பெரிய அளவில் நிற்கின்றனது. இது அய்யனாரின் வாகனம். கோயிலுக்குச் சற்று முன்னாலேயே கருங்கற்களால் ஆன 54 குதிரைகள் கிடக்கின்றன. நான்கு யானைகளும் நிற்கின்றன.

### மாரியம்மன், அம்மைச்சாரு கோயில்

இக்கோயில் தற்காலத்தில் கட்டப்பட்டதாகும், பற்களைக் காட்டிக் கொண்டு கொடூரமாகக் காட்சியளிக்கும் அம்மைச்சாருக்குத் தனி அறையும், மண்ணால் செய்யப்பட்ட மாரியம்மனுக்குத் தனி அறையும் உள்ளன. இக்கோயிலுக்கு முன்னால், 10 நாகராஜாக்கள், இரு சிறிய விநாயகர், சிறு நந்தி, ஒரு லிங்கம் ஆகியவை பல்வேறு பகுதிகளிலிருந்து எடுத்து இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலில் ஆடி மாதத்தில் சிறப்பான திருவிழா நடைபெறும். சேரிப் பகுதியிலும் ஒரு மாரியம்மன் கோயில் உள்ளது.

உதிரிச் சிற்பங்கள்

ஜம்பையில் எங்கு எங்கு நோக்கினும் உதிரிச் சிற்பங்கள் பல சிதறிக் கிடக்கின்றன. காரணம் ஜம்பை அக்காலத்தில் கோயில் நிறைந்த பெரிய நகரமாக இருந்ததே ஆகும். மக்கள் வழிபாட்டுக்கு ஆகாமல், கேட்பாரற்றுக் கிடக்கும் உதிரிச் சிற்பங்கள் வருமாறு:

1. தெருவில் கிடக்கும் உதிரிச் சிற்பங்கள்

ஜம்பையில் முக்கியமான தெருக்கள் நான்கு ஆகும். ஜம்பைக்கு வரும் சாலை ஓரத்தில் ஒரு புளிய மரத்தடியில் உள்ள நிர்வாண நிலையிலமைந்த தீர்த்தங்கரரின் சிற்பம் பழமையானது. சாலைவழியாக உள்ளே சென்றால் இரண்டாம் தெரு முனையில் இரட்டை விநாயகர் கோயிலுக்குப் பக்கத்தில் ஓர் அம்மன் சிற்பம் புதைந்து கிடக்கிறது.

இதன் எதிரேயுள்ள அரச மரமும், வேம்பும் இணைந்திருக்கும் மரத்தடியில், விநாயகர் சிற்பம் குப்புற விழுந்த நிலையிலுள்ளது. இதன் அருகில் நாகராஜர்களின் சிற்பங்கள் உள்ளன. இதே தெருவின் இறுதியில் ஊராட்சிமன்றத்துக்கு அருகில் (எதிரே) வேப்ப மரத்தடியில், சோழர் காலத்துத் தூண் ஒன்று பலகை இல்லாமல் நிற்கிறது. இதன் அடியிலும், அருகேயும் மூன்று சிற்பங்கள் தெளிவில்லாமல் எண்ணெய் குங்குமம் பூசப்பட்டு உள்ளன.

வடக்குத் தெருவின் மத்தியில் வயலில் கிடந்த விநாயகரைத் தூக்கி வைத்து, ஒரு சிறு கோயில் போல் கருங்கற்களை வைத்து அமைத்திருக்கின்றனர். இங்கிருந்து காசி விசுவநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஒரு மண்டபத்தின் தூண்கள் தரையில் கிடக்கின்றன.

2. வயலில் கிடக்கும் உதிரிச் சிற்பங்கள்

கீழ் நத்தக் கொல்லை, மேல் நத்தக் கொல்லையில் பல உதிரிச் சிற்பங்கள் கிடைக்கின்றன. கீழ்நத்தக் கொல்லையில் இரண்டு புத்தர் சிற்பங்களும், ஒரு தீர்த்தங்கரர் சிற்பமும், மேல் நத்தக் கொல்லையில் 5 அடி உயரத்தில் புத்தர் சிலை ஒன்றும் உள்ளது. மேலும் வயலில் உழவு செய்யும்போது கிடைத்த மூன்று சிலைகள் மாரியம்மன் கோயிலில் வெளியே உள்ளன.

மேல் நத்தக் கொல்லையில் அமைந்துள்ள புத்தர் சிற்பம் 9-10ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். தலையில் குடை உள்ளது.

புத்தர் அமர்ந்த நிலையில் கால்களை மடித்து உட்கார்ந்துள்ளார். மார்பில் முப்புரிநூல் உள்ளது. புத்தரின் காதுகள் தொங்கியுள்ளன. தோளின் இருபுறத்திலும் தலா ஒருவராக நிற்கின்றனர். இதன் காலம் கி.பி.9-10ம் நூற்றாண்டாகும்.



வயலில் உழும் போது கிடைத்த மூன்று சிலைகள் 14-15ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். நடுவில் அய்யனார் வீற்றிருக்க இருபுறமும் பூரணை புஷ்கலை நிற்கின்றனர். இங்குள்ள மக்கள் அய்யனார் என்றே வழிபடுகின்றனர். ஆனால் இச்சிற்பம் ஒரு காலை தொங்கவிட்டுக் கொண்டு, மறுகாலை மடித்து உட்கார்ந்த நிலையிலுள்ளது. வலக்கையில் சூலமும், இடக்கையில் உடுக்கையும் உள்ளன. எனவே இச்சிற்பம் அய்யனராக இருக்க வாய்ப்பில்லை. அருகில் உள்ள இன்று பூரணை, புஷ்கலை என்று அழைக்கப்படும் தேவியரும், இதனோடு இணைந்தவையில்லை. தனித்தனியாக இருந்த அம்மன் சிலைகளை இணைத்து வைத்துத் தற்போது வழிபடுகின்றனர்.


### 3, கோயிலிலுள்ள உதிரிச் சிற்பங்கள்

ஜம்புநாதர் கோயிலில் நான்கும் கயிலைநாதர், காசி விசுவநாதர் கோயிலில் தலா ஒன்றும் ஆகக் கி.பி.9-10ம் நூற்றாண்டைச் சார்ந்த நந்திகள் முகம் உடைக்கப்பட்டு உள்ளன. கயிலை நாதர் கோயிலில் சிதைந்த தட்சிணாமூர்த்தி சிற்பமும் உள்ளது.

ஜம்புநாதர் கோயிலில் குறிப்பிடத்தக்க மூன்று உதிரிச் சிற்பங்கள் உள்ளன;

1. மேலைச் சாளுக்கிய பைரவர்
2. வெளிப்பிரகாரத்திலுள்ள விநாயகர்
3. மாகேஸ்வரி (சாமுண்டா)

மேலைச் சாளுக்கிய பைரவர்



பைரவர்

இப் பைரவர் சிற்பம் பரிவார ஆலயத்துள் தனியாகச் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. இதன் முக அமைப்பும், பாணியும் தமிழகப் பாணி அல்ல. மேலைச் சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது. நின்ற உருவம்; நிர்வாண உருவம், கழுத்தை அரவம் அணி செய்கிறது. இடையில் அறைஞாண் கயிறு, பின்னிரு கைகளில் சூலமும், கபாலமும் உள்ளன. கலைச்சிறப்பு மிக்க ஒன்றல்ல இது.

விநாயகர்

வெளிப் பிரகாரத்தில், பைரவர் கோயிலுக்கு அருகே தனியாக அமர்ந்திருக்கிறார் இவர். நீண்ட அகன்ற காது, கரண்ட மகுடம், வயிற்றில் உதர பந்தம், மார்பில் முப்புரிநூல், நீண்ட தும்பிக்கையை நன்றாக சுருட்டியுள்ளார். இதன் காலம் கி.பி.10ம் நூற்றாண்டு.

மகேஸ்வரி

பரிவார ஆலயத்தில் வடக்கே தனியாகக் குப்பைகள் சூழ்ந்து இச்சிற்பம் உள்ளது. இரு கால்களையும் மடித்து அமர்ந்த நிலை. பின் கையில் மழு உள்ளது. மற்றவை

தெளிவாகத் தெரியவில்லை. இதன் முக அமைப்பு கி.பி.15ம் நூற்றாண்டுக் காலத்தைச் சார்ந்ததாக உள்ளது.

மேலும் இச் ஜம்புநாதர் கோயில் சிம்மத் தூணுக்கு அருகில் சூரியனும், சந்திரனும் நிற்கின்றனர். இவை இப்போது வழிபாட்டில் இல்லை. இவை கி.பி.9ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## புடைப்புச் சிற்பங்கள்

இங்கு மூன்று புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. அவைகளில் குறிப்பிடத்தக்கது பள்ளிச் சந்தத்திற்குச் செல்லும் வழியிலுள்ள குன்றில் பாதி வடித்தும், வடிக்காததுமாய் உள்ள சமண தீர்த்தங்கரரின் உருவமாகும். இதன் உயரம் 55 செ.மீ. அதில் பீடம். 14 செ.மீ. சுருண்ட முடி, வடிந்தகாது, ஆடையில்லை, இருபாதங்களும் பக்க வாட்டில் திரும்பியுள்ளன, பத்ம பீடத்தில் நின்ற நிலையிலுள்ளது. பத்ம பீடம் கல்லில் வரையப்பட்டுள்ளது. இச்சிற்பம் தெளிவாக இல்லை.

## முருகன்

பெண்ணையாற்றின் கிழக்குப் படிக்கட்டின் ஓரத்தில் அமைந்துள்ளது இப்புடைப்புச் சிற்பம். முருகன் நின்ற நிலையிலுள்ளார். மயில் பாம்பைக் கவ்வியுள்ளது. பின்னிரு கரங்கள் சக்தியும், வஜ்ரமும் தாங்கியுள்ளன. இதன் அமைப்பு கி.பி.18ம் நூற்றாண்டினதாகும்.

## பாண்டியர் சின்னம்

தெற்கில், பெண்ணையாற்றை ஒட்டி அமைந்துள்ள வெளி மதிலில் கட்டப்பட்டுள்ள கருங்கல்லில் இரண்டு மீன்கள் எதிர் எதிராகப் பொறிக்கப்பட்டுள்ளன. இது பாண்டியர் இலச்சினையை நினைவுறுத்துகிறது.

## விஜயநகர சின்னம்

சாளுவ, அச்சுத தேவராயரின் கல்வெட்டுகள் விஜயநகரச் சின்னத்துடன் துவங்குகின்றன. சந்திரன், சூரியன், தலைகீழான குத்துவாள் ஒன்று, வராகம் ஆகியவை உள்ளன. மகா மண்டபத்தின் விதானப்பகுதியிலும் இச்சின்னங்கள் உள்ளன. இதற்குப் பக்கத்தில் உள்ள கல்வெட்டு, வீர நரசிங்கராயரின் சிற்றரசன் இராமயச் சோழன் என்பான் இப்பகுதியைத் தன்மமாகக் கட்டியதைத் தெரிவிக்கிறது.

## மூதேவி

ஜம்பை குன்றின் அடிவாரத்தில் கன்னர தேவன் கல்வெட்டுப் பாறை இருக்கும் இடத்தில் அமைந்துள்ள உதிரிச் சிற்பமாகும் இது. கீரிட மகுடம், பத்ர குண்டலம், கழுத்தில் பட்டையான ஆரம். மார்புக் கச்சு, புரிநூல், ஒற்றைத் தோள்வளை, கையில் வளையல், வலக்கரம் அல்லிமலர் ஏந்தியும் இடக்கரம் தொடைமேலும் உள்ளது. கெண்டைக்கால் பாதி வரை மடிப்புடன் கூடிய ஆடை. வலப்புறம் நந்தி தேவன். வலக்கரத்தில் மழு, சேஷ்டையின் வலப்புறம் காக்கைக் கொடி, இடப்புறம் அக்னிமாதா, மார்புக் கச்சையுடன் வலக்கையை மடக்கி இடக்கையைத் தொங்க விட்டவாறு அமர்ந்துள்ளாள். வலக்கரத்தில் மலர்; இடக்கரம் தொடைமேல், இடப்புறம் காக்கை கொடியுள்ளது.

ஆயுதபுருஷர்



# தொல்லியல் - புதைந்த அரண்மனை

ஜம்பை ஊரை ஒட்டி, வடக்கே 30 ஏக்கர் சுற்றளவில் அரண்மனை ஒன்று இருந்து அழிந்தமைக்கான தடயங்கள் உள்ளன. இப்போது அவ்விடம் வயல்களாக மாறியிருக்கின்றது. சுற்றிலும் மேல்நத்தக் கொல்லை, கீழ்நத்தக் கொல்லைகள் சூழ்ந்து உள்ளன. இவ்வயல்களில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பானை ஓடுகள், இடைக்காலப் பானை ஓடுகள், சுடுமண் காதணிகள், அம்மி, பாசி, காசு மற்றும் சுதை முகங்கள் ஆகியவை கள ஆய்வில் இந்நூலாசிரியரால் சேகரிக்கப்பட்டன,

புதைந்த அரண்மனை மேடு 2 முதல் 3 மீட்டர் உயரத்திலுள்ளது. இதற்குக் 'கோட்டைக் கரை' என்று பெயர். வட்டமாக அமைந்துள்ள இக்கோட்டைக்கரைக்குக் கீழே வட்டமான அகழி ஒன்று மூன்று மீட்டர் பள்ளத்தில் அமைந்துள்ளது. கீழ்நத்தக் கொல்லையிலும் மேல்நத்தக் கொல்லையிலும் பல சிதைந்த செங்கற்களும், சுண்ணாம்புக் காரைத்துண்டுகளும், மற்றும் பல தொல்பொருட்களும் சிதறிக் கிடைக்கின்றன. இவை அக்காலத்தில் ஒருபெரிய குடியிருப்பு இங்கிருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன. 4 முதல் 5 அடி அகலமுள்ள பெரிய அளவிலான செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்ப்பகுதிகள் சுற்றித் தென்படுகின்றன. இவற்றின் அருகே கங்கை கொண்ட சோழபுரத்தில் கிடைத்த கூரை ஓடுகளைப் போல் இங்கும் மிகுந்த அளவில் கிடைக்கின்றன.

5அடி அகலமுள்ள பெரிய சுவர் வெளியே தெரிகிறது. இங்கு உள்ள செங்கற்களை எடுத்து விற்பதைத் தன் தொழிலாகக் கொண்ட ஒருவர் இதுவரை ஒரு வண்டி ரு.10 முதல் 15 வரை விற்று இதுவரை ரு.3000 வரைக்கும் சம்பாதித்திருக்கிறார்.

மேலும் இப்பகுதியில் எழுத்துகள் பொறிக்கப்பட்ட காசுகள், மற்றும் தாம்பூலத் தட்டுகள், சிறு சிறு செப்புத் திருமேனிகள் ஆகியவற்றைக் கண்டெடுத்துள்ளனர் இவ்வூர் மக்கள். கீழ்நத்தக் கொல்லையில் மலையடிவாரத்தை ஒட்டி மூன்று அருமையான, கலைச் சிறப்புமிக்க செப்புத் திருமேனிகளை, இவ்வூர் மக்கள் எடுத்து வைத்திருந்தனர். அவற்றை இந்நூலாசிரியர் சேகரித்துத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைத்துள்ளார்.

மேலும் மலையடிவாரத்திலும், சமவெளிப் பகுதிகளிலும் இரும்பாலான 'சிட்டங்கள்' மிகுதியாக கிடைக்கின்றன. 'சிட்டங்கள்' என்பது கொல்லுப் பட்டறையில் வரும் கழிவு இரும்பாகும். இப்பகுதிகளில் இவை மிகுதியாக கிடைப்பதால், அக்காலத்தில் இப்பகுதியில் ஆயுதங்கள் செய்யும் உலைக்கூடம் அல்லது செப்புத் திருமேனிகள் செய்யும் தொழிலகம் போன்ற பட்டரை இருந்திருக்க வேண்டும். 2000 ஆண்டுகட்கு முற்பட்ட கருப்பு - சிவப்புப் பானை ஓடுகள், 'கதி' என்னும் தமிழி எழுத்துகள் பொறிக்கப் பட்ட பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. 2 கல் சுற்றளவுக்கு அழிந்த நகரின் சுவடுகள் தென்படுகின்றன.

புதைந்த அரண்மனைப் பகுதியில் இரண்டு பெரிய செங்கற்கள், மேல்நத்தக் கொல்லை பகுதியில் மேலும் இரண்டு பெரிய செங்கற்கள், அம்மிகள், அழகான சுதை முகங்கள் இரண்டு ஆகியனவும் இந்நூலாசிரியரால்

பெரிய செங்கல்லின் நீளம் - 35 செ.மீ; அகலம்-19 செ.மீ.; உயரம்-5 செ.மீ ஆகும். இச் செங்கல் கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வராய்ச்சியில் கிடைத்த செங்கற்களோடு ஒருங்கு வைத்தெண்ணத்தக்கது. அதனினும் அளவில் பெரியது.

சதுரச் செங்கல்

இச் செங்கல் சதுரமாக உள்ளது. இதன் நீளம், அகலம் 21 செ.மீ. உயரம் 4 செ.மீ. சிறிது வழவழப்பாக இது இருப்பதால், அரண்மனையின் தரையில் பாவப்பட்ட செங்கற்களாக இவை இருக்கலாம்.

செங்கற்கள்

இரண்டு செங்கற்கள் நத்தக் கொல்லையில் எடுக்கப் பட்டன. நீளம் 21 செ.மீ. அகலம் 13 செ.மீ. உயரம் 3.5 செ.மீ. இவை காலத்தால் சற்றுப் பிற்பட்டவை.

அம்மி

சிறு அம்மியிலிருந்து பெரிய அளவிலான அம்மிகள் வரை, (அவற்றில் சில கலை வேலைப்பாடுகளும் உண்டு) நத்தக் கொல்லையிலிருந்து இவ்வூர் மக்கள் சேகரித்து வைத்திருக்கின்றனர். ஒரு அம்மி தொல்லியல் துறைக்காகச் சேகரித்துக் கொடுக்கப்பட்டது.

இவ்வம்மியின் இடைப்பகுதி சற்று குழிந்து கீழே செவ்வக பீடத்துடன் உள்ளது. இதன் நீளம் 23செ.மீ. அகலம் 15 செ.மீ. கீழ் பீடத்தின் நீளம் 16 செ.மீ. அகலம் 11செ.மீ. மற்றும் ஏராளமான தொல்பொருட்கள் இங்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

கோட்டைக்கரை மேட்டில், இரண்டு கிணறுகள் தோண்டப்பட்டபோது, ஒரு பெரிய உறை கிணறு ஒன்று

அகப்பட்டதாம். மேலும் அருகே கால்வாய் போன்ற அமைப்பும் காணப்பட்டதாம். கிணறு தோண்டும் போது இவற்றைத் தகர்த்து எறிந்து விட்டார்கள். பொதுவாகக் கிணறு தோண்டும்போது பல இடங்களில் உறைகிணறு கிடைத்தாக மக்கள் கூறுகின்றனர்.

பாசி, சுடுமண் காதணி


**3** செ.மீ. விட்டமுடைய வட்டமான சுடுமண் காதணி ஒன்று கிடைத்தது. சிவப்புப் பாசி ஒன்றும் கிடைத்துள்ளது. இது கழுத்தில் அணியும் ஆபரணமாக இருக்க வேண்டும். இப்பாசியின் ஊடே சிறு துளை உள்ளது. இவை கீழ்நத்தக் கொல்லையில் கிடைத்தன.

காசு

மேல் நத்தக் கொல்லையில் உழுது கொண்டிருக்கும் போது பல செப்புக் காசுகளை இவ்வூர் மக்கள் எடுத்திருக் கின்றனர். அரேபிய எழுத்துப் பொறித்த மொகலாயர் காசு ஒன்று இந்நூலாசிரியரால் பெறப்பட்டது.

மேலும் ஒரு சோழர் காசும் கிடைத்துள்ளது.


பானை ஓடுகள்



ஜம்பையில் கிடைத்த பானை ஓடுகள் வழவழப்பாகவும், பளபளப்பாகவும் உள்ளன. கருப்பு-சிவப்புப் பானை ஓடுகள், சிவப்பு, கருப்பு மற்றும் வண்ணம் பூசிய பானை ஓடுகளும், ரோமானியப் பானை ஓடுகளும் மேற்பரப்பு ஆய்வில் கிடைக்கின்றன. ஜம்பையில் கிடைக்கும் வண்ணம் பூசப்பட்ட பானையோட்டில், டையமண்ட் வடிவில் குறுக்கும் நெடுக்குமான வளைவுக் கோடுகள் உள்ளன. ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இடைக்காலப் பானை ஓடுகளும் பல்வேறு வடிவங்களில் கிடைக்கின்றன. சிலவற்றின் கழுத்துப் பகுதிகளில் வளைவு, கோடுகள், நெளிவுகள் ஆகிய வேலைப்பாடுகளும் உள்ளன.

சுவர்கள்

கோட்டைக் கரையில் சில இடங்களில் 5 அடிக்கும் மேலான கனம் உள்ள சுவர்கள் தென்படுகின்றன. இப்பகுதியில் அகழாய்வு செய்தால் 2000 ஆண்டுப் பழமையான வாழ்விடம் ஒன்றினை அறியும் வாய்ப்பு ஏற்படும்.



# திருவிழாவும் தெருக் கூத்தும்

ஜம்பையில் திருவிழாக்கள் பல நடைபெறுகின்றன. ஜம்பையில் பல்வேறு சாதியினரும் ஒற்றுமையாகச் செயல்பட இச்சமயச் சடங்குகள் இன்றியமையாவண்ணம் உள்ளன.

சூரன் திருவிழா, அம்புகுத்தித் திருவிழா, மாரியம்மன் திருவிழா, ஆற்றுத் திருவிழா, பொங்கல் திருவிழா, தீபாவளித் திருவிழா, தீபத் திருவிழா ஆகியன குறிப்பிடத்தக்க திருவிழாக்கள் ஆகும்.

## சூரன் திருவிழா

தீபாவளித் திருநாளுக்கு மறுநாள் இத்திருவிழா ஆரம்பமாகிறது. இங்கு உள்ள முதலியார் வகுப்பினர் மட்டும், ஒவ்வொரு வீடாகப் பணம் வசூலித்து இத்திருவிழாவைச் சிறப்பாக நடத்துகின்றனர்.

இதில் கவுண்டர்கள், மற்ற சாதியினர் வசூலில் கலந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் திருவிழாவில் கலந்து கொள்வர். 9,11,17 ஆகிய ஒற்றைப் படை எண்ணில் இளைஞர்கள் இத்திருவிழாவுக்காக ஒன்பது நாட்கள் ஒருபொழுது உணவு உண்டு, மற்ற வேலைகளில் ஈடுபடாமல் எப்போதும் ஜம்புநாதர் கோவிலில் இருப்பர். பெரும்பாலும் ஒன்பது பேர்தான் நோன்பு எடுப்பார்கள். அப்போது ஜம்புநாதர் கோயிலில் காலை, மாலை, இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் பூசை நடக்கும். இரவில்

முருகன் செப்புத் திருமேனி அலங்கார விளக்குகளுடன் ஊர்வலம் வரும். ஒவ்வொரு வீட்டின் முன் நின்று கற்பூர ஆரத்தி செய்தபின், கோயில் வந்து சேரும். இவ்வாறாக ஒன்பது நாட்கள் நடைபெறும். ஒன்பதாம் நாளன்று வைக்கோலால் செய்யப்பட்ட சூரபதுமனின் உருவத்தினை ஒரு வண்டி மீது வைத்துச் சிலர் அதனை இழுத்துச் செல்வர். சூரபதுமன் முருகனை நோக்கி, கையில் அம்பு வைத்து கோரமாகப் பார்த்துக் கொண்டிருக்க, முருகன் செப்புத் திருமேனி இருக்கும் அலங்கார வண்டியை நோக்கி நாதசுரம், மத்தளம் முழங்க இழுத்துச் செல்வர். இதற்கு முன்னால், சூரபதுமனின் உருவத்தைப் பறையர்கள், பறை மேளம் அடித்துக் கொண்டும், நையாண்டி மேளம் அடித்துக் கொண்டும் கொண்டு செல்வர். சூரபதுமனுக்காகக் கள், சாராயப் பானைகளையும் சுமந்து செல்வார்கள். ஊர்வலத்தில் முருகன் வண்டியின் முன்னே நோன்பு கயிறு கட்டியிருக்கும் 9 நோன்பிகள் கைகளில் அம்பு வில் ஏந்திச் செல்வார்கள். ஊர்வலம் முடிந்தவுடன் தெருக்கூத்து ஆரம்பிக்கும்.

### தெருக்கூத்து

தெருக்கூத்து தமிழகத்தின் மிகத் தொன்மையான கலை. இத் தெருக்கூத்து “சூர சம்கார நாடகம்” என அழைக்கப்படுகிறது. கந்தபுராணத்தை அடிப்படையாக வைத்து இந்நாடகம் நடத்தப்படுகிறது.

காசிமகாரிஷிக்கும், மோகினிக்கும் சூரன், தாரகாசூரன், சிங்கமகாசூரன் ஆகியோர் பிறக்கின்றனர். அசோமுகி என்னும் தங்கையும் பிறக்கிறாள். இச்சூரன் சிவனிடம் தவம் செய்து உலகத்தையே வெல்லும் வரத்தைப் பெற்றான். தேவர்களை எல்லாம் சிறைப்பிடித்தான். யோகிகள் வந்து

சிவனிடம் முறையிட்டனர். சிவன் நெற்றிக் கண்ணைத் திறந்தார். திறந்ததும், பயந்த பார்வதி அஞ்சி ஓடினாள். இதனால் காலில் அணிந்த சிலம்புகளின் 9 மணிகள் சிதறி ஓடின. ஓடிய மணிகள் 9 பெண்களாக உருக்கொண்டு நின்றனர். சிவன் காம வயப்பட்டு அப் பெண்கள் ஒன்பது பேரையும் புணர்ந்தார். இதனால் அப்பெண்கள் கருக்கொண்டனர். அறிந்த பார்வதி கோபம் கொண்டு கரு வெளிப்படாமல் இருக்க சாபம் கொடுத்தாள். இச் சமயத்தில் யோகிகள் வந்து மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க பார்வதி தன் மைந்தன் முருகனுக்குத் துணையாக, அப்பெண்கள் ஒன்பதின்மரின் கருப்பம் வளரும் படியாகச் செய்து, பெண்கள் வயிற்றிலிருந்து செங்குந்தப் படையைக் கையில் தாங்கிக் கொண்டு பிறந்த ஒன்பது பேரையும் முருகனுடன் அனுப்பி வைக்கிறாள். தன்னுடைய சக்தி வேலையும் கையில் கொடுத்து அனுப்புகிறாள்.

ஒன்பதின்மரில் வீரவாகு என்பவன் ஒன்பது பேர்களுக்கும் தலைமையேற்று முருகன் பின் சென்று சூரன், தாரகாசூரன், சிங்கமகாசுரன் ஆகியோரைக் கொன்று, ஒரு முக்குக்கு 30000 அரக்கர்களை ஈனும் வரம் பெற்ற அசோமுகியைக் கொல்ல, சண்டை விநாயகர் வந்து, அசோமுகியின் யோனியில் தும்பிக்கையை விட்டு, கருவைப் பிடித்து அழித்து அசுரர் இனத்தை அழிக்கிறார். தேவர்கள் விடுதலை பெற்று மகிழ்ச்சி அடைகிறார்கள். செங்குந்தப் படையைத் தாங்கிப் பிறந்தவர்கள் - வீர வாகுவின் வழி வந்தவர்கள்- இந்தச் செங்குந்த முதலியார்கள் என்ற புராண அடிப்படையில், இவ்விழாவில் இத்தெருக்கூத்து இங்கு உள்ள முதலியார் இன மக்களால் நடிக்கப்படுகிறது. இங்குள்ள மக்கள் பல்வேறு வேஷங்கள் போட்டு ஆண்டு

தோறும் இத்தெருக் கூத்தை நடத்தி வருகின்றனர். தெருக்கூத்துக்குத் தேவையான உடைகள், வாசிகை போன்றவைகள் அணியூர் என்னும் ஊரில் வாடகைக்கு வாங்கப்படுகின்றன.

கூத்துமுறை

இரவு 9 மணிக்கு மேல் தெருக்கூத்துத் தொடங்குகிறது. தொடங்குவதற்கு முன், பறையர் பறை கொட்டிக் கொண்டு, ஊர் நாட்டார்களை அழைத்து வந்து முன்னே அமர வைக்கின்றனர். பெரியவர்கள் முன்னிலையில் இறை வணக்கத்துடன் தெருக்கூத்து தொடங்குகிறது.

இறை வணக்கம் முடிந்தவுடன் சபை முன்னே கட்டியங்காரன் வந்து காட்சியளிக்கிறான். கட்டியங்காரன் ஒவ்வொரு காட்சியிலும், வந்து இவர் யார், யார் என அறிமுகம் செய்து வைக்கிறார்.

இடையில் இன்பம் சேர்க்கப் பல வகை நகைச் சுவைகளைச் சபை முன்னே கூறி மக்களைச் சிரிக்க வைக்கிறான். பின்பு ஒவ்வொரு பாத்திரமாகச் சிவன், பார்வதி, முருகன், வீரபாகு, சூரபத்மன், தாரகாசூரன், சிங்கமகாசூரன், அசோமுகி ஆகியோர் வந்து காட்சியளிக்கிறார்கள். முருகன் முதலில் சிங்கமகாசூரன், தாரகாசூரன் ஆகியோரைக் கொன்று விடுகிறான். பின்னர் சூரபத்மன் தன் மனைவி பதும கோமளாவிடம் விடை பெறுகிறான். அவள் தேவர்களை விடுதலை செய்யுமாறு வேண்டுகிறாள். சூரபதுமன் கோபத்துடன் மறுத்து. முருகனைக் கொல்ல வழி அனுப்புமாறு பதுமகோமளாவிடம் கேட்கிறாள். அவளும் வெற்றிலை பாக்குக் கொடுத்து விடைதருகிறாள். முருகன் சூரபதுமனைக்கொன்று இரண்டாக பிளக்கிறான். இரண்டு துண்டுகளில் ஒன்று சேவலாகவும், மற்றது பாம்பாகவும் மாறி முருகனின் கொடியாக மாறுகின்றன. அசோமுகியைச் சண்டை விநாயகர் வந்து கொன்று விடுகிறார்.

இத் தெருக்கூத்து பல வகைகளில் விரிவாக நடத்தப்படுகிறது. இத் தெருக்கூத்தைப் பாடலாக இயற்றியவர் சேவிக்கவுண்டராவர்.

"ஆயனோடு அமரர் முனிவரெல்லாம் அண்ணனுக்கு
அடக்கடமாய் ஒடுங்கிப் போக
தூயமுடன் கிரவுஞ்ச கிரி தன்னில் துஷ்டர்களை
வசம்செய்து மடிக்கும் தீரன்
நேயமுடன் பானுகோவன் செய்த கோலம் சிந்தைநொந்து
தேவர்களும் திடுக்கிட்டு ஏங்கி
மாயநகர் அரசரெனும் தாருகேசன் மகாஉக்கிர
சாலியேனாம் தாருகேசன் வருகிறானே!"

எனத் தாருகேசன் சபைக்குத் தன்னை அறிமுகம் செய்து கொண்டே வருகிறான். இது போன்றே ஒவ்வொருவரும் தான் யார் என்பதைக் கூறிக்கொண்டு வருகின்றனர். நாரதர்





இருதிறத்தார்க்கும் கலகமுட்டுகிறார். முருகன் அசுரர்களை ஒவ்வொருவராக வீழ்த்துகிறான். இறுதியில் பதுமசூரன் வீழ்ந்தவுடன். வைக்கோலால் செய்யப்பட்ட பெரிய சூரன் உருவம் பிரிக்கப்பட்டுச் சிதறி அடிக்கப்படுகிறது. இதைக் கொண்டாடும் பொருட்டு 60 அடி கம்பம் நட்டு நோன்பு இருக்கும் நோன்பர்கள் கம்பத்தின்மீது ஏறுவர். கற்பூரம் ஏற்றி வெற்றியைக் கொண்டாடுவர்.

### 60 அடி கம்பம்

இக்கம்பம், பதுமசூரனின் முதுகெலும்பாகவும், இடையிலுள்ள சிறு கழிகள் பதுமசூரனின் முள் எலும்புகளாகவும், பதுமசூரனின் நரம்புகள் கயிறாகவும் கருதப்பட்டு நடப்படுகிறது.

### முருகன் வள்ளி திருமணம்

ஒன்பது நாட்களும் முடிந்த பின்னர் பதுமசூரன் (சூரபத்மன்) இறந்தபின்பு மறுநாள் முருகனுக்கும், வள்ளிக்கும் குருக்கள் திருமணம் நடத்தி வைக்கிறார். பறையர்களைத் தவிர எல்லாச் சாதி மக்களும் மாமன், மச்சான் போன்ற உறவு கொண்டோர்கள், முறைப் பெண்கள் ஆகியோர் நீரில் மஞ்சளும், குங்குமமும் கலந்து தங்களின் முறைக்கார மாமன், மாமன் மகன் ஆகியோர் மீது வீசுவார்கள். ஒருவர் மீது ஒருவர் (முறைக் காரர்கள்) ஊற்றிச் சூரன் இறந்தது குறித்தும், முருகன் திருமணமகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையிலும் இவ்வாறு செய்கின்றனர்.

### தெருக்கூத்தில் பறையர் நிலை

இத்தெருக்கூத்தைக் காணப் பறையர்கள் தனித்து நிற்கின்றனர். முன்பெல்லாம், ஒரு கோடு கிழித்து கோட்டுக்கு

அந்தப்புறமே பறையர் நிற்பர். ஒருவர் கையில் கோல் ஒன்று ஏந்திக் கொண்டு ஆர்வ மிகுதியால் பறையர் கோட்டைத் தாண்டி வராமல் இருக்கக் காத்து நிற்பார். இப்போது தனியிடம் மட்டும் இவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. தெருக்கூத்தில் சற்று தூரத்தில் நின்றே இவர்கள் தெருக்கூத்தைக் கண்டு ரசிக்க வேண்டும்.

## அம்புகுத்தி திருவிழா

இவ்விழா கவுண்டர்கள் சாதியினரால் நடத்தப்படுகிறது. இவ்வகுப்பைச் சார்ந்தவர்களிடம் மட்டும் பணம் வசூலித்து நடத்தப்படுகிறது. பறையர்களைத் தவிர ஏனைய சாதிகள் இத்திருவிழாவில் கலந்து கொள்ளுவர். கவுண்டர்கள் அல்லது வன்னியர் (படையாச்சி) சிவனின் நெற்றி வியர்வையிலிருந்து பிறந்ததாகவும், பிறந்த இவர்கள் வாதபி, இனாதாபி அரக்கரைக் கொன்றதாகவும் அம்மகிழ்ச்சியைக் கொண்டாட இத் திருவிழா நடத்தப்படுவ தாகவும் கூறுகிறார்கள். தீபாவளிக்கு முந்திய தினம் இது நடைபெறுகிறது. ஊருக்கு வடக்கே வாழைமரம் ஒன்றை நட்டு அதனை அரக்கனாக உருவகிக்கின்றனர். முருகன் செப்புத் திருமேனியை ஊர்வலமாக எடுத்து வந்து. வழிபட்டு, பின்னர் முருகனிடமிருந்து அம்பு பெற்றுக் கொண்டு குருக்கள் வாழை மரத்தின் அருகே வந்து அம்பு வைத்து குத்துவார். இதுவே அம்புத்திருவிழா ஆகும்.

## மாரியம்மன் திருவிழா

இத்திருவிழா ஊர் பொதுவில் நடைபெறுகிறது. ஊராரிடம் பணம் வசூலித்துச் சிறப்பாக செய்கின்றனர். வழக்கம்போல் ஆடி மாத்தில் தமிழ் நாட்டின் மற்றப் பகுதியில் நடப்பது போலவே நடைபெறுகிறது இவ்விழா.

இத் திருவிழாவின்போது ஏழை எளியோர்க்குக் கூழ் வார்க்கப்படும்.

பறையர் வாழும் சேரிப் பகுதியில் ஒரு மாரியம்மன் கோயிலுள்ளது. இங்கும் அப்போது பூசை நடக்கும். இப்பூசை செய்யத் தேவையான பணத்தைச் சேரி மக்களே வசூலித்துத் தனியாகச் செய்கின்றனர்.

### ஆற்றுத் திருவிழா

இத்திருவிழா சித்திரை மாதம் நடைபெறும். சித்திரா பௌர்ணமியன்று புதுமணத் தம்பதிகள், உறவினர்கள் மற்றும் ஊரார் அனைவரும் ஆற்றுக்குச் சென்று மகிழ்ச்சியாகப் பொழுது போக்குவர். இத் திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். பெண்ணையாற்றங்கரையில் இது நடைபெறுகிறது, அருகிலுள்ள மணலூர்ப் பேட்டையில் இத்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது, திருவண்ணாமலையிலிருந்து வரும் இறைவன் பெருமாள் பெண்ணையாற்றில் இறங்குவார். மக்கள் கூட்டம் பெருகி அவ்விறைவனை வழிபடும்.. கடைத் தெருக்கள் பல புதியதாகத் தோன்றிச் சிறியோர்க்கும் பெரியோர்க்கும் தேவையான பல்வேறு பொருட்கள் விற்கப்படுகின்றன. இக்காட்சி மதுரை சித்திரைத் திருவிழாவில் அழகர் ஆற்றில் இறங்கும் காட்சியை நினைவுறுத்துகிறது.

### பொங்கல் திருவிழா

தமிழ் நாட்டில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவான இப்பொங்கல் திருவிழா ஜம்பையிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது, வசதி படைத்தவர்கள் புத்தாடை அணிந்து கொண்டு, சூரியன் காலை உதிக்கும் நேரத்தில் சூரியனை நோக்கி, வயல்களில் புதுப்பானையில்

பொங்கல் பொங்க, கரும்பு, இஞ்சி, மஞ்சள் போன்றவை வைத்து வழிபடுவர். இத்திருவிழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மாட்டுத் திருவிழாவின் போது மாடுகளுக்கும், கொம்புகளில் வர்ணம் பூசப்பட்டு, அன்று மாடுகளுக்கு ஓய்வு தரப்படுகிறது.

## தீபத் திருவிழா

திருவண்ணாமலையில் கார்த்திகை மாதம் தீபத் திருவிழா நடக்கும் போது இரவில் தீபங்கள் ஏற்றி, வாயில்களில் பல்வேறு அகல்விளக்குகளை வரிசையாக வைத்து அத்திருவண்ணாமலைப் பரம்பொருளை வழிபடுவதாக நினைத்து இங்குள்ள மக்கள் இத்தீபத் திருவிழாவைச் செய்கின்றனர்.

இவைதவிர விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூசை, கார்த்திகை, அமாவாசை, பௌர்ணமி போன்ற நாட்களையும் இவ்வூர் மக்கள் சிறிய அளவில் கொண்டாடுகின்றனர்.

## சண்பை வரலாறு- தற்காலப்பாடல்

இச் சண்பையின் வரலாறு பற்றி ஆசிரியர் மணலூர் பேட்டை திரு. வே. வேங்கட நாராயணன் (கணேச அய்யர்) என்பவர் கீழ்கண்டவாறு பாடலாய்ப் பாடியுள்ளார்.

"சீர் ஓங்கும் மாமலையாள் தெய்வத் திருவுருவ
பார்ஓங்கு பாரதத்தின் பைந்தமிழ் நன்னாட்டில்
ஆடும் அடுபுலியும் ஓர் துறையில் நீரருந்த
பாடும் குயிலினமும் ஆடும் மயிலினமும்
நாடும் சோலைதன்னில் மலர் வண்டு ரீங்கரிக்கும்
பேடும் தலையன்னம் நாளும் நடைபயிலும்
கோதில் மடந்தையர்கள் குடமெடுத்து நீர் மொள்ளும்

போதியில் பொதிய மலை தென்றலது வீசுகின்ற
பாடரவத் தென்னரங்கப் பாம்பணையில் பள்ளி கொண்டான்
ஆடவல்லன் மைத்துனனும் அக்கரையில் அமைந்திடவே
தேன்மதுரத் தமிழ் மணக்கும் தென்பெண்ணை வடகரையில்
மேன்மேலும் அறம் வளர்க்கும் திருத்தலமாய்
வாழ்கின்ற நாடது நன்னாடு நற்சண்பை நன்னாடு
நடுநாடு தெய்வீகத் திருநாடு தரணியில்
ஆதி மனுவும் காசிபனாம் மன்னவனும்
பாதிமதி சூடும் பரமன் வழிவந்த
ஓதி உணர்ந்த ஒளிசுடர் வதுலன்
கோதிலான் எண்குணத்தோன் கோலோச்ச ஆங்கதன் பின்
சங்க கால முதல் சக காலம் ஏழு வரை
துங்கமதாய் ஆண்ட வளவன் தலைநகராய்
சம்புலிங்கக் கோயில் கட்டி சண்பையை ஆண்டவனும்
மன்னர் குலதிலகன் மணிமுடிசோழன் தன்
காலம் அதுவரையில் சோழர் தலைநகராய்
முற்கால சோழர் தம் ஆட்சிக்குப் பின் தொடங்கி
பிற்கால சோழர் தம் காவலுக்கு முன் வரையில்
பொற்காலமே இருந்தாகச் செய்திட்ட இடம்
நற்றமிழ் நாட்டில் நடுநாடு எனப் புகழ்
வளநாடதனில் வாணகப் பாடியும்
திருநாடான சண்பைத் திருநகர்
தெய்வ மணம் கமழ் திருத்தலமான
சண்பை நகர் சுயம்பு லிங்கேசர்
அடியவனாகிய புலிக்கொடிக் குடையோன்
முதல் சடை தவிர்ந்த இடைக் காலத்தில்
கரந்துறை வாழ சிறந்ததோர் இடமென
நின்றுவளர்ந்து நெறியுடன் திகழ்ந்து
பண்பார் சிறந்து பழங்குடியாகி

அரசு ஒச்சும், ஆளுகை எய்தி
வளவர் ஆட்சியின் வலிமை கண்டு
கோட்டை கொத்தளம் அகழி சூழ்ந்திட
படைக்கலத்தொடு கொடைக்கலம் கண்டு
கரந்துரை மன்னன் நிறைந்தவனாக
மற்றைய மறவோர் சுற்றத் தாரோடும்
மக்கள் வழங்கிய மணிமுடி தரித்த
மண்ணாள் வேந்தன் மணிமுடி சோழன் தன்
மகளாம் நங்கை மங்கையர்க்கரசி
நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் மாறவர்மன் அரிகேசரியெனும்
பாண்டியன் பக்கலில் பட்டத்து அரசியாய்
சைவமும் தமிழும் கைவரப் பெற்றனள்
பிற்கால. சோழர் தம் வழிவழி வந்திட்ட
தஞ்சைப் பெருங்கோயில் அமைத்திட்ட
இராஜகேஸரி இராஜராஜசோழன் தன்
ஆட்சி அமைப்பில் நாடு வளநாட்டில்
வாணகப்பாடி நாடெனப் பெயர் பெற்று மறவன் நரசிங்க வர்மனான
ராஜ ராஜ வாணகோவரையன் குறுநில மன்னன்
குன்றா வலிமையின் சோழர் தமக்குப் பலமாய் நின்று
கப்பம் கட்டும் குறுநில மன்னனாய்
செங்கோலோச்சிய சண்பை மாநகர்
அம்மை அகிலாண்ட ஈசுவரி சமையாத
சண்பை சுயம்பு ஈசனைப் பணியும்
அடியவர்க்கு அடியவன் அந்தணன் கணேசன்''